கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(07.05.2017 - 05 வைகாசி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 159, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05





ஆபிரிக்கா நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களுக்காக வேண்டுவோம். அவர்கள் இயேசுவினுடைய இரக்கத்தை பின்பற்றி இறைசாட்சிய வாழ்வு வாழவும், நியாயமான, நீதியான, அமைதியான சூழலை ஏற்படுத்த செபிப்போம்.

திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்






## மே மாதம் மாதாவின் வணக்க மாதம்

அவளை பின்பற்றினால்
வழிதவற மாட்டோம்!
அவளை மன்றாடினால்
மனங்கலங்க மாட்டோம்!
அவளை நினைத்தால்
அலைந்து திரிய மாட்டோம்!
அவளை தாங்கி நின்றால்
சறுக்கி விழ மாட்டோம்!
அவள் பாதுகாத்தால்
அச்சம் கொள்ள மாட்டோம்!
அவள் வழிகாட்டினால்
களைப்புற மாட்டோம்!
அவள் ஆதரவு பெற்றால்
துறை சேர்ப்போம்.

## "கிறிஸ்தவர்களும் புத்த மதத்தினரும் வன்முறையற்ற பாதையில் ஒருங்கிணைந்து நடக்க"

## திருப்பீட பல்சமய உரையாடல் அவை

### 2017ஆம் ஆண்டிற்காக வெளியிட்டுள்ள வெசாக் செய்தி



திருப்பீட பல்சமய உரையாடல் அவை சார்பில் வெசாக் தினத்தையொட்டி எமது அன்புக்கனிந்த வாழ்த்துக்களையும், செபம் சார்ந்த நல்லிணக்கத்தையும் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்விழாவானது உங்களுக்கும் உங்களுடைய குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும், நாடுகளுக்கும் அமைதியையும், மகிழ்வையும், கொண்டு வருவதாக.

09 »

## "வெசாக் விழா சமூகத்தின் அனைவருக்கும் அமைதியை கொண்டுவருவதாக"

### இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் வெசாக் விழாவுக்கான வாழ்த்துச் செய்தி – 2017

வெசாக் பண்டிகையானது உலகளாவிய பௌத்த மக்களின் மிகச்சிறப்பான தனித்துவமான சமய பண்டிகையாகும். வெசாக் தினத்தை கொண்டாடும் இவ்வேளையில் எமது நாட்டின் பௌத்த மத சகோதரர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.


குறிப்பாக 14வது ஐக்கிய நாடுகளின் தினமாக இந்த வெசாக் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. இலங்கை நாடானது தேரவாத பௌத்த மதத்தின் இருப்பிடமாக இருப்பதனால் இந்த உயர்ந்த நிகழ்வினை இங்கு கொண்டாடுவது சாலவும் பொருத்தமானது.

வெசாக் பண்டிகையானது அமைதியினதும், ஒளியினதும் நிகழ்வு. இந்த பண்டிகை அனைவர்க்கும் அமைதியை கொண்டுவருவதாக. வெசாக் பண்டிகையின் ஆன்மீக தாகம் எம் உலகத்திலுள்ள சமூகத்தின் அனைத்து பிரிவுகள் மத்தியிலும் ஒன்றிப்பினை கொண்டுவருவதாக. அனைத்து பௌத்த மத சகோதரர்களுக்கும் வெசாக் பண்டிகை வாழ்த்துக்கள்.

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS, தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ்
பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## இறை அழைத்தல் தினம் 07.05.2017



"உம் இதயத்திற்கு உகந்த மேய்ப்பர்களை அனுப்பியருளும்"

இத்தாலியில், புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களின் 20[வது] வருடாந்த தேசிய கிறிஸ்தவ பேரணி, பாதுவா புனித அந்தோனியார் பெசிலிக்காவில் இம்முறையும் சிறப்பாக நடைபெற்றது.

09 »

## தேசிய பொதுநிலையினர் ஞாயிறு 14.05.2017

# "கீழ்ப்படிதல் என்பது ஒருவருக்கு செவி கொடுத்தல்"

### குருத்துவ திருநிலைப்படுத்தும் திருப்பலியில் கர்தினால் ஆண்டகையின் மறையுரை

15 »

- 29.04.2017 -




"ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை" (திபா 23)

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் குருக்களுக்கான புதிய நியமனங்கள் – 2017

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் இந்நியமனங்கள் 29.04.2017 அன்று சனிக்கிழமை வழங்கப்பட்டன. இவை 15.05.2017 தொடக்கம் அமுலாகும்.

**வண. அருட்பணி. ஜூட் சமந்த பர்னாந்து அடிகள்** — **நிதிப்பொறுப்பாளர்**

**அருட்பணி. டெனின்டன் சுபசிங்ஹ அடிகள்** — **செயலாளர் – நிர்வாகம்**

## புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தையர்கள் [உதவிப்பங்குத்தந்தை]

| அருட்தந்தையர்களின் பெயர்கள் | பங்கு |
|---|---|
| 01. அருட்தந்தை. K . மேரியஸ் கிறிஸ்டியன் பீரிஸ் | கந்தவளை |
| 02. அருட்தந்தை. ஜோசப் சுராஜ் பர்னாந்து | வத்தளை |
| 03. அருட்தந்தை. P. A கிறிஷ்னக்க டிலான் பெரேரா | களமுள்ளை |
| 04. அருட்தந்தை. L. தொன் சஞ்சீவ அப்புஹாமி | கட்டுவபிட்டிய |
| 05. அருட்தந்தை. B. ஹசங்க மாலன் மெண்டிஸ் | வத்தளை |
| 06. அருட்தந்தை. டொன் ரஜித்த லியனகே | கோட்டை |
| 07. அருட்தந்தை. W. சுராஜ் கயஷான் பீரீஸ் | நாகொட |
| 08. அருட்தந்தை. W. திலுஷ சாமர பெரோ | புனித அந்தோனியார் ஆலயம், கொச்சிக்கடை |
| 09. அருட்தந்தை. J.M.D. புத்திக்க தனஞ்சய ஜயமான்ன | வெள்ளவத்தை |
| 10. அருட்தந்தை. அன்ரனி நிஷான் பூபாலராயன் | கடற்கரைத்தெரு,நீர்கொழும்பு |
| 11. அருட்தந்தை. P.A.D விக்கும் அன்டன் குமார | களனி |
| 12. அருட்தந்தை. P.A. டொன் ஜனக்க ஜயமால் | விசுவாச உயிரூட்டல் குழு |
| 13. அருட்தந்தை. W. இம்மானுவேல் ஜிப்சன் பர்னாந்து | விசுவாச உயிரூட்டல் குழு |
| 14. அருட்தந்தை. S.T. நிமேஷ் கிரிஷான் டி சில்வா | விசுவாச உயிரூட்டல் குழு |
| 15. அருட்தந்தை S.N அனுர பிரதீப் டயஸ் | இடைநிலை குருமடம்,மாதம்பை |

## உதவிப் பங்குத் தந்தையர்கள்

| | |
|---|---|
| 01. அருட்தந்தை. வசந்த பிரன்ன பர்னாந்து | கந்தானை |
| 02. அருட்தந்தை. தினுஷ் கயான் வின்சன்ட் | பன்னிப்பிட்டிய |
| 03. அருட்தந்தை. ரொஷான் சமிந்த பர்னாந்து | பெரியதெரு, நீர்கொழும்பு |
| 04. அருட்தந்தை. லலித் கிரிஷாந்த திசேரா | நாயக்ககந்தை |
| 05. அருட்தந்தை. சானக்க பிரபாத் வெலிகடாராச்சி | பிட்டிபன |
| 06. அருட்தந்தை. சமிந்து பெத்தும் | கொட்டுகொட |
| 07. அருட்தந்தை. அஜித் அப்புஹாமி | பள்ளன்சேனை |
| 08. அருட்தந்தை. சசித்த கெலும் ஜயலத் | பமுனுகம |
| 09. அருட்தந்தை. அன்டன் தினேஷ் பிரியசாத் | பொரளை |
| 10. அருட்தந்தை. நலின் குமார பர்னாந்து | பட்டகமை |
| 11. அருட்தந்தை. சமில் சமீர | போப்பிட்டிய |
| 12. அருட்தந்தை. மனோஜ் குமார் பர்னாந்து | கிரான்பாஸ் |
| 13. அருட்தந்தை. பிரசான் திலந்த பர்னாந்து | மொரட்டுவை |
| 14. அருட்தந்தை. அசங்க ஜூட் (TOR) | பாணதுரை |
| 15. அருட்தந்தை. தினேஷ் அப்புஹாமி | கிம்புலப்பிட்டிய |
| 16. அருட்தந்தை. ரவிந்திர குமார் பீரிஸ் | கொம்பனித் தெரு |

## பங்குத்தந்தையர்கள் – நியமிக்கப்பட்ட பங்குகள்

| | |
|---|---|
| 01. அருட்தந்தை. வண. அருட்தந்தை அன்டனி பர்னாந்துபுள்ளே | புனித நிக்கலஸ் பாடசாலை தலங்கமை |
| 02. அருட்தந்தை. மேர்ள் சாந்தி பெரேரா | லியனகேமுள்ள |
| 03. அருட்தந்தை. சாந்திகுமார் வெலிவிட்ட | கட்டுநாயக்க |
| 04. அருட்தந்தை. லியோ கமிலஸ் ஹெட்டியாராச்சி | சீதுவை |
| 05. அருட்தந்தை. ரொஹான் டி அல்விஸ் | பன்னிப்பிட்டிய |
| 06. அருட்தந்தை. ப்ரடி சாந்திகுமார் | கோட்டை |
| 07. அருட்தந்தை. ரூபன் லெஸ்லி சில்வா | என்டேரமுள்ளை |
| 08. அருட்தந்தை. டெரன்ஸ் போதியாபதுகே | போலவலான |
| 09. அருட்தந்தை. அன்டன் இயூமல் பெரேரா | பெரியமுள்ள, “Electro" Lab |
| 10. அருட்தந்தை. சமிந்த ரொஷான் பர்னாந்து | மத்துமகல |
| 11. அருட்தந்தை. சுஜீவ அத்துகோரல | கடற்கரைத் தெரு நீர்கொழும்பு |
| 12. அருட்தந்தை. கியோம் நோனிஸ் | புனித பேதுரு, நீர்கொழும்பு Kurusayaga |
| 13. அருட்தந்தை. சஞ்சீவ மெண்டிஸ் | வத்தளை |
| 14. அருட்தந்தை. அன்டன் பிரேமலால் | களனி |
| 15. அருட்தந்தை. கிருள் ஜயந்த சில்வா | ஹப்புகொட |
| 16. அருட்தந்தை. எர்னஸ்ட் டி மெல் | மாபோல, வத்தளை |
| 17. அருட்தந்தை. ஜூட் சுராஜ் பொன்சேக்கா | புனித யோவான், முகத்துவாரம் |
| 18. அருட்தந்தை. பிரசன்ன ரொஹான் | மிரிஸ்வத்தை |
| 19. அருட்தந்தை. இஷான் பிரமீன | சப்புகஸ்கந்த |
| 20. அருட்தந்தை. நிலந்த ஹேஷான் பர்னாந்து | வக |
| 21. அருட்தந்தை. கீதாலி ஆன்ஸ்லி | நாகோட (களுத்துரை) |
| 22. அருட்தந்தை. தேஷான் லசந்த பெரோ | மக்கோன |
| 23. அருட்தந்தை. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் | தெமட்டகொடை மற்றும் மறைகல்விப் பணியகம் (ஆங்கிலம்) |
| 24. அருட்தந்தை. ரெஜினோல்ட் லூசியன் OMI | மாளிகாவத்தை |
| 25. அருட்தந்தை. இந்திரா ரத்னசிறி | களமுள்ளை |
| 26. அருட்தந்தை. ருவன் ரீட் | ஆண்டியம்பளம |
| 27. அருட்தந்தை. ஜூட் சுரேஷ் ரங்க | தராள |
| 28. அருட்தந்தை. கயான் பிரசாந்த பெரேரா | வாத்துவ |
| 29. அருட்தந்தை. மகேஷ் கிருஷாந்த பர்னாந்து | பேருவளை |
| 30. அருட்தந்தை. நுவான் புத்திக்க | ஹொரனை |
| 31. அருட்தந்தை. மலின் சமுத்ரிக்க பர்னாந்து | திப்பட்டுகொடை |

## மறைமாவட்ட இயக்குனர்கள் மற்றும் அப்போஸ்தலிக்கப் பணிகளுக்கான துணை இயக்குனர்கள்

| | |
|---|---|
| 01. வண. அருட்தந்தை. J.D அன்டனி | இயக்குனர் விசுவாச உயிரூட்டல் குழு |
| 02. அருட்தந்தை. சிஸ்வான் டி குருஸ் | இயக்குனர், இறையியல் கல்வியகம் நீர்கொழும்பு |
| 03. அருட்தந்தை. லோரன்ஸ் ராமநாயக்க | இயக்குனர், செத்சரண |
| 04. அருட்தந்தை. இந்திரஜித் பெரேரா | இயக்குனர், இடைநிலை குருமடம், மாதம்பை |
| 05. அருட்தந்தை. கிருஷான் குமார் பெரேரா | உயர் மறைமாவட்ட - இயக்குனர் திருப்பாலத்துவ சபை |
| 06. அருட்தந்தை. கிஹான் ரிட்லி பெரேரா | நிர்வாகப் பொறுப்பாளர் கொழும்பு உயர் மறைமாவட்ட காணி, மற்றும் உறுதிப்பத்திரம் |
| 07. அருட்தந்தை. அன்டன் சமன் ஹெட்டியாராச்சி | விவிலிய அப்போஸ்தலிக்கப் பணி மற்றும் ஆசிரியர் கத்தோலிக்க மசேஞ்சர் பத்திரிகை |
| 08. அருட்தந்தை. பெசில் விக்கரமசிங்க | மறைபரப்புக் குழு, |
| 09. அருட்தந்தை. ஜோசப் இந்திக்க | திருவழிபாடு துணை இயக்குனர் கொழும்பு உயர் மறைமாவட்டம் |
| 10. அருட்தந்தை நிர்மல் மாலாக்க சில்வா | YCS துணை இயக்குனர் தங்குமிடம் : பமுனுவில |
| 11. அருட்தந்தை ஜூலியன் பெற்றிக் பெரேரா | உளவியல் மற்றும் சமூக ஆற்றுப்படுத்தல் தங்குமிடம் : KSYMA கொட்டாஞ்சேனை |
| 12. அருட்தந்தை கிளமன்ட் சஞ்சீவ சேனாநாயக்க | அங்கத்தவர் - கொழும்பு உயர் மறைமாவட்ட தோட்ட பராமரிப்பு |
| 13. அருட்தந்தை ஜூட் கிரிஸ்மன் பர்னாந்து | அங்கத்தவர் - கொழும்பு உயர் மறைமாவட்ட தோட்ட பராமரிப்பு |
| 14. அருட்தந்தை மலிந்த திவந்த களுவாராச்சி | விசுவாச உயிருட்டல் குழு |
| 15. அருட்தந்தை பிரசன்ன கிறிஸ்டோபர் | சுபோதி நிலையம் |

## கல்லூரிகள், நிலையங்கள் — நியமனம் பெற்ற இடங்கள்

| கல்லூரிகள், நிலையங்கள் | நியமனம் பெற்ற இடங்கள் |
|---|---|
| 01. அருட்தந்தை. S.A.D கிருஷாந்த குமார் | - இயக்குனர் புனித சூசையப்பர் கிளைக்கல்லூரி, நீர்கொழும்பு |
| 02. அருட்தந்தை. B அன்சலம் சிறான் | - புனித நிக்கலஸ், சர்வதேச பாடசாலை, நீர்கொழும்பு |
| 03. அருட்தந்தை. ருவான் தேசப்பிரிய | - அங்கத்தவர் : புனித சூசையப்பர் கிளைக்கல்லூரி கொழும்பு - 10 |
| 04. அருட்தந்தை ட்ரீசன் சில்வா | - அங்கத்தவர் - திருச்சிலுவை கல்லூரி களுத்துறை |
| 05. அருட்தந்தை. சிறியாந்த ரத்னசேகர | - அங்கத்தவர் - மொரட்டுவை புனித செபஸ்தியார் கல்லூரி |
| 06. அருட்தந்தை கிருஷான் ஜயசாந்த ஆனந்தன் | அங்கத்தவர் - திருச்சிலுவை கல்லூரி களுத்துறை |
| 07. அருட்தந்தை. சமித் ரங்க பர்னாந்து | - அங்கத்தவர் - கொழும்பு - 06 புனித பேதுரு கல்லூரி |
| 08. அருட்தந்தை. அன்டனி லக்ஷ்மன் | - அங்கத்தவர் - மொரட்டுவை புனித செபஸ்தியார் கல்லூரி |
| 09. அருட்தந்தை. ரொஷான் ஜனக்க பர்னாந்து | - இணைப்பாளர் ஆன்மீக செயற்பாட்டு குழு புனித பேதுரு கல்லூரி |
| 10. அருட்தந்தை சஷிக்க மனோஜ் ரொட்ரிகோ | - இணைப்பாளர் - ஆன்மீக செயற்பாட்டு குழு - புனித சூசையப்பர் கல்லூரி, மருதானை |
| 11. அருட்தந்தை. மலிந்த சத்துரங்க சந்திறசிறி | - அங்கத்தவர். BCI போலவலானை |
| 12. அருட்தந்தை. பிரதீப் குமார் நிரோஷன் பர்னாந்து | - தேசிய கல்வி நிலையம் |
| 13. அருட்தந்தை. மக்சிமஸ் ரொட்றிக்கோபுள்ளே | - ஆன்மீக இயக்குனர் புனித அலோசியஸ் சிறிய குருமடம் |
| 14. அருட்தந்தை பிரசாத் சுரங்க பர்னாந்து | அங்கத்தவர் புனித அலோசியஸ் சிறிய குருமடம் |
| 15. அருட்தந்தை மொரிஸ் நாமல் பர்னாந்து | அங்கத்தவர் - தேசிய குருமடம் |
| 16. அருட்தந்தை ஜூட் அசித்த ஹெட்டியாராச்சி | அங்கத்தவர் - தஹாம் சேவன களுத்துறை |

## கொழும்பு உயர் மறைமாவட்ட ஆன்மீகப் பணியாளர்கள்

01. அருட்தந்தை. பசில் விக்ரமசிங்க - அருட்தந்தையர்களின் முதியோர் இல்லம்
02. அருட்தந்தை. ஜூட் டெனிஸ்டன் - நோயாளர்களுக்கான ஆன்மீகப் பணி

## வதிவிடக் குருக்கள்

| | |
|---|---|
| 01. அருட்தந்தை. ஜோசப் பெனடிக் பர்னாந்து | - தங்குமிடம் : புனித லூசியா பேராலயம் |
| 02. அருட்தந்தை. அகஸ்டின் பர்னாந்துபுள்ளே | - தங்குமிடம் பம்புகுளிய, தோப்பு |
| 03. அருட்தந்தை டெரன்ஸ் பர்னாந்து | - தங்குமிடம் அடிக்கந்திய, மனற்சேனை |
| 04. லியோன் பபாபுள்ளே OMI | - தங்குமிடம் பெரியதெரு நீர்கொழும்பு |

## வெளிநாடு செல்லும் குருக்கள் /கல்வி / பணிகள் / விடுமுறை]

01. அருட்தந்தை. டிரோன் பெரேரா - ஜேர்மன்
02. அருட்தந்தை. ஜூட் அன்டனி அல்கம - ஓய்வு
03. அருட்தந்தை. சம்பத் துஷார - இத்தாலி
04. அருட்தந்தை. சுரங்க நிரோஷன் பொன்சேக்கா - இத்தாலி

**தகவல் : அருட்பணி. ஜூட் சமந்த பர்னாந்து அடிகளார்**
**செயலாளர் – நிர்வாகம்**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
07, வைகாசி 2017 ஞாயிற்றுக்கிழமை.

## "மரியன்னையைச் சார்ந்த பக்தி முயற்சிகளின் வழியாகத் தாயைப் பெருமைப்படுத்தும்போது மகனாகிய இயேசுவையே மக்கள் அன்பு செய்து மாட்சிமைப்படுத்துகின்றனர்"

கத்தோலிக்கத் திருச்சபையானது வைகாசித் திங்களை அன்னை மரியின் வணக்க மாதமாக சிறப்பித்து வருவதை நாமறிவோம். எனினும் பிற சபையினர் அன்னை மரியை ஏற்றுக்கொள்வதில்லை. அன்னை மரி சாதாரண பெண்தான். அவள் இறைவனின் தாயாக முடியாது. அன்னை மரிக்கு வேறு பிள்ளைகள் உள்ளனர். இவ்வாறெல்லாம் அன்னைமரி தூற்றப்படுகிறாள். இயேசுவின் சீடர்கள் இயேசுவிடம் "உம் தாயும், சகோதரர்களும் உம்மைப் பார்க்க விரும்பி வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள்" என்று கூற இயேசு மறுமொழியாக "இறைவாார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகிறவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவர்." என்றார். (லூாக்.8:20- 21) இவ்விடத்தில் இயேசு உறுதியாக அன்னை மரிதான் தனது தாயென கூறுவதை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும். காரணம் கபிரியேல் வானதூதரின் வழியாக வந்த இறைச்செய்தியைக் கேட்டு அதன்படி செயற்பட்டவள் தான் நமது அன்னை மரியாள். இதே அன்னை மரியைத்தான் நமதாண்டவர் இயேசு சிலுவையடியில் அருளப்பரிடம் "இதோ உன் தாய்" என்று ஒப்படைத்தார். இதோ உன் தாய் என்று இயேசுவால் நம் அனைவருக்கும் அருளப்பட்ட அன்னையின் வணக்க மாதமாகிய இந்த மாதத்தில் நாம் குடும்பமாக ஒன்றிணைந்து செபமாலையை தியானிக்க அழைக்கப்படுகின்றோம். மரியாள் என்றால் அன்புக்குரியவர் என்பதே பொருள். நம் அன்னை கடவுளுடைய அன்பிற்கும் மனிதருடைய அன்பிற்கும் உரியவளாக இருக்கின்றாள்.

பாலுக்குள் வெண்ணெய் இருப்பது போல் அன்னைக்குள் அன்பு இருக்கிறது. கனிக்குள் சுவை இருப்பது போல் அன்னைக்குள் கருணை இருக்கிறது. மலருக்குள் மணம் இருப்பது போல் அன்னைக்குள் மகிழ்ச்சி இருக்கிறது. கரும்புக்குள் இனிப்பு இருப்பது போல் அன்னைக்குள் இனிமை இருக்கிறது. சிப்பிக்குள் முத்து இருப்பது போல் அன்னைக்குள் ஏழ்மை இருக்கிறது. ஆக அன்னை மரியானவள் அன்பின், கருணையின், மகிழ்ச்சியின், இனிமையின், ஏழ்மையின் மொத்த உருவாக காணப்படுகின்றாள். எனவே நாம் தொடர்ந்து அன்னையிடம் எம் நாட்டின் சமாதானத்திற்காகவும் எம் குடும்பங்களின் சமாதானத்திற்காகவும் மன்றாடுவோம். செபமாலையானது நாம் பரலோகத்திற்கு ஏறிச் செல்லும் ஏணியாக உள்ளது. நாள்தோறும் செபமாலை தியானித்து அன்னையின் அன்பைப் பெறுவோம். "மரியன்னையைச் சார்ந்த பக்தி முயற்சிகளின் வழியாகத் தாயைப் பெருமைப்படுத்தும்போது மகனாகிய இயேசுவையே மக்கள் அன்பு செய்து மாட்சிமைப்படுத்துகின்றனர்" என்றும் திருச்சங்கம் உறுதியாக நம்புகிறது எனவே நாமும் மூவேளைச் செபம், செபமாலை, சனிக்கிழமை வணக்கம், முதல் சனிக்கிழமை வணக்கம், மே மாத வணக்கம், நவநாட்கள் என்று பலவகை வணக்க முறைகள் காணப்படுகின்றன. இவையெல்லாம் இயல்பாக மக்களிடமிருந்து தோன்றியவை இவற்றிற்கு அப்பாற்பட்டு திருச்சபையும் அதிகாரப்பூர்வமாக ஆண்டு முழுவதும் மரியன்னையின் வணக்கத்தைப் பல்வேறு பெருவிழாக்கள், நினைவுக் கொண்டாட்டங்கள் என கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது. ஆகவே உலகம் போற்றும் அன்னையாம் மரியாளுக்கு அன்பு செய்வதும், கௌரவப்படுத்துவதும், மரியாதை செலுத்துவதும், எமது கடமையும், பொறுப்புமாகும் என்பதை மனதிற்கொள்வோம்.

அத்தோடு கடந்த மாதம் 29ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் குருத்துவ அழைத்தலைப் பெற்ற அனைத்து குருக்களையும் வாழ்த்தி வரவேற்கின்றோம். இம்மாதம் 07ஆம் திகதி தேவ அழைத்தல் ஞாயிறு தினத்தில் இன்னும் அதிகமாக எங்கள் குடும்பங்களில் இருந்து தேவ அழைத்தல் பெருக வேண்டும் என்று நல்லாயன் இயேசுவிடம் மன்றாடுவோம்.

இறையாசீருடன்
ஆசிரியர்

# உலக தொழிலாளர் தினம்

## "உழைக்கும் கரங்கள் இறைவனின் உன்னதகொடை"



**'உழைத்து உண்பது என்றுமே வீணாகாது, உழைப்பிற்கேற்ப ஊதியம் பெறும் மனிதன் அதனூடாக இறைவனின் மகிமையை என்றும் நிலைநாட்ட வேண்டும்.**

வைகாசி முதலாம் திகதி உலக தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. திருத்தந்தை 12ஆம் பயஸ் 1955ஆம் ஆண்டு தொழிலாளர் தினத்தை கிறிஸ்தவ ஆன்மீகத்துடன் இணைத்துக் கொண்டாடும் பொருட்டு தன் தச்சுத் தொழிலால் திருக்குடும்பத்தைக் காப்பாற்றி வழிநடத்திய குடும்பத் தலைவர் புனித யோசேப்பை தொழிலாளர்களின் புனிதராக அறிவித்தார். அன்றிலிருந்து இன்று வரை இத்தினம் கொண்டா-டப்பட்டு வருகின்றது.

ஒரு சினிமா பாடல் அழகாக பாடுகின்றது "உழைப்பாளி இல்லாத நாடுதான் எங்குமில்லேடா" என்று. ஆம் இறைவனின் உயரிய கொடையில் மனிதன் பெற்ற சிறப்பு உழைக்கும் கரங்கள். இந்த உழைப்பாளிகளை நினைவு கூர்ந்து வைகாசி மாதம் 1ஆம் திகதி உழைப்பாளர் தினத்தை கொண்டாடுகின்றோம். மனிதன் பாவத்தில் விழுந்தபோது, இறைவன் மனிதனை வாழ்நாள் முழுவதும் உழைத்து உண்ணும் படியாக பணிக்கின்றார். இதனை வெறும் சாபமாக பார்க்காமல் இறைவனின் கொடையாக பார்ப்பது தான் சிறந்தது. மனிதன் இவ்வாறு பெற்ற வரத்தினால் இன்றளவும் இறைவனின் மகிமைக்காக தன் உழைப்பினை செலுத்தி தன் குடும்ப வாழ்வினை இறைவனுக்குகந்த வாழ்வாக மாற்றி விடுகின்றான் மனிதன்.

உழைப்பாளர்கள் என்போர் யாருமாக இருக்கலாம் தன் குடும்பத்தை காப்பவர் மட்டுமல்ல, நாட்டை, சமூகத்தை, பங்கினை நிலையான பாதையில் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபடும் ஒவ்வொரு உள்ளமும் உழைப்பாளர்தான். "உழைத்து உண்பது என்றுமே வீணாகாது, உழைப்பிற்கேற்ப ஊதியம் பெறும் மனிதன் அதனூடாக இறைவனின் மகிமையை என்றும் நிலைநாட்ட வேண்டும். எமது நாட்டில் அனைவரும் உழைப்பாளிகளே. இவர்களை சிறப்பாக நினைவு கூறும் இந்நாளில், உழைப்பாளர்களின் பாதுகாவலராக விளங்கும் தூய யோசேப்பையும் நினைவு கூர்கின்றோம். யோசேப்பு நீதியாளர், நேர்மையாளர் என்றெல்லாம் திருவிவிலியம் அவரை சுட்டிக் காட்டுகின்றது. என்றாலும் திருக்குடும்பத்தின் தலைவரான அவர் தன் மனைவி குழந்தை இயேசுவோடு இணைந்து குடும்பத்தை வழிநடத்தி, தனது உழைப்பையும் நேரத்தையும் கடவுளுக்காவும் தன் குடும்பத்திற்காகவும் கொடுத்தார். தனது தச்சுத் தொழிலை இயேசுவுக்கும் கற்றுக்கொடுத்து ஒரு சிறந்த முன்னுதாரணமான தந்தையாக திகழ்கின்றார். இறைவனின் திட்டத்தை ஏற்று கீழ்ப்படிந்து தன்னை முழுமையாக இறைசித்தத்திற்கு பணித்தார். இவ்வாறு உழைப்பாளர்களின் பாதுகாவலராக விளங்கும் தூய யோசேப்பினை நினைவு கூறும் இவ்வேளையில் அவரிடம் காணப்பட்ட பண்புகளை உழைப்பாளர்களாகிய நாம் கொண்டு வாழவும் உழைப்பதில் பெறுவதன் இன்பம் எதிலுமில்லை என்பதை உணர வேண்டும்.இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர்தானே யாக்கோபு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர்.....

15

## உண்மை உரைக்கும்

கமிலஸ்





# அன்னை மரியாள்
## நம் கலங்கரை விளக்கம்

வைகாசி மாதம் முழுவதும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தாயும், நம் ஒவ்வொருவரின் தாயுமான அன்னை மரியாளின் வணக்க மாதமாகும். அன்னைக்கென்று சிறப்புத் திருப்பலிகள், கொண்டாட்டங்கள், மண்டகப்படிகள், செப நேரங்கள் என மகிழ்ச்சியான மாதம். எல்லா தீமைகளிலிருந்தும் நம்மைக் காத்து நம் அனைவரையும் இறைவனின் தாய் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

பிறப்பு, வளர்ப்பு, திருமணம், குடும்பம், பணி வாழ்வு, துன்பம், சாவு என பல கட்டங்களாகவும், பல சவால்கள் நிறைந்ததாகவும் நம் வாழ்வு இருக்கிறது. நம்மைப் போன்ற மனிதர் எத்தனையோ பேர் இந்த வாழ்வின் இன்ப துன்பங்களையும், வந்த பல சவால்களையும், அர்த்தமுள்ள விதத்தில் சந்தித்து வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்ந்து வாழ்வில் வெற்றி கண்டிருக்கிறார்கள். இறை நம்பிக்கையுள்ள எல்லாருடைய வாழ்வுக்கும் ஒரு முன்மாதிரி அன்னை மரியாள். குறிப்பாக, வாழ்வில் கலங்கித் தவிக்கும் நம் குடும்பங்களுக்கு இறைவனின் அன்னை மரியாள் ஒரு கலங்கரை விளக்கம்!

### இறைவனுக்கு சரி சொன்ன.... (லூக் 1:26-38)

தன் மகன் ஒரு மனிதனாக மரியாளின் வழியாகப் பிறந்து இவ்வுலகை மீட்க வேண்டும் என்ற திட்டத்தை தனது தூதர் கபிரியேல் மூலம் அறிவித்து மரியாளுடன் இறைவன் ஒப்பந்தம் செய்ய விரும்புகிறார். இறைவனே ஒப்பந்தம் செய்ய வந்தாலும் அவரைக் கேள்விக்கு உட்படுத்தினார் மரியாள். எந்த ஒப்பந்தமும் உறவும் மனித சமூகத்திற்கும் வாழ்வைத் தருமென்றால், நன்மை பயக்குமென்றால், அதற்கு ஆமென் சொல்லி வாழ்ந்தவர் மரியாள். இறைவனின் மீட்புத் திட்டம் நன்மை பயக்கும் எனத் தெரிந்தபின் "ஆமென்" எனச் சொன்னார். வாழ்வை மறுக்கும் திட்டங்களுக்கும், தீமை பயக்கும் செயல்களுக்கும் நம் குடும்பங்களில் ஆமென் சொல்லி நாம் திசை தெரியாமல் தவிக்கும் போது குடும்பங்களின் கலங்கரை விளக்கம் மரியாள்.

### கணவரின் சந்தேகம் தீர்த்த.... (மத் 1:18-24)

மரியாள் கருவுற்றிருந்தபோது சூசைக்குச் சந்தேகம். இது ஒரு குடும்பப் பிரச்சினை. இறையருளால் இப்பிரச்சினை திருக்குடும்பத்தில் தீருகிறது. பொதுவாகத் திருமணமாகி வாழ்வில் வேரூன்ற புதுமணத் தம்பதிளுக்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகும் என்பார்கள். தேனிலவு முடிந்து, திருமண வாழ்வு பற்றி கண்ட கனவுகளும், கற்பனைகளும் ஓய்ந்து உண்மையில் திருமண வாழ்வின் நிஜத்தை சந்திக்கும் காலம் அது. திருமண வாழ்வின் பொறுப்பு, கடமை, இன்ப - துன்பங்களை ஓரளவுக்கு அறிந்துணர்ந்த ஆண்டுகள் அவை.

புதிய திருமணத் தம்பதிகள் வாழ்வில் நிம்மதியாக வேரூண்ட தலைக்கிறிஸ்மஸ், தாய்வீட்டில் தலைப்பிரசவம் போன்று திருமண வாழ்வுக்கு உறுதுணையான பல நிகழ்வுகளை நம் பண்பாட்டில் நம் தழிழ்ச்சமூகம் கடைப்பிடித்து வருகின்றது. இத்தொடக்கக் காலத்தில் வருகின்ற வரதட்சணைப் பிரச்சினை, பிள்ளைகளைப் பெற்று வளர்க்கின்ற போது வரும் சவால்கள் மற்றும் பிரச்சினைகளைச் சந்தித்து தீர்க்க வழிதெரியாமல் தவிக்கும் குடும்பங்களுக்கு மரியாள் ஒரு கலங்கரை விளக்கம். ஏனெனில்தொடக்கக் காலத் திருமண வாழ்வின் சவால்களைச் சந்தித்து, பிரச்சினைகளுக்கு முடிவு கண்டவர் அவர்.

### உறவுக்கு உரம் சேர்த்த... (லூக் 1:39-45)

மரியாள் கேட்ட கேள்விகளுக்கு கபிரியேல் தூதர் தகுந்த ஆதாரங்களுடன் விளக்கம் சொல்கிறார். அதில் ஒரு பகுதிதான் "உம் உறவினரான எலிசபெத்தும் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்கின்றார்" என்பது, இச்செய்தியை நம்பி ஏற்றுக்கொண்ட மரியாள் எலிசபெத்தைச் சந்தித்து அவருக்கு உதவுகிறார். இன்று உறவுக்காக, உதவிக்காக எத்தனையோ குடும்பங்கள் ஏங்குகின்றன. உறவுக்காகவும், உதவிக்காகவும் மூன்று மாதங்கள் எலிசபெத்தோடு தங்கியிருந்து வீடு திரும்பிய அன்னை மரியாள் இன்றும் உறவுக்காகவும், உதவிக்காகவும் ஏங்கும் எல்லாக் குடும்பங்களுக்கும் மரியாள் ஒரு கலங்கரை விளக்கம்தான்.

### தெய்வக் குழந்தையைப் பெற்றெடுத்த... (லூக் 2:1-7)

கருவுற்றிருக்கும் எந்தத் தாயும், பத்து மாதம் அந்தக்குழந்தையைக் சுமந்து எந்தவிதப் பிரச்சினைகளுமில்லாமல் நலமாகக் குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும் என நாம் அனைவரும் விரும்புகிறோம். "நல்லபடியாக பிரசவமாகனுன்னு தாய்கிட்ட வேண்டிக்கிங்க" என்று மக்கள் அடிக்கடி சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். அன்னை மரியாளுக்கும் தெய்வத் திருமகனைத் தனக்குள் சுமந்திருந்த அனுபவமுண்டு மரியாள் நிறைமாதமாக இருந்தபோது தன் குழந்தையைப் பெற்றெடுக்க ஊருக்குள்ளே இடமில்லை. அந்தப் பிரசவகாலப் பிரச்சினையைத் துணிவோடு சந்தித்து தனது மகனை அன்னை பெற்றெடுக்கிறார் (லூக் 2:6-7). குழந்தை பிறந்தது மாட்டுத் தொழுவ மொன்றில் என்றாலும், அன்னைக்கு அன்று சுகப்பிரசவம். இன்று குழந்தைகளைச் சுமந்து கொண்டு பிரசவத்திற்காக காத்திருக்கும் தாய்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள். அவர்களின் பிரச்சினை களையும், கவலை களையும் போக்கும் அன்னை நம் குடும்பங்களின் கலங்கரை விளக்கம்.

### நாடோடியாக எகிப்தில் வாழ்ந்த... (மத் 2:14-15)

இயேசு குழந்தையை ஏரோது அரசர் கொல்லத் திட்டமிடுகிறார் என தூதர் அறிவித்ததும் சூசையும், மரியாளும் எகிப்திற்குச் சென்று அங்கு அகதிகளாக வாழ்ந்தார்கள். இன்று வெளிநாட்டுத் தாக்குதல்களாலும், உள்நாட்டுப் போர்களாலும் தங்களின் சொந்தங்களை இழந்து, சொத்துக்களை இழந்து வேற்று நாடுகளில் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. பிற நாட்டில் அகதியாய் தான் வாழ்ந்தாலும், இறைவனின் துணையோடு மீண்டும் தன் தாய்நாட்டிற்குச் செல்வேன் என்று சிறிதும் மனந்தளராமல் வாழ்ந்த நம் அன்னை மரியாள் அகதிகளாத் துன்புறும் குடும்பங்களுக்கெல்லாம் வழிகாட்டும் கலங்கரை விளக்கம்.

### காணாமல் போன மகனைத் தேடிய... (லூக் 2:41-52)

திருவிழாக் கூட்டங்களில், கடற்கரைக் கூட்டங்களில் வெளியூருக்குப் போன சில நேரங்களில் குழந்தைகள் காணாமல் போய்விடுகிறார்கள். குழந்தைகளைத் தொலைத்த பெற்றோர்கள் கண்ணீரும் கம்பலையுமாக வேதனைப்படுகிறார்கள். அன்னை மரியாவும் தனது குழந்தையை ஒரு திருவிழாக் கூட்டத்தில் இழந்துவிட்டார். காணாமல் போன தன் மகனை எப்படியும் கண்டுபிடிக்க வேண்டும். மீண்டும் எருசலேம் வரை நம்பிக்கையோடு தேடிச் சென்று இறுதியில் தன மகனை கோவிலில் கண்டுபிடித்தார். பிள்ளைகளை இழந்து பெரிதும் பரிதவிக்கும் பெற்றோர்களுக்கெல்லாம் நம் அன்னை நம்பிக்கையின் கலங்கரை விளக்கம்.

### குழந்தையைப் பக்குவமாக வளர்த்த...

பெற்ற பிள்ளைகளை பேணி வளர்க்க வேண்டும் என்பது பெற்றோர்களின் பொறுப்பு. அதிலும் குறிப்பாக அவர்களுக்கு உணவூட்டுவதிலும், படிக்க வைப்பதிலும் நற்செய்தி மதிப்பீடுகளில் அவர்களை உருவாக்குவதிலும் இன்று பல பிரச்சினைகளையும், சவால்களையும் பெற்றோர்கள் சந்திக்கிறார்கள். குழந்தை இயேசுவை இறை ஞானத்திலும், இறை அன்பிலும் பிறர் அன்பிலும் பக்குவமாக வளர்த்த அன்னை மரியாள். பிள்ளைகளை நன்கு வளர்க்க அவர்களோடு கட்டியுருண்டு போராடும் எல்லாப் பெற்றோருக்கும் ஒரு கலங்கரை விளக்கம்

### மகனின் பணியைத் தொடங்கி வைத்த... (யோவான் 2:5)

தம் குழந்தைகளின் குணநலன்களுக்கேற்ப படிப்புத் திறமைகளுக்கேற்ப

**கலங்கரைத்**
**தீபமே,**
**கலங்களின்**
**தாரகையே**
**துலங்கிடும்**
**மணியே,**
**கலங்குவோர்க்கு**
**கதியே**
**காத்திடுவாய்**
**தாயே!**

ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ளவும், நல்லதொரு எதிர்கால வாழ்வை அமைத்துக்கொள்ளவும் பெற்றோர்கள் உதவ வேண்டும். இவ்வுலகத்தை எல்லா அநீத அக்கிரமங்களிலிருந்தும், எல்லா ஒடுக்கு முறைகளிலிருந்தும் காக்க வந்த எம் பெருமான் இயேசு பணியைத் தொடங்க காத்திருந்த நேரத்தில், இதுதான் தன் மகனுக்குரிய நேரம் என்பதைச் சுட்டிக்காட்டி தனது மகனின் மீட்புப் பணியைத் தொடங்கி வைத்தார் நம் அன்னை மரியாள். தாங்கள் பெற்ற பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை நல்ல முறையில் அமைத்துக்கொடுக்க முடியாமல் தடுமாறும் குடும்பங்களுக்கெல்லாம் நம் அன்னை மரியாள் ஒளிவீசும் கலங்கரை விளக்கம்.

### மகனின் பணியை ஊக்குவித்த (லூக் 8:19-21, மாற் 3:31-35)

இயேசுவின் பணி வாழ்வு முழுவதிலும், மரியாள் தன் மகனுக்குச் சிறந்த ஆதரவாக இருக்கிறார். தங்களைப் பெற்றத் தாயும் தந்தையும் இன்று தங்களுக்கு அருகில் இல்லையே. தங்களோடு தங்கி தங்களை வழிநடத்தவில்லையே என்று ஏங்குகின்ற குடும்பங்களுக்கெல்லாம் நம் அன்னை ஒரு கலங்கரை விளக்கம்.


### சிலுவையடியில் நின்ற (யோவா 19:25-28)

தனது மகன் நோயுற்றிருந்தபோது 15 நாட்களுக்கு மேல் தூங்காமல் விழித்திருந்து

☛ 15

# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா




1953ம் ஆண்டு மாசி மாதத்தில் அவர்கள் இப்புது இல்லத்தில் குடிபுகுந்தார்கள். இடம் விட்டு இடம் மாறிக் கொண்டிருந்த அன்னை தெரேசாவுக்கு இப்போது நிலையானதொரு விலாசம் கிடைத்துவிட்டது. இவ்வில்லம் தான் அன்பின் மறைப்பணியாளர் சபையின் தாய் மடமாகவும், தலைமை அலுவலகமாகவும் செயல்படுவது. இங்கிருந்துதான் உலகின் எல்லா இடங்கட்கும் தெரேசாவின் சகோதரிகள் பணி செய்ய அனுப்பப்படுகின்றனர். 35 நாடுகளில் பணி புரிந்துவரும் சகோதரிகள் ஆற்றலும், ஆறுதலும் பெற நாடுவது இவ்வில்லத்தைத்தான். மனித உடலில் எவ்வாறு குருதி இதயத்திலிருந்து உடல் முழுவதும் பரவி பின் அது இதயத்திற்கே திரும்பிவிடுகிறதோ, எவ்வாறு காலையில் கூடுவிட்டுப் பறந்துபோன பறவைகள் மாலைப்பொழுதில் கூடு திரும்புகின்றனவோ, அவ்வாறே இச்சகோதரிகளும் தாய் மடத்திலிருந்து கல்கத்தா மாநகரின் பல இடங்களுக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர். மாலையில் இவ்வில்லத்துக்கே திரும்புகின்றனர்.

காலை 4.30க்கு எல்லோரும் எழுந்திருப்பர். தங்களுடைய அன்றைய வேலைகளை இறைவனுக்கு அர்ப்பணிக்கவும் இறை அருள் வேண்டவும் எல்லோரும் கோவிலில் ஒன்று கூடுவர். இந்திய மரபுப்படி காலணிகளைக் கோவிலுக்கு வெளியே கழற்றி வைத்துவிட்டு உள்ளே செல்கின்றனர். தரையில் அமர்ந்து தியானம் செய்கின்றனர். 6.00 மணியளவில் திருப்பலி நிறைவேற்றப்படுகிறது. நற்கருணையை வாழ்வின் மையமாகக் கொண்டு அனைவரும் செயல்பட வேண்டும் என்பது தான் இச்சபையின் குறிக்கோள். “திவ்விய நற்கருணையின்றி என்னால் வாழ முடியாது. அப்பத்தின் தோற்றத்தில் இயேசுவைக் காண முடிந்தால்தான் உடல் நலிந்து கிடக்கும் நோயாளிகளிலும் இயேசுவைப் பார்க்க முடியும்” என்கிறார் அன்னை தெரேசா.

திருப்பலிக்குப் பின் துணிகளைச் சுத்தம் செய்யும் பணியில் எல்லோரும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வர். ஒவ்வொருவரும் தங்களது உடைகளைத் தாங்களே சுத்தம் செய்துகொள்ள வேண்டும். அத்துடன் தங்களுடைய பொறுப்பிலுள்ள நோயாளிகள், வயோதிபர்கள், குழந்தைகள் ஆகியோருடைய ஆடைகளையும் அவர்கள்தான் சுத்தம் செய்யவேண்டும். இதற்கென்று ஆளுக்கொரு பிளாஸ்டிக் வாளி கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிறகு காலை உணவு கொள்ளும் நேரம். ஏழை மக்களுடைய எளிய உணவைத்தான் இவர்களும் அருந்துகிறார்கள். சப்பாத்தியும் தேநீரும் அருந்திவிட்டு தங்களுக்கென்று குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு பணிசெய்ய புறப்படுகின்றனர். இருவர் இருவராகத் தான் செல்கின்றனர். சிலர் நகரின் பல இடங்களிலும் இயங்கிவரும் பள்ளிகளுக்கும் மற்றும் சிலர் தொழுநோயாளர் விடுதிகளுக்கும் செல்கின்றனர். தனிப் பயிற்சி பெற்றவர் மட்டுமே தொழுநோயாளரைக் கவனிக்க அனுப்பப்படுகின்றனர்.

மாலை 6.00 மணிக்கு எல்லோரும் தாய் மடத்துக்குத் திரும்பியாக வேண்டும். மடத்துக்குத் திரும்பினதும் அனைவரும் தங்களையே சுத்தம் செய்துகொள்ள வேண்டுமென்பது மிகக் கண்டிப்பான உத்தரவு. நோயாளிகள் மத்தியில் உழைக்கின்றவர்கள் தங்களுடன் தொற்று நோய்க் கிருமிகளைக் கொண்டுவரக் கூடுமல்லவா? எனவேதான் இந்த எச்சரிக்கை. அதன்பின் ஒரு மணிநேரம் கோவிலில் பிரார்த்தனை. அடுத்து, இரவு உணவு. அப்போதுதான் ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்வர். இரவு உணவுக்குப் பின் ஓய்வு நேரம். அரட்டை அடிப்பதிலும், கேலி செய்வதிலும், மகளிர் ஆடவர்கட்குச் சிறிதும் சளைத்தவர்களல்லர் என்பதை அங்கே பார்க்கலாம்.

ஓய்வு நேர முடிவில் மீண்டும் பொதுப் பிரார்த்தனை. அந்நேரத்தில் ஒவ்வொருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அலுவல்களை எவ்வாறு செய்தனர் என்று ஆய்ந்து பார்ப்பர். இதை ஆன்ம ஆய்வு என்பர். ஆன்ம ஆய்வின் பிறகு எல்லோரும் தூங்கச் செல்வர். இந்நேரத்தில் பிறரோடு பேசிக் கொண்டிருப்பதோ, கோவிலுக்குச் சென்று செபம் செய்து கொண்டிருப்பதோ கூடாது. நாள் முழுவதும் உழைத்தவர்களுக்கு ஓய்வு மிக மிக அவசியம் என்பது பாட்னாவில் அன்னை கற்றுக் கொண்ட பாடம். இதை அவர் வற்புறுத்தியே வந்தார்.

இரவு பத்து மணிக்கு அனைவரும் உறங்கச் செல்ல வேண்டும். விதிவிலக்கானவர் தெரேசா ஒருவர்தான். தமக்கு வந்த கடிதங்கட்கெல்லாம் தெரசா பதில் எழுதுவது அந்நேரத்தில்தான். இதற்கென்று அன்னை உதவியாளர் எவரையும் வைத்துக் கொள்ளவில்லை. தம் கையினாலேயே எல்லாக் கடிதங்களையும் எழுதி முடித்தபின்தான் அன்னை ஓய்வு பெறச் செல்வார். இவ்வாறு அன்னையும் சகோதரிகளும் ஒரே குறிக்கோளுடன் செயல்பட்டு வருவதால் இம்மடத்தில் எப்போதும் அமைதி நிலவுகிறது. சுறுசுறுப்புடன் பணிசெய்து வரும் இச்சகோதரிகளை ஓய்வின்றி வேலை செய்துவரும் தேனீக்களோடு ஒப்பிடலாம். அவை நடத்துவது கூட்டுவாழ்வு சகோதரிகள் நடத்துவதும் கூட்டுவாழ்வு தான். தங்களுக்கென்று இல்லாமல் பிறருக்கென்று உழைக்கின்றன. சகோதரிகளும் தங்களுக்-கென வாழ்வதில்லை. தங்களுடைய உழைப்பெல்லாம் பிறருக்காக.



## அறிவுக் கண்ணைத் திறந்த அன்னை

இறக்கும் தருவாயில் இருப்போருக்கு அன்னை செய்து வரும் பணிதான் அவரது முதற்பணி, அன்னைக்கு மிகவும் பிடித்தமான பணி என்று பார்த்தோம். அடுத்து அவரது கவனத்தை ஈர்த்தது கல்விப் பணி. மோட்டி ஜீல் என்னுமிடத்தில் அன்னை தெரேசா தொடங்கின பள்ளிதான் அவரது முதற்பள்ளி. இப்பள்ளி முதலில் ஒரு மரத்தடியில் தான் இயங்கி வந்தது. பின்னர் அது ஒரு வாடகைக் குடிசைக்கு மாற்றப்பட்டது. 1958ஆம் ஆண்டு இப்பள்ளியில் ஆறு வகுப்புகளில் 200 மாணவ, மாணவியர் கற்று வந்தனர். வெறும் ஐந்து மாணவர்களைக் கொண்டு தொடங்கின இப்பள்ளி இப்போது 200 மாணாக்கர்களைக் கொண்டிருப்பது நமக்கு ஆச்சரியமாகவல்லவா இருக்கிறது? நூறு மாணாக்கர்களைக் கொண்ட எந்த ஒரு குடிசைப் பள்ளிக்கும் நல்லதொரு கட்டடத்தைக் கட்டித் தருவதாக கல்கத்தா மாநகராட்சி ஒப்புக்கொண்டிருந்தது. தெரசா அதை அதிகாரிகட்கு நினைவுபடுத்தி தங்களுக்கு நல்லதொரு கட்டடத்தைக் கட்டித் தரும்படி விண்ணப்பித்தார். அதன் விளைவாக இன்று அழகான பள்ளிக் கட்டடத்தையே நாம் அங்கே பார்க்கின்றோம்.

பள்ளிக் கட்டிடத்தைத் தவிர ஒரு தண்ணீர் குழாயையும் நாம் அங்கே பார்க்கலாம். முத்துக்குள நீரைப் பருகிவந்த மோட்டி ஜீல் மக்கள் பலவித நோய்களுக்கு இலக்காவதைக் கண்ணுற்ற அன்னை, முன்னாய் வங்காள முதல்வர் பி.சி. ராயிடம் முறையிட்டிருக்கிறார். இதோ தண்ணீர் குழாயும் கிடைத்துவிட்டது. இவ்வளவு உதவியும் புரிந்த அன்னை தெரசாவை மோட்டி ஜீல் மக்கள் மறக்கவே மாட்டார்கள். மோட்டி ஜீலில் தொடங்கின பள்ளியைப் போல வேறு இடங்களிலும் பல பள்ளிகளை நிறுவியிருக்கின்றார் அன்னை. அவற்றில் குறிப்பிடத்தக்கது பேச்பேகம் என்னுமிடத்தில் அன்னை தொடங்கின தொடக்கப் பள்ளியாகும். கிழக்கு வங்காளத்திலிருந்தும் பீகார், ஒரிசா மாநிலங்களிலிருந்தும் குடியேறின மக்கள் மிகுதியாக வாழும் பகுதி பேச்பேகன். பெரும்பாலும் ஏழைகள் வாழும் இப்பகுதியில் பள்ளியே இல்லாமல் இருந்தது. அம்மக்களைப் பார்க்க வந்த தெரசாவிடம் தங்கள் குழந்தைகட்குக் கல்வி கற்க பள்ளி இல்லையே என முறையிட்டனர்.

அங்கே பெரிய வீடு ஒன்றிருந்தது. அவ்வீட்டுக்குப் பக்கத்தில் திறந்த வெளியிருந்தமையால் அங்கே ஒரு பள்ளியை அமைக்கலாம் என்னும் எண்ணத்துடன் அவ்வீட்டுத் தலைவரை அணுகினார் அன்னை. அவர் பெயர் பானாஜி. மின்னிணைப்பு வேலை செய்பவர். நான்கு புதல்வர்களுடனும் அவர்களுடைய மனைவி, மக்களுடனும், கூட்டுக் குடும்பம் நடத்தி வந்தவர் அவர். பள்ளியில் படிப்பதற்கு அவருக்கோ அவருடைய புதல்வர்களுக்கோ வாய்ப்புக் கிடைக்கவில்லை. தங்களது பேரப் பிள்ளைகளுக்காவது அந்தப் பேறு கிடைக்கட்டுமே என்று எண்ணிய பானர்ஜி தெரசாவுக்கு எவ்வித உதவியும் செய்யத் தயாராக இருந்தார். அன்னை தெரசா அங்கேயே தமது பள்ளியை நிறுவினார். இப்போது ஆறு வகுப்புக்களையும் 300 மாணாக்கர்களையும் கொண்ட நல்ல பள்ளியாக அது விளங்குகிறது. இப்பள்ளி ஓர் எடுத்துக்காட்டுதான். இவ்வாறு பதினான்கு பள்ளிகளை அன்னை மாநகரின் பல இடங்களிலும் நிறுவியிருக்கின்றார். அவரது பதினைந்தாவது பள்ளி தொழுநோயாளிகளின் குழந்தைகளுக்காகத் தொடங்கப்பட்டது. அது டாப்பா என்னும் பகுதியில் அமைந்துள்ளது. கசாப்புக் கடைகள் நிறைந்த இவ்விடத்தில் சுத்தம் என்பதை நாம் எதிர்பார்க்க முடியாது.

இச்சூழ்நிலையில் பள்ளியைத் தொடங்கவா வேண்டாமா? என்ற கேள்வி முதலில் எழுந்தது. இங்கே பள்ளி ஒன்று தொடங்கவில்லை என்றால் இம்மக்களுக்குச் சுகாதாரத்தைப் பற்றி யார் சொல்லிக் கொடுப்பார்? சுகாதாரத்தின் அவசியத்தை நன்கு அறிந்திருந்த அன்னை தெரசா அங்கே ஒரு பள்ளியை நிறுவினார். இது கூரையில்லாப் பள்ளி. கற்க வந்த பிள்ளைகளின் எண்ணிக்கை நூற்றுக்கு மேல் போய்விட்டது. நூறு பிள்ளைகளைக் கொண்ட இப்பள்ளிக்கு மாநகராட்சியே முன்வந்து டாப்பா பள்ளிக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தது.

கட்டட வேலை முடிந்ததும் அன்னை அதைப் பார்க்க வந்தார். அவ்வேளையில் சில பிள்ளைகளின் முகத்தில் தொழுநோயின் அறிகுறிகள் இருப்பதைக் கவனித்தார். வேறு சில குழந்தைகளின் கை விரல்களிலும் தொழுநோய் பிடித்திருந்தது. உடனே அக்குழந்தைகளைத் தனிப்பட்ட விதத்தில் கவனிக்குமாறு சகோதரிகளிடம் கூறினார் அன்னை.

தொழுநோய் சிகிச்சைக்கென நடமாடும் மருத்துவமனை ஒன்றையும் அன்னை ஏற்படுத்திக் கொடுத்தார். வாரத்துக்கு இரண்டு முறை கிராமங்களைச் சுற்றிவரும் இதே ஊர்தி டாப்பாவுக்கும் வரும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமாயின் அவர்கட்குக் கல்வி இன்றியமையாதது என தெரசா நன்கு உணர்ந்திருந்தார். காசநோய், தொழுநோய் போன்ற பிணிகளிலிருந்து விடுபட வேண்டும் என்றால் சுகாதாரம் இன்றியமையாதது என அறிந்திருந்த அன்னை தம் பள்ளிகளில் படித்துவந்த குழந்தைகட்குச் சுகாதார வகுப்புக்களைத் தாமே நடத்தி வந்தார். அதன் பயனாக டாப்பா, டிட்டாகூர் போன்ற இடங்களில் வாழ்ந்த மக்கள் ஓரளவாவது பயன் அடைந்திருப்பர் அல்லவா?

தொடரும்

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்




இயேசுவோடும், அன்னை மரியாளோடும், ஓர் ஆன்மீகத் தோழமை கொள்ள சிறந்த வழி செபமாலை செபிப்பதாகும். செபமாலை என்பது செபத்தாலான மாலையாகும். பத்தி பதினைந்து மணித்துளிகளில் நாம் செபமாலையை செபித்து முடித்து விடலாம்.

## செபமாலை செபிப்பதன் சில பயன்கள்.

1. உன் வாழ்நாள் முழுவதும், செபமாலையை பக்தியோடு, பொருள் உணர்ந்து செபித்தால் நீ உன் ஆன்மாவை இழக்கமாட்டாய்.

2. உன் இதயத்திலும், உன் குடும்பத்திலும், அமைதி வேண்டுமானால், உன் குடும்பத்தார் மீது விண்ணக ஆசீர் நிறைவாகப் பொழிந்திட வேண்டுமானால் ஒவ்வொரு இரவும் உன் குடும்பத்தாரை ஒன்று திரட்டி செபமாலை சொல்.

3. ஒருவரை ஆண்டவரின் அன்புக்குள் அவருள் வாழும் வாழ்க்கைக்குத் திருப்ப நீ ஆசையாய் இருந்தால் அவருக்கு செபமாலை செபிக்க கற்றுக்கொடு. அவர் விசுவாசக் கொடையைப் பெற்றுக் கொள்வார்.

4. நாம் குழுவாக சேர்ந்து தினமும் செபமாலை செபித்தால் முற்காலத்தில் செய்ததுபோல தன்னுடைய இறை மைந்தனிடம் பரிந்து பேசி இக்கால போரட்டங்களில் அமைதியும், மனித நாகரீகத்துக்கு எதிரானவர்களின் தோல்வியையும், வாழத் தவறிய - சோர்ந்து போன உள்ளங்களுக்கு உண்மையான அமைதியைப் பெற்றுத் தருவார்

5. அன்பைப் பற்றி வறட்சி ஏற்பட்டு நீ மகிழ்ச்சியற்றவராக, அடுத்தவரை குறை கூறுபவராக, மாறிவிட்டிருந்தால் சிலுவையில் காட்டிய ஆண்டவரின் அளப்பரும் அன்பும் செயல்களும், கல்வாரியில் உனக்காக நின்ற தேவதாயின் பாசமும், ஆண்டவர் மீதும், அயலவர் மீதும், உன் அன்பை மீண்டுமாக சுவாலை விட்டு எரியச் செய்யும். மனித அறிவுக்கு எட்டாத அமைதியை உனக்கு மீட்டுத் தரும்.

# அன்னை மரியாவின் இரக்கத்தின் செயல்களை

## 10 வகையாக அடையாளம் காணலாம் அவைகள்

| | | |
|---|---|---|
| **தூய்மை** | : | உலக ஆசைகளை வெறுத்து எல்லா மக்களின் தாயாக இறைப்பணியில் நிலைத்திருப்பது. |
| **மனத்தெளிவு** | : | அவசரப்படாமல், திட்டமிட்டுச் செய்வது "நான் ஆண்டவரின் அடிமை, உம் வார்த்தையின் படியே ஆகட்டும்" என் வாழ்ந்தது |
| **தாழ்ச்சி** | : | "ஆண்டவரின் தாய்" என்ற உயர்ந்த கொடையைப் பெற்றிருந்த போதிலும், தேவையற்ற ஆசைகளை வெறுத்து, இரக்கம் நிறைந்தவராக வாழ்ந்தது. |
| **நம்பிக்கை** | : | எலிசபெத்தம்மாளைச் சந்தித்து பல்வேறு பணிவிடைகளைச் செய்து, இறைவன் தம் திட்டத்தை குறிப்பிட்ட நேரத்தில் செய்வார் என நம்பிக்கை ஊட்டியது. |
| **இறைப்பற்று** | : | செபத்தினாலும் வழிபாடுகளினாலும், இறைவனைப் போற்றி புகழ்ந்து, ஆராதித்து, மகிழ்ந்து நன்றி கூறுவது |
| **கீழ்ப்படிதல்** | : | சமூக சட்டங்களுக்கும், திருச்சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து வாழ்வது |
| **ஏழ்மை** | : | எந்த நிலையிலும், எளிமையான வாழ்வு தூய்மையான வாழ்வு, உண்மையான வாழ்வு வாழ்வது |
| **பொறுமை** | : | ஏரோது மன்னனின் அநீதிகளையும், கொடுமைகளையும் பொறுமையோடு தாங்கியதுபோல எதிலும் நிதானமாகச் செயல்படுவது |
| **இரக்கச் செயல்** | : | கானாவூர் திருமணத்தில் இரசம் தீர்ந்து போனபோது தன் மகனிடம் தயவாய் பரிந்து பேசி, தண்ணீரை இரசமாக மாற்றியது. |
| **துயரம்** | : | தனது துயரங்களை இயேசுவின் சிலுவைப் பாடுகளோடு சேர்ந்து செபித்து மனதைத் திடப்படுத்தியது. |

இந்தப் 10 படிப்பினைகளையும், பண்புகளையும் இந்த வணக்க மாதத்தில் செய்ய முயற்சிப்போம். அன்னையின் உதவியை பெறுவோம்.



# பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடித்து எமது ஆன்மீகத்தை வளர்ப்போம்



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

136

இறைவன் எம்மோடு அன்புத் தொடர்பு வைத்துள்ளார். அதிலே சமத்துவம் உண்டு. அன்னியோன்னிய கலந்துரையாடல் உண்டு. கெட்டதைச் செய்யவும், நல்லதைச் செய்யவும் எமக்குச் சுதந்திரவிருப்பமுண்டு. தீர்மானம் எடுப்பது எனது கடமையாகும். இங்கே அனுமதியும் சுதந்திரமும் உண்டு. அன்புள்ளவர்களுக்கே சுதந்திரம் கொடுப்பர். பிழைவிட்டாலும் மன்னிப்பர். பிழை நடந்தால் இறைவன் மீதுகுறை கூறவும் எமக்குச் சுதந்திரமுண்டு.

"நீ விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடி. பற்றுறுதியுடன் நடப்பது உமது விருப்பத்தைப் பொறுத்தது............. மனிதர் முன் வாழ்வும் சாவும் வைக்கப்பட்டுள்ளன. எதை அவர்கள் விரும்புகிறார்களோ அதுவே அவர்களுக்குக் கொடுக்கப்படும். ஆண்டவரின் ஞானம் பெரிது. அவர் ஆற்றல் மிக்கவர். அனைத்தையும் அவர் காண்கிறார்.......... இறைபற்றின்றி இருக்க யாருக்கும் ஆண்டவர் கட்டளையிட்டதுமில்லை. பாவம் செய்ய எவருக்கும் அவர் அனுமதி கொடுத்ததும் இல்லை". (சீராக்15: 15-20)

பத்துக் கற்பனைகளைக் கடைப்பிடிப்பதே எமது ஆன்மீகத்துக்கு அத்திவாரமாக வேண்டும். இதைச் செய்யாது நாம் தபசு இருப்பதும், நோன்புபிடிப்பதும், செபங்களை உச்சரிப்பதும் பலனற்றுப் போய்விடும்.

"ஒருவருக்கு ஒருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்தவேண்டிய ஒரே கடமையாய் இருக்கட்டும். பிறரிடத்தில் அன்பு கூர்பவர் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவர் ஆவார். ஏனெனில் விபச்சாரம் செய்யாதே, கொலைசெய்யாதே, களவுசெய்யாதே, பிறருக்கு உரியதைக் கவர்ந்திட விரும்பாதே என்னும் கட்டளைகளும் பிறகட்டளைகளும் உன்மீது அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்னும் கட்டளையில் அடங்கியுள்ளன. அன்பு அடுத்திருப்பவருக்குத் தீங்கிழைக்காது. ஆகவே அன்பே திருச்சட்டத்தின் நிறைவு" (உரோமர் 13.:.8-10)

"திருச்சட்டத்திற்கு உட்பட்டிருக்க விரும்பு-கிறீர்களே அச்சட்டம் சொல்வதை நீங்கள் கேட்டதில்லையா?" (கலாத்தி 4.:.21) இயேசுநாதர் திருச்சட்டத்தை அழிக்க வரவில்லை. மாறாக அதை நிறைவேற்றவே வந்தார். (மத்தேயு 5.:.17-37) எபிரேய சட்டப்படி ஒருவரை மோடன் என்று ஏசுவது பிழையாகும். ஆனால் யேசுநாதர் ஒருவரை மோடர், அறிவிலியே என்று ஏசுவது அவரைக் கொலை செய்வதற்குச் சமம் என்கிறார். மற்றவரை அன்பு செய்யவேண்டும். என்னைவிடக் கீழாக மதிப்பது தவறு என்கிறார்.

அதுமட்டுமல்ல "நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்தவரும் போது உங்கள் சகோதரர், சகோதரிகள் எவருக்கும் உங்கள்மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால் அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்" என்கிறார்.

அதுமட்டுமல்ல "உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலே அவருடன் விரைவாக உடன்பாடு செய்துகொள்ளுங்கள்" என்கிறார். மேலும் "ஒருபெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று" என்கிறார். அதாவது மனதிலே காமஆசை, இயற்கையாக வருவது தவறல்ல. ஆனால் தீர்மானம் எடுத்து ஆசைப்படுவது பாவம் என்கிறார். மற்றவர் குடும்பத்தைப் பிரிப்பது பிழையாகும். இங்கே கண்தடையாய் இருந்தால் பிடுங்கிவிடு என்பதன் அர்த்தம் என்னவென்றால் பாவத்தில் விழக்கூடிய சந்தர்ப்பங்களை விலக்கிவிடு என்பதாகும். மேலும் விவாகரத்தில் மூன்று முறை இருந்தது. ஒன்று பொது இடத்தில் சந்தியில் கல்லால் எறிந்து பெண்ணைக் கொல்வது. அடுத்தது கோயிலுக்கு பிழைவிட்ட பெண்ணைக் கூட்டிச்சென்று எல்லோர் முன்னிலையிலும் அவளைச் சபித்து சில சடங்குகள் மூலம் விலக்கி விடுவது. மூன்றாவது விலக்குச் சீட்டைக் கொடுத்து அப்பெண்ணைப் பெற்றோர் வீட்டுக்கு அனுப்பிவிடுவது. இங்கே யோசுநாதர் "பரத்தமைக்காக அன்றி வேறு எந்தக் காரணத்துக்காகவும் விலக்கி விடக்கூடாது. அப்படிச் செய்வோர் அவளை விபசாரத்தில் ஈடுபடச் செய்கின்றனர்" என்கிறார்.

மேலும் ஆணையிட வேண்டாம் என்கிறார். அதாவது மக்கள் பொய் சொல்வதால் உண்மையை அவர்கள் வாயிலிருந்து எடுக்க ஆணையிடுவர். ஆகவே பொய் சொல்லாதே என்கிறார். உண்மை சொன்னால் ஆணையிடத் தேவையில்லை என்பதே அதன் கருத்து. சிறுவயதிலிருந்து எமது பிள்ளைகளுக்கு உண்மை சொல்லப் பழக்கவேண்டும். இதற்கு நாம் முன்மாதிரிகையாக வாழவேண்டும். ஆகவே பத்துக் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதே, அதன்படி நடப்பதே எமது ஆன்மீகமாக வளர வேண்டும்.

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

# இறைவார்த்தை வழிபாடு

WLX - பேதுரு -

## பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு (07.05.2017)

**வாசக விளக்கம்:** ஆண்டவர் உண்மையாகவே நம் ஒவ்வொருவருக்கும் நல்ல ஆயனாக இருக்கிறார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதையே இன்றைய திருப்பாடலும் வலியுறுத்துகின்றது. நம் ஒவ்வொருவருக்கும் உண்மையான பாதுகாப்பை கடவுள் ஒருவரால் மட்டுமே வழங்க முடியும். நமது ஆயன் ஒளியை பிரச்சாரம் செய்யும் ஆயனாகவும் நல்ல வாயிலாகவும் இருக்கிறார். வாணிபத்திற்காக வியாபாரத்திற்காக எத்தனையோ நுழைவாயில்கள் உலக நாடுகளில் இருப்பதை நாம் அறிவோம். ஆனால் நமது ஆயனின் வாயிலோ நிறைவாழ்வுக்கானது. இன்றைய முதல் வாசகத்தில் மனம் மாற வேண்டும் அதாவது சிந்தனையிலும் சொல்லிலும், செயலிலும் மாற்றம் வேண்டும் நெறி கெட்ட தலைமுறையிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்றும் கூறுகின்றது. இவ்வாறு செய்யும்போது நாம் ஆண்டவரது வாயிலில் நுழைகிறோம். இரண்டாம் வாசகமானது, நீங்கள் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுங்கள். இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்கிறது.

இன்றைய நற்செய்தியில் இயேசு நானே வாயில் என் வழியாய் நுழைவோர்க்கு ஆபத்து இல்லை என்கிறார். ஆண்டவர் நமது வாயிலாக இருக்கும்போது நாம் எதற்கும் அச்சப்படத் தேவையில்லை. இயேசுவின் உடனிருப்பு எல்லா விதமான அச்சங்களிலிருந்தும் விடுதலை தரும் எனவே நல்லாயன் இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தி.ப 2:14,36-41**
கடவுள் அவரை ஆண்டவரும் மெசியாவுமாக்கினார்.

**பதிலுரைப் பாடல் :** ஆண்டவரே என் ஆயன் எனக்கேதும் குறையில்லை

**இரண்டாம் வாசகம் : 1 பேதுரு 2:20-25**
உங்கள் ஆன்மாக்களின் ஆயரிடம் திரும்பி வந்திருக்கிறீர்கள்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா நல்ல ஆயன் நானே நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவான் 10:1-10**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நல்ல ஆயன் இயேசுவையே தலைவராகவும் வழிகாட்டியாகவும் கொண்டு திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் நல்லாயனின் பண்புகளை மனதில் கொண்டு தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை வழிநடத்த தேவையான வல்லமையை அவர்கள்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

மக்களின் பிரதிநிதிகளும், தலைவர்களும், பொறுப்பில் இருக்கும் அதிகாரிகளும் மக்களின் நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் நல்ல ஆயனைப் போன்ற பரித்தியாகங்கள் புரியவும், தேவை ஏற்படின் மக்களுக்காக தம் உயிரைக் கொடுக்கவும் வேண்டிய உறுதியான மனநிலையை வழங்கி வழிநடத்தியருள வேண்டுமென்று...

நல்ல ஆடு தனது ஆயனைப் பின் செல்ல வேண்டும் நாம் இயேசுவின் ஆடுகள் என்பதை உணர்ந்தவர்களாக அவரை முழுமனதோடு பின்பற்றவும் அவர் நமக்குக் காட்டும் வழியில் செல்லவும் ஆயனை விட்டுப் பிரிந்து செல்லாமல் அவருடன் நிலைத்து வாழவும், வாழ்வு தரும் உணவும், விண்ணக வாயிலுமான அவரின் சாட்சிகளாக நாம் விளங்கவும் வேண்டிய வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று....

## பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு (14.05.2017)

**வாசக விளக்கம்:** பாஸ்கா காலத்தின் ஐந்தாவது ஞாயிறு தினத்தில் கால் பதிக்கும் அன்பு நெஞ்சங்களே! வழி என்று ஒன்று இருந்தால்தான் ஒருவன் அதில் நடக்க முடியும். உண்மை என்று ஒன்று இருந்தால் தான் ஒருவன் அறியமுடியும். வாழ்வொன்று என்று இருந்தால் தான் ஒருவன் வாழ முடியும். இவை மூன்றும் உள்ளவர் இயேசு ஒருவர் மட்டுமே. "வழியும் உண்மையும் வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை என்கிறார் இயேசு. வழியானது சேருமிடம் ஒன்றை இலக்காகக் கொண்டது. தந்தையை உலகிற்கு வெளிப்படுத்தி அனைவரையும் அவரோடு ஒப்புரவாக்கி ஒன்றிணைப்பதே இயேசுவின் இலட்சியம். தந்தையோடு நம்மை ஒன்றிணைக்கச் செய்யும் வழியாக இயேசு இருக்கிறார். ஆண்டவரே நாங்கள் உம்மீது வைத்திருக்கும் விசுவாசத்தால் உமது இரக்கம் என் மீது இருப்பதாக என்று திருப்பாடல் கூறுகின்றது. யானைக்குப் பலம் தும்பிக்கை. மனிதனுக்குப் பலம் நம்பிக்கை என்பார்கள். கத்தோலிக்க மக்களாகிய எமது நம்பிக்கை, முடிவில்லாத வாழ்வு ஒன்று உள்ளது என்பதாகும். இயேசுவை வழியாகக் கொண்டு நாம் ஒவ்வொருவரும் தந்தையிடம் வரவேண்டும் அவரோடு ஒப்புரவாகி ஒன்றிணைய வேண்டும் இதற்கு இயேசுவின் வார்த்தைகளை நாம் வாழ்வாக்க வேண்டும் இதற்கு வேண்டிய அருள் வரத்தை இறைவனிடம் கேட்போமாக.

**முதல் வாசகம் : தி.ப 6:1-7**
தூய ஆவி நிறைந்த எழுவரைத் தேர்ந்தெடுங்கள்

**பதிலுரைப் பாடல் :** ஆண்டவரே! உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக

**இரண்டாம் வாசகம் : 1 பேதுரு 2:4-9**
நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர் அரச குருக்களின் கூட்டத்தினர்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா வழியும் உண்மையும வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவான் 14:1-12**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வழியும் உண்மையும் வாழ்வுமான இயேசுவை தலைவராக கொண்டு இயங்கும் திருச்சபையையும் அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள்,குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து அவர்கள் மக்களுக்கு உண்மையான வழிகாட்டிகளாகவும், வாழ்வை வழங்கும் வல்லவர்களாகவும் திகழ்ந்திட வேண்டிய உள்ளத்தை வழங்கியருள வேண்டுமென்று...

நமது நாட்டின் அரசியல் சமூகத் தலைவர்கள் அனைவரும் தம்மையே மையமாகவும் எல்லையாகவும் கொண்டு வாழாமல் கடவுளையும் படைப்புக்களையும் மதித்து உண்மையை விட்டு விலகாமல் நேர்வழியல் சென்று மக்களின் நல்வாழ்வுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்து இயேசுவைப் போன்று சொன்னதை செய்தவர்களாகவும் செய்ததை சொல்பவர்களாகவும் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

முடிவில்லாத வாழ்வு ஒன்று உள்ளது என்பதை நம்பும் மக்களாகிய நாம் எங்கள் பயண முடிவில் இயேசுவோடு தந்தையிடம் செல்ல உரிமை பெற்றுள்ளோம் என்பதை விசுவசிக்கவும், கடவுளின் மகனின் சாயலில் நாம் படைக்கப்பட்டோம் அவரே உயிரும் உண்மையும், வாழ்வும் என்பதை ஏற்று எமது முன்மாதிரிகையான வாழ்வால் ஏனையோர்க்கும் வழிகாட்டவும் வரமருள வேண்டுமென்று....

# இறைபணியில் முதல் வார்த்தைப்பாட்டை அளித்த அருட்சகோதரர் ஜெயப்பிரகாஸ்





"தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே நான் உன்னை தேர்ந்துக்கொண்டேன்" என்ற இறைவாத்தைக்கு ஏற்ப தனது துறவற வாழ்வில் முதல் வார்த்தைப்பாட்டை அருட்சகோதரர் பீற்றர் ஜோன் ஜெயப்பிரகாஸ் 2017.03.19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனுக்கு அளித்து, துறவற வாழ்வில் தன்னை இணைத்துக்கொண்டார்.

இராஜகிரிய திருஇருதயநாதர் பங்கைச் சார்ந்த இவர் திரு சைமன் பீட்டர், திருமதி இராஜேஸ்வரி தம்பதிகளுக்கு 1979ஆம் ஆண்டு ஆனி மாதம் 27ஆம் திகதி பிறந்தார். குடும்பத்தில் மூத்த மகனான இவருக்கு இரு சகோதரர்கள் உள்ளனர். அருட்சகோதரர் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் கல்லூரியிலும், உயர் கல்வியை கொழும்பு தெமட்டகொடை விபுலானந்தர் மகா வித்தியாலயத்திலும் கற்றார். இறையாட்சி இளம் சமுதாயத்தினர் மத்தியில் விதைக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் பதினொரு வருட காலமாக, கத்தோலிக்கத் தொண்டர் ஆசிரியராக பணிபுரிந்தார். அதனை தொடர்ந்து கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தில் பணிபுரிந்ததோடு, அவ் அப்போஸ்தலிக்க பணியகத்தின் வேண்டுகோளுக்கிணங்க மயூராபிளேஸ் மற்றும் வெள்ளவத்தை புனித அந்தோனியார் மறைப்பாடசாலை, பம்பலப்பிட்டி புனித மரியாள் மறைப்பாடசாலை ஆகியவற்றில் மறையாசிரியராக சேவையாற்றினார். மரியன்னையின் துணைக்கொண்டு, செக்கடித்தெரு பங்கில் இயங்கிய "திருமறைப்பரப்புப் பணி நாடுகளின் இராக்கினி பிரசீடியத்தின்" மரியாயின் சேனையின் அங்கத்தவராகவும், "அப்போஸ்தலர் அரசி" சிறுவர் பிரசீடியத்தின் தலைவராகவும் இருந்து செயற்பட்டார். பின்னர் இந்தியாவின் பூந்தமல்லியில் அமைந்துள்ள புனித பவுல் திருவிவிலிய கல்வியகத்தில் திருவிவிலியக் கல்வியை கற்று நாடு திரும்பிய இவர், தொடர்ந்து 2013 ஐப்பசி மாதம் 1ஆம் திகதி இலங்கையின் புனித பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் சபையில் தன்னை இணைத்துக் கொண்டார்.

2014ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ஆம் திகதி சிலாபத்தில் உள்ள பிரான்சிஸ்கன் மறைபரப்பு சபையில் நவசன்னியாச வாழ்விற்கு தன்னை அர்ப்பணித்து அங்கு துறவற வாழ்விற்கான பயிற்சிகளை இரண்டு வருடங்கள் மேற்கொண்டார். மீண்டும் இந்தியாவில், ஊட்டியில் அமைந்துள்ள புனித பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் நவசந்நியாச இல்லத்தில் மூன்று மாத காலத்திற்கு விசேட ஆன்மீக பயிற்சியை நிறைவு செய்து, 2017ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்தளையில் அமைந்துள்ள பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் தாய் இல்லத்தில், கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் வியானி பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில், அச்சபையின் இலங்கைக்கான மாகாணத் தலைவர் அருட்சகோதரர் ஜெரமி கிறிஸ்டி திசேரா அவர்களின் முன்னிலையில் கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிவு என்னும் விசேட மூன்று வார்த்தைப்பாடுகளை கொடுத்து கிறிஸ்துவை ஆடையாக அணிந்துக் கொண்டார்.

26.03.2017 அன்று இராஜகிரிய திரு இருதயநாதர் ஆலயத்தில் அருட்சகோதரர் அவர்களை, பங்கு மக்கள் அனைவரும், பங்கின் அருட்தந்தையர்களோடு இணைந்து வரவேற்றதுடன் நன்றித் திருப்பலி உதவிப் பங்குத்தந்தை மைக்கல் சந்தனம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் பங்குத்தந்தை மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி அப்போஸ்தலிக்க பணியகத்தின் தமிழ்ப்பகுதி இயக்குனரும், கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயரின் பதிலாளரும், வெள்ளவத்தை பங்குத் தந்தையுமான அருட்பணி மனோகுமாரன் நாகரட்ணம் அடிகளாரும், அருட்சகோதரர்களும் திருப்பலியில் கலந்துகொண்டு அருட்சகோதரரை வாழ்த்தினார்கள்.

அருட்சகோதரர் அவர்கள் துன்புறும் மக்களிடம் தனது பணியினை சிறப்புடன் ஆற்ற தேவையான ஆன்மீக பலத்தையும் உடல் நலத்தையும் இறைவனிடம் இறைஞ்சுவதோடு மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.

**தகவல் மற்றும் படங்கள்**
**திருமதி கிறிஸ்டினா அன்ரன் - இராஜகிரியா**



# දේව කැඳවීම් ඉරුදින
# VOCATION SUNDAY
# இறை அழைத்தல் ஞாயிறு
## 07-05-2017



# දෙනු මැන ඔබේම හද ඇති එඬේරුන්
# SEND US SHEPHERDS AFTER YOUR OWN HEART
# உம் இதயத்திற்கு உகந்த மேய்ப்பர்களை அனுப்பியருளும்

## இலங்கை ஆயர் பேரவையின் தலைவரின் செய்தி

திருச்சபையின் பணியினூடாக இவ்வுலகை புதுப்பிக்கவும் தூய்மைப்படுத்தவும் இறைவனிடமிருந்துவரும் பரிசே குருத்துவ மற்றும் துறவற அழைப்பாகும். இறையழைத்தல் என்பது செபத்தின் பயனாகும். ஏனெனில் ஆண்டவர் தாமே“அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்கு தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்” என உரைக்கின்றார்.

“என்னைப் பின்தொடர்” எனும் ஆண்டவரின் குரலிற்கு இளையோர் செவிகொடுக்கவும், தமது வலைகளையும், படகுகளையும், பாரம்பரியங்களையும் தம் தந்தையின் வீட்டையும் விட்டு அவரைப் பின் தொடர்ந்த தம் சீடர்களைப்போல தாராள மனத்துடனும் மகிழ்வுடனும் பதிலளிக்கவும் வேண்டுமென்பதே இந்த இறையழைத்தல் ஞாயிறில் எம் அனைவரது மன்றாட்டாகும்.

ஆண்பாலார் குருத்துவ பணிக்கு அழைக்கப்படும் அதேவேளை ஆண்களும் பெண்களும் அர்ப்பண வாழ்விற்கு ஆண்டவரால் அழைக்கப்படுகின்றனர். இயேசு, “அழைக்கப்பட்டவர் பலர் ஆனால் தேர்ந்து கொள்ளப்பட்டோரோ சிலர்” (மத். 22:14) எனக் கூறுகின்றார். ஒரு அழைத்தலானது தெய்வீக மற்றும் திருச்சபைக்குரிய பரிமாணங்களை கொண்டுள்ளது. இதுதெய்வீகமானது ஏனெனில், அழைப்பு கடவுளிடமிருந்து வருகின்றது. அவ்வாறே திருச்சபைக்குரியது ஏனெனில், கடவுள் உண்மையாகவே அம்மனிதனை அழைத்துள்ளாரா அல்லது அங்கு வேறேதும் நோக்கங்கள், அழுத்தங்கள் அந்நபரிடமிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ வந்து அவரை குருமடத்திற்கோ அல்லது துறவற மடத்திற்கோ செல்லகட்டாயப்படுத்துகின்றதா என திருச்சபையானது நன்கு பகுத்துணர்கின்றது. அதேபோல் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களை பல்வகை பரிமாணங்கள் ஊடாக திருச்சபையோடு மறைபணி ஆற்றுவதற்காக உருவாக்கி தயார் செய்கின்றது. “அழைக்கப்பட்டவர் பலர் ஆனால் தேர்ந்து கொள்ளப்பட்டோரோ சிலர்” எனும் தொடரானது திருமண விருந்து உவமையின் (மத் 22:1-14) பின்னணியில் நன்கு விளங்கிக் கொள்ளமுடியும். தனது மகனின் திருமண விருந்துக்கான உடைகளெல்லாம் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு கொடுக்கப்பட்டது. இரபூனிய உவமைகளின்படி உடையானது மண்டபத்திற்குள் நுழையவும் மேசையில் பந்தியமரவும் அவசியமான தயார் நிலையைக் குறிக்கின்றது....

தொடர்ச்சி 15 பக்கம்

குருக்கள் உங்களது நண்பர்கள். அவர்கள் உங்களுக்கு **திருமுழுக்கு** அளிக்கின்றனர், **திவ்ய நற்கருணைக்கும், உறுதிப்பூசுதலுக்கும்** தயார் செய்கின்றனர். கடவுளோடு ஒப்புரவாக்குகின்றனர். உங்களது **திருமணத்தை** ஆசீர்வதிக்கின்றனர். **நோயிற்பூசுதலால்** சுகம் தருவதுடன் ஒருநாள் உங்களது இறுதிச்சடங்கினையும் நடாத்துவர். இறைவனின் திருப்பெயரால் குருவே உங்களோடு கூட நடந்து **தொட்டில்** முதல் **சுடுகாடு** மட்டும் விண்ணகத்தின் வழியினைக் காட்டுகின்றார். **குருத்துவமும் துறவறமும்** புனிதமானவை. குருக்களும் துறவிகளும் உங்களது மகனும் மகளுமாவர். அவர்களுக்காகவும் வேண்டுங்கள். குருக்களும், துறவிகளும், குருமாணவர்களும் உங்களுக்காக மன்றாடுகின்றனர்.

**மின்னஞ்சல்:** nsakandy@sltnet.lk
**இணையத்தளம்:** www.nationalseminarysrilanka

**குருக்களும் துறவிகளும் தம்
மந்தைகளைக் கண்காணிக்க
தம்முயிர்த் தியாகம் செய்கின்றனர்.**

**எக்காலமும் அவர்கள்
கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்**

**கரங்கள் அவர்கள் மீது வைக்கப்பட்டன,
அவர்கள் கரங்கள்
திருப்பொழிவு செய்யப்பட்டன,
அபிசேகிக்கப்பட்டன.**

**குருத்துவ துறவற
இறையழைத்தல்களுக்காக செபிப்போம்!**

**நற்செய்திக்காக தம் வாழ்வை
தியாகம் செய்திட
உங்கள் மகன்மாரையும் மகள்மாரையும்
ஊக்குவியுங்கள்!**

**ஆன்மீக ரீதியாகவும் பொருள்
ரீதியாகவும்
உருவாக்கலின் இல்லங்களுக்கு
உதவுங்கள்!**



எல்லா உருவாக்கலின் இல்லங்களிலும்போல **“தேசிய குருமடத்தின் நண்பர்கள் பணித்திட்டம்”** எனும் மையப்பொருளின் கீழ் விசுவாசிகளின் வேண்டுதல்களுக்காக செபங்கள் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன. இவ் விசேட வேண்டுதலுக்காக தங்களது கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

## அம்பிட்டிய தேசிய குருமட அதிபரின் செய்தி

தனது நிலத்தில் பணிபுரியவென பணியாளர்களை அழைத்து அனுப்பும் (மத். 9:38) அறுவடையின் உரிமையாளராம் ஆண்டவர், “என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்குக் கொடுப்பேன்” (எரே. 3:15) என நிலையான வாக்குப்பிறழாமையுடன் உறுதியளித்துள்ளார். திருச்சபையில் என்றும் செயலாற்றுகின்ற இறைவனின் இந்த உயிருள்ள இவ்வாக்குப் பிறழாமையிலேயே அளப்பரிய தூய குருத்துவத்திற்கான அழைப்பினைப் பெறும் எதிர்ப்பார்ப்பானது தங்கியுள்ளது. “அவற்றைப் (மந்தைகளை) பேணிக்காக்க நான் மேய்ப்பர்களை நியமிப்பேன். இனி அவை அச்சமுறா: திகிலுறா: காணாமலும் போகா” (எரே. 23:4).

இறைவன் தன் “இதயத்திற்கேற்ற” மேய்ப்பர்களை திருச்சபைக்கு வாக்களித்துள்ளார். அவர் நல்லாயனாம் இயேசு கிறிஸ்துவின் இதயத்தில் தன் இதயத்தினை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். “ஆடுகளின் பெரும் ஆயரான” (எபி. 13:20) இக் கிறிஸ்து, தன் திருத்தூதர்களுக்கும் அவர்கள் வழிவருவோர்க்கும் கடவுளின் மந்தையைப் பேணிவளர்க்கும் பணியினை ஒப்படைத்தார். (காண்க. யோவா. 21:15, 1பேது. 5:2)

குருத்துவமென்பது இயேசு ஆண்டவர் தம் இதயத்தினது அன்பின் வெளிப்பாடும் மெய்யாகவே ஓர் மறைபொருளுமாகும். ஏனெனில் அதன் தொடக்கம், வளர்ச்சி மற்றும் புரிந்துகொள்ளல் என்பன கடவுளின் கைகளில் மட்டுமே உண்டு. அழைக்கப்பட்ட யாவரும் வெறுமனே தகுதியற்ற கருவிகளேயாவர்: அவருக்கு மட்டுமே தெரிந்த மறைபணிக்கென அவர் அவர்களைப் பயன்படுத்துகின்றார். கடவுளின் இச்செயற்திட்டத்தில் அவர்கள் ஒரு பாகம் மட்டுமே. அதன் உள்ளார்ந்த பண்பினை நோக்கும் போது இக்குருத்துவ மற்றும் துறவற அழைப்பானது, மிகப்பெரியதோர் மறைபொருளும், மனிதத்தினையும் தாண்டிய ஓர் பரிசுமாகும். நமது ஆண்டவர் தாமே இந்த மகத்தான பரிசினை திருச்சபைக்குத் தந்துள்ளார். எவ்வொரு இடையூறுமின்றி இறுதிநாள் வரையிலும் அவரது திருக்குருத்துவம் திருச்சபையினூடாக நிலைத்திருக்க அவர் விரும்பினார். எனவே, குருக்களின்றி, திருச்சபையின் இதயமான மறைத்தூது பணியினை ஆற்றிடவும், ஆண்டவரின் கட்டளையான, “நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்” (மத். 28:19) என்பதையும் நிறைவேற்ற இயலாது. “இதை என் நினைவாகச் செய்யுங்கள்” எனும் பணிப்பினால் நற்செய்தியை அறிவித்து நமதாண்டவரின் திருஉடல், திருஇரத்தப் பலியினை தினசரி புதுப்பித்திடவும் குருக்கள் அவசியம்.

அகில உலக ரீதியாக கொண்டாடப்படும் இறையழைத்தல் ஞாயிறான 07.05.2017 அன்று அன்னையாம் திருச்சபை, இறைவனின் குரலுக்கு செவிசாய்த்திட இளையோர்களை ஊக்குவித்து அவர்களுக்காய் செபிக்கின்றாள். அழைக்கப்பட்ட அனைவரும் இயேசு கிறிஸ்துவின் திருக்குருத்துவத்தில் பங்குகொள்ள அழைக்கப்படுகின்றனர். குருத்துவம் அல்லது அர்ப்பண வாழ்வினூடாக கடவுளின் மந்தையை மேய்க்கும் பொறுப்பிற்காய் இவர்கள் தங்களை அர்ப்பணிக்கின்றனர். மெய்யாக மறைபணியை நிறைவேற்றுவது வேறுயாருமல்ல மாறாக கடவுளின் பலமும் அவர்தம் வலிய கரங்களுமாகும். தாங்கள் வேரூன்றியிருப்பது அழைக்கும் ஆண்டவரின் அளப்பரிய வாக்குப்பிறழாமையிலன்றி....

தொடர்ச்சி 15 பக்கம்

දේව කැඳවීම් ඉරුදින ඔබගේ පරිත්‍යාගය
අම්පිටිය හා යාපනය දෙව්සත්හල් වෙනුවෙන් පුදන්න.
Make your offering on Vocation Sunday in aid of Major Seminaries of Ampitiya & Jaffna.
பெரிய குருமடங்களில் குருக்கள் உருவாக்கத்திற்கு உதவுங்கள்.
Rev. Fr. Rector, National Seminary of Our Lady of Lanka,Ampitiya. +94 81 2219874 / +94 81 2219586

# திருப்பீட பல்சமய உரையாடல் அவை

## 2017ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்டுள்ள வெசாக் செய்தி

## “கிறிஸ்தவர்களும் புத்த மதத்தினரும் வன்முறையற்ற பாதையில் ஒருங்கிணைந்து நடக்க”



1ம் பக்கத் தொடர்ச்சி

2. அமைதி மற்றும் வன்முறையற்ற கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்கான அவசரத் தேவையை இவ்வருடத்தில் சிந்திக்க விரும்புகின்றோம். இன்றைய உலகில் மதமானது முன்னிலையில் இருந்தபோதிலும், சில தருணங்களில் அது எதிரான வகையிலும் இருக்கின்றது. பல மத விசுவசாசிகள் சமாதானத்தை ஊக்குவிப்பதில் ஆர்வம் காட்டியபோதிலும், வன்முறை மற்றும் வெறுப்பு ஆகியவற்றை நியாயப்படுத்த மதத்தை சுரண்டுவோரும் இருக்கின்றார்கள். வன்முறையினால் பாதிக்கப்பட்டோருக்கும் வழங்கப்படும் சிகிச்சை மற்றும் நல்லிணக்கத்தை நாங்கள் கண்ட போதிலும் மற்றொவருடைய ஒவ்வொரு தடயத்தையும் நிகழ்வையும் முற்றாக அழிக்க முயற்சிப்பதையும் நாங்கள் காண்கின்றோம். உலகளாவிய மத ஒத்து-ழைப்பின் வெளிப்பாடுகள் தென்பட்டாலும் மறு-புறத்தில் மதத்தின் அரசியல்மயமாக்களும், இடம்-பெறுகின்றது. மனித வறுமை உலகின் பசி போன்றன பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டாலும் ஆயுத போராட்டம் தொடர்கின்றது. இப்படியான சூழ்நிலை வன்முறையற்ற நிலைக்கு எம்மை அழைத்து, அனைத்து வகையிலான வன்முறைகளை நிராகரிக்கவும் தூண்டுகின்றது.


3. இயேசு நாதரும் புத்த பெருமானும், அஹிம்சையையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு ஆதரவாக இருந்த-வர்கள். திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல “இயேசு வன்முறை காலத்தில் வாழ்ந்தவர், எனினும் அவர் படிப்பித்தது உண்மையான போர்க்களம் என்பது மனித இதயத்தில் அமைதியையும், வன்முறையையும் சந்திக்கும் இடமாக உள்ளது. காரணம் மனித இதயத்தில் இருந்தே தீய எண்ணங்கள் பிறக்கின்றன” (மாற்கு 7:21) (2017 ஆம் ஆண்டின் உலக அமைதி தினத்திற்கான செய்தி, “வன்முறையில் இல்லாமை அமைதிக்கான ஒருவகை அரசியல்”, இல 3) மேலும் திருத்தந்தை வலியுறுத்தியது “இயேசு அஹிம்சைப் பாதையை சுட்டிக்காட்டினார். அந்தப் பாதையில் இறுதி வரையில் சிலுவை மட்டும் சென்று, எமது சமாதானமாகி விரோதத்தை முறியடித்தார்” (எபே 2:14-16) அதன்படி “இயேசுவின் இன்றைய உண்மையான சீடர்களும் அவருடைய அஹிம்சைப் பற்றிய படிப்பினையை தழுவிக் கொள்பவர்களாக இருக்க வேண்டும்” (எபே 2:14-16)

4. அன்புள்ள நண்பர்களே, உங்கள் நிறுவுனர், புத்த பெருமான் வன்முறையற்ற சமாதானத்தின் செய்தியை பறைசாற்றினார். அவர் அனைவரையும் ஊக்குவித்தது “கோபத்தை கோபமற்ற நிலையால் வெல்லவும், நன்மைத்தனத்தால் தீமையை வெல்லவும் உலோபத்தன்மையை தாராள மனப்பான்மையால் வெல்லவும், பொய்மையை உண்மையாலும் வெல்லவும்” (தம்மபதம் இல 17,3) மேலும் அவர் படிப்பித்தது “வெற்றி பகைமையை உண்டாக்கும் தோல்வியுற்றோர் வேதனையில் வாழ்வார்கள். அமைதியில் உள்ளோர் மகிழ்ச்சியாக வாழ்வார்கள். வெற்றித் தோல்வி இரண்டையும் தவிர்ப்பார்கள் (தம்மபதம் இல 15,5) ஆகையினால் மற்றவர்களின் வெற்றியை விட தன்னையே வென்றெடுப்பது மேலானது என்று அவர் குறிப்பிட்டார். “போரில் ஒருவர் ஆயிரமாயிரம் பேரை ஆயிரம் தடவைகளில் வெற்றிக் கொண்டவனை விட, தன்னைத் தானே வெற்றிக் கொள்பவன் உயர்ந்த வெற்றியாளன்” (தம்மபதம் இல 8:4).

5. இவ் உன்னதமான போதனைகள் இருந்தபோதிலும், எம்முடைய பல சமூகங்கள் வன்முறை மற்றும் மோதல்களால் கடந்த காலத்தில் ஏற்பட்ட இன்னும் ஏற்படுகின்ற காயங்களோடு துன்பப்படுகின்றார்கள். இந்நிலை குடும்பங்களில் ஏற்படுகின்ற வன்முறைகள் மற்றும், பொருளாதார, சமூக கலாச்சார, உளவியல் வன்முறைகளையும் எமது பொது தங்குமிடமாகிய சூழலுக்கு எதிரான வன்முறையையும் அடக்குகின்றது.. துரதிர்ஷ்டவசமாக வன்முறை பிற சமூக தீமைகளை தூண்டுகின்றது. எனவே “அஹிம்சை தேர்வு ஒரு வாழ்க்கை பாணியாக ஒவ்வொரு மட்டத்திலேயும் பொறுப்பெற்க அதிகமாக அவசியம் உண்டு” (திருத்தந்தை பிரான்சிஸின் செய்தி, 15, மார்கழி 2016).


6. எமது இரு மதங்களும் தனித்துவத்தைக் கொண்டிருப்பதை நாம் ஏற்றுக்கொண்டு அவைகளில் அர்ப்பணத்தோடு செயற்பட்டாலும் வன்முறை மனித இதயத்தில் இருந்து தோன்றி தனிப்பட்ட தீமை, சமூக தீமைகளுக்கும் இட்டுச் செல்வதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இதனால் நாம் ஒரு பொதுவான செயல்பாட்டிற்கு அழைக்கப்படுகின்றோம். வன்முறைகளின் காரங்களை அறிந்து கொள்வதால் எம்மைத் தொடர்பவர்களுக்கு தம் இதயங்களில் உள்ள தீமைகளை எதிர்த்து போராடுவதற்கு கற்பித்தல், வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களையும் மற்றும் வன்முறையை கையாள்பவர்களையும், தீமையில் இருந்து விடுவித்தல் தீமையை ஒளிக்கு கொண்டு வருதல், வன்முறையை தூ-ண்டுவோருக்கு சவால் விடுத்தல். அனைவரின் இதயங்களையும், மனங்களையும் தகுந்த வகையில் உருவாக்கி குறிப்பாக குழந்தைகளின் இதயங்களை அனைவருக்கும் அன்பு செய்து அவர்களுடன் எமது சூழலுடனும் அமைதியாக வாழக் கற்றுக்கொடுத்தல், நியாயம் இல்லாமல் அமைதி இல்லை மன்னிப்பு இல்லாமல் உண்மையான நீதி இல்லை, என்பதைப் படிப்பித்தல் முரண்பாடுகளை தவிர்க்கும் மற்றும் உடைந்த சமூதாயங்களை மீண்டும் கட்டமைப்பதில் அனைவரையும் ஒன்றுபட்டு உழைக்க அழைப்பு விடுத்தல், வெறுக்கத்த பேச்சுக்களை தவிர்க்கவும், எதிர்மறையான மற்றும் அனாவசியமான தகவல்களை எதிர்கொள்ள ஊடகங்களை ஊக்குவித்தல், கல்வியை சார்ந்த சீர்த்திருத்தங்களை ஏற்படுத்தவும் வரலாறு மற்றும் மறைநூல்கள் பற்றிய தவறான விளக்கங்களை தவிர்த்துக் கொள்ளுதல், வன்முறையற்றப் பாதையில் ஒன்றாக செல்லும் அதேவேளையில் உலக அமைதிக்காக செபிப்போம்.

7. அன்புள்ள நண்பர்களே, எங்கள் குடும்பங்களில், சமூக, அரசியல், சிவில் மற்றும் மத நிறுவனங்களில் வன்முறை நிராகரிக்கப்படும், மனித நபர் மதிக்கப்படும் ஒரு புதிய வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதற்காக நாங்கள் தீவிரமாக எம்மை அர்ப்பணிப்போம். இப்படியான ஆன்மீக மனப்பாட்டில் மீண்டும் உங்களுக்கு அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த வெசாக் பண்டிகை வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.



**கர்தினால் ஜீன் லூயில் கிரான்**

**தலைவர்**



**ஆயர் மிகுவல் ஆங்கல் ஆயுஸோ கிகோட் MCCJ**

**செயலர்**

## 20வது வருடாந்த தேசிய கிறிஸ்தவ பேரணி இத்தாலி....

1ம் பக்கத் தொடர்ச்சி


இத்தாலியின் பாதுவா நகரின் புனித அந்தோனியார் பெசிலிக்காவில் வருடாந்தம் நடாத்தப்படும், இத்தாலியில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கை மக்களால் நடாத்தப்படும் தேசிய கிறிஸ்தவ பேரணி 20வது முறையாக இவ்வருடமும், ஆயிரக்கணக்கான விசுவாசிகளின் பங்குபற்றுதலோடு வைகாசி மாதம் 01ஆம் திகதி, புனித சூசையப்பரின் திருவிழாவன்று வெகு சிறப்பாக, நடைபெற்றது.

இலங்கைத் தீவின் கத்தோலிக்க மக்களின் அன்பிற்கு பாத்திரமான பாதுவா புனித அந்தோனியாரின் பரிந்துரை நாடி, செபிப்பதற்கும், அவரது பரிந்துரையால் தாம் பெற்ற நன்மைகளுக்கும் நன்றி கூறுவதற்காகவும் வருகைத் தந்த விசுவாசிகளுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழா திருப்பலியை, குருநாகல் மறைமாவட்ட ஆயரும், வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையருக்கான, இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் பிரதிநிதியுமான மேதகு ஹெரல்ட் அன்ரனி ஆண்டகை அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியின் நிறைவில் பாதுவா புனித அந்தோனியாரின் திருப்பண்டத்தை ஏந்திச் சென்ற பவனியும், ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

இத் தேசிய கிறிஸ்தவ பேரணிக்கான நிகழ்வினை, இத்தாலியில் புலம்பெயர்ந்து வாழும்





கத்தோலிக்க மக்களுக்கான தேசிய இயக்குனர் வண. அருட்பணி நெவில் ஜோ பெரேரா அடிகளாரின் தலைமையில், புலம்பெயர்ந்து வாழும் இலங்கை கத்தோலிக்க மக்களின் ஆன்மீக இயக்குனர்களான அருட்தந்தையர்களாலும், இவ்வருடம் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# புனித யோசேவ்வாஸ்



இலங்கைத் தூதுவராம் யோசேவ்வாஸ்
நம் பாதுகாவலராம் யோசேவ்வாஸ்
நல்ல புனிதராம் யோசேவ்வாஸ்
நாமும் அவர் போல் வாழுவோம்.

கோவாவில் பிறந்தவராம் யோசேவ்வாஸ்
இலங்கைக்கு வந்தவராம் யோசேவ்வாஸ்
அயலருக்காய் இலங்கை வந்தாராம் யோசேவ்வாஸ்
நாமும் அவர் போல் வாழுவோம்.

கண்டியில் பெரும் வறட்சி வந்துவிட
அமைதியாய் நின்று செபித்தாரே
மழையும் சோவென பொழிந்ததே
நாமும் அவர் போல் வாழுவோம்.

**ஆக்கம் : N. சேர்லின் சுகாந்தன், தரம் 9, புனித மரியாள் ஆலயம், மட்டக்குளி.**

# புனிதர்கள் யார்?

புனிதர்கள் எல்லோரும் அடிப்படையில் மனிதர்கள். உலகில் உள்ள எல்லோருமே கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டவர்கள். புனிதர்கள் என்பவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த போது இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்து, தங்கள் வாழ்வின் மூலம் மற்றவர்களுக்கு இறைவனைக் காண்பித்து இன்றும் இறைவனோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்களே.

புனித யோசவ்வாஸ் இவ்வாறு தனது வாழ்க்கையில் நாட்டையும், பெற்றோரையும், உற்றார் உறவினர்களையும், நண்பர்களையும் விட்டு, விட்டு இலங்கைக்கு வந்து தனது வாழ்க்கையை அர்ப்பணித்து இறை வார்த்தையை போதித்தார்.

## நானும் புனித யோசேவ்வாஸைப் பின்பற்றி

எனது கல்வியில் கவனம் எடுப்பேன்,
பாரபட்சமின்றி அனைவரையும் அன்பு செய்வேன்,
நல்ல வார்த்தைகளைப் பேசி பிறரை மகிழ்விப்பேன்,
தீய வழிகளில் செல்வோருக்கு அறிவுரை கூறுவேன்.
செபத்திலும் வழிபாடுகளிலும் பக்தியோடு பங்குபற்றுவேன்
மரியாதையாகப் பிறருடன் நடந்துக் கொள்வேன்
பிறர் தேவைகளில் அக்கறையோடு உதவுவேன்
தியாகத்துடன் வாழ முற்படுவேன்
எப்போதும் உண்மை நேர்மையுடன் நடப்பேன்

இவ்வாறு வாழ்வதன் மூலம் புனிதையாக வாழ முயற்சிப்பேன்.

**ஆக்கம் : S. நிதுஷா, தரம் 9, புனித மரியாள் ஆலயம், மட்டக்குளி.**

# புனித யோசேவ்வாஸின் பெற்றிக்கான காரணிகள்

- தாம் மேற்கொண்ட எல்லா முயற்சிகளிலும் இறை பராமரிப்புக்கும் தம்மை முற்றாக கையளித்து வாழ்ந்தமை
- இவருக்கு முற்பட்ட காலத்தில் போர்த்துக்கேய மறைப்பணியாளர்கள் குறிப்பாக பிரான்சிஸ்கன் சபையினர், இயேசு சபையினர் வினைத்திறன் மிக்க மறைபரப்பு முறையை கையாண்டமை
- வாஸ் அடிகளின் அர்ப்பணமும், உழைப்பும் நிறைந்த எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்ந்தமை
- வாஸ் அடிகளுக்கும், ஒரற்றோரியன் சபை குருக்களுக்கும் இலங்கை கத்தோலிக்க மக்கள் இன்னல்கள் மத்தியில் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கியமை
- ஒரற்றோரியன் சபையினர் வழங்கிய ஆதரவு : வாஸ் அடிகள் காலம் முதல் தொடர்ச்சியாக இங்கு பணியாற்றுவதற்கு ஒரற்றோரியன் சபை குருக்களை அனுப்பியமை
- 2ம் விமலதர்ம சூரிய, நரேந்திர சிங்க ஆகிய மன்னர்கள் உதவிகள் பல செய்தமை

**ஆக்கம் : C. ஷெரீனா காமல், தரம் 9, இ/பாலர் இயேசு கன்னியர் மடம். தே. பா**

# மகனே என் அன்பை நினைத்துக்கொள்

அடிக்கடி நிலநடுக்கங்கள் இடம்பெறும் ஜப்பானில், ஒருசமயம், கடுமையான நிலநடுக்கம் நடந்த பின்னர், மீட்புக்குழு ஒன்று, ஓர் இளம் தாயின், இடிந்துபோன வீட்டிற்குச் சென்றது. அங்கே, இடிபாடுகளுக்கு நடுவே, அந்தத் தாயின் உடலை, அக்குழுவினர் கண்டனர். அவ்வுடல், ஒரு பிரார்த்தனைக்காக மண்டியிட்டிருப்பது போன்று, முழந்தாளிட்ட வண்ணம் முன்னோக்கி வளைந்திருந்தது. சுருட்டிய துணிக் குவியல் ஒன்று, அவரது இரு கைகளையும் தாங்கி நின்றிருந்தது. இடிந்து விழுந்த வீடு, அவர் முதுகிலும் தலையிலும் பலத்த காயங்களை ஏற்படுத்தியிருந்தது. குளிர்ந்து விறைத்திருந்த அப்பெண்ணின் சடலம், சற்று வித்தியாசமாக இருந்ததால், அந்தக் குழுத்தலைவரின் உள்ளத்தில் ஓர் உள்ளுணர்வு. அவர், அந்தத் தாய்க்கு அடியில் இருந்த துணிக் குவியலை கைகளால் தடவிப் பார்த்தார். அதில், ஒரு குழந்தை இருந்ததைக் கண்டு, மற்றவர்களையும் உடனடியாக, அவர் உதவிக்கு அழைத்தார்.

எல்லாரும் சேர்ந்து, அந்தத் தாயின் சடலத்தை மூடியிருந்த சிதைவுகளை, மிகக் கவனமாக அகற்றினர். தாயின் சடலத்தின் அடியில், இன்னும் உறக்கம் கலையாத, மூன்று மாதப் பிஞ்சுக் குழந்தை, பூப்போட்ட ஒரு போர்வைத் துணிக்குள் பொதிந்து வைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழந்தையைக் கையில் எடுத்தபோதும், அதன் அமைதியான உறக்கம் கலையவில்லை. குழந்தையின் உடல்நிலையைப் பரிசோதிப்பதற்காக மருத்துவர் அவசரமாக அழைக்கப்பட்டார். குழந்தையைச் சுற்றியிருந்த பூத்துணியை திறந்தபோது அதற்குள் ஒரு கைபேசி இருந்தது. அதன் முகப்பில் ஒரு குறும்செய்தி காணப்பட்டது. "மகனே, நீ உயிர் பிழைத்தால், நான் உன்னை அன்புகூர்கிறேன் என்பதை நினைவில் வைத்துக்கொள்" என்ற அந்தச் செய்தியை, ஒருவர் மாற்றி ஒருவர் வாசித்தனர். வாசித்த ஒவ்வொருவரது உள்ளமும் விம்மியழுதது.

**தாயன்பிற்கு இணையேதும் உண்டோ?**

**ஆம். தாயிற் சிறந்ததொரு கோவில் இல்லை.**

அன்னையர் தினத்தன்று நாமும் நம் அன்னையர்க்கு வாழ்த்துத் தெரிவித்து அவர்களிடம் ஆசீரைப் பெறுவோம்.

## அன்னையர் தினம் — வைகாசி 14




# பொன்மொழிகள்

1. அன்புள்ள இதயம் இன்பத்தின் ஊற்று, அதைச் சுற்றியுள்ளவர்களின் முகங்களெல்லாம் புன்னகையுடன் விளங்கும்.
2. உண்மையாய் இருக்க துணிவு கொண்டவருக்கு, பொய் எதற்கும் தேவைப்படுவதில்லை.
3. நீயும் வாழு, பிறரையும் வாழவிடு. இதுவும் அகிம்சையின் தத்துவம்தான்.
4. எந்தப் பேச்சானாலும் தீர ஆலோசனை செய்த பிறகே பேச வேண்டும்.
5. கோபம் அன்பை அழிக்கிறது, செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.
6. நல்ல நட்டை இழப்பதைவிட, கொஞ்சம் பணத்தை இழப்பது மேலானது.
7. பாவச் செயல்கள் முடிவில் துன்பம் தரும்.
8. உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர் நாடி
9. இளமையில் சூதாடுபவர்கள், முதுமையில் பிச்சை எடுப்பார்கள்.
10. வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ வைப்பதில் தான் இருக்கிறது.






ஆக்கம் : U. ருக்ஷான், தரம் - 1, புனித சூசையப்பர் மறைப்பாடசாலை, பலாங்கொடை



ஆக்கம் : B. ஜோன் எரிக்சன், தரம் - 8, புனித மரியாள் மறைப்பாடசாலை, மட்டக்குளி





# உண்மையாக மட்டுமல்ல, நேர்மையாகவும் கூட!

## மாணவர் ஒளி

கல்லூரிக்கு யாரும் தாமதமாக வரக்கூடாது என்பது அக்கல்லூரியின் ஒழுங்குமுறை. சீனிவாசன் என்ற மாணவன் ஒருமுறை கல்லூரிக்குத் தாமதமாகச் செல்கிறான். அக்கல்லூரி சட்டப்படி ஆசிரியர் அவனை வகுப்புக்கு வெளியே அனுப்புகிறார். அபராதத் தொகையாக "ஐந்து ரூபாய்" கட்டச் சொல்கிறார். சட்டை வாங்குவதற்குக்கூட வசதியில்லாத வீட்டில் பிறந்தவனால் அபராதத் தொகையை எப்படிக் கட்டமுடியும்? தலைகுனிந்து நின்ற அவன், தான் தாமதமாக வந்ததற்கான காரணத்தை ஆசிரியருக்கு விளக்குகிறான். "என்னிடம் இருப்பது இந்த ஒரே ஒரு சட்டைதான். மாலையில் கல்லூரிக்கு போட்டுக்கொண்டு வருவது வழக்கம். நேற்று இரவில் பெய்த மழையில் சட்டை நனைந்துவிட்டது. காலையில் அதை உலர வைக்க சற்று தாமதமானது. வேண்டுமென்று நான் தாமதமாகப் புறப்படவில்லை" என்ற தன்னிலை விளக்கத்தைக் கொடுக்கின்றான்.

உண்மையாகவும், நேர்மையாகவும் வாழ்பவர்களுக்கு பல வழிகளில் - கடவுளிடமிருந்தும், மகான்களிடமிருந்தும், புனிதர்களிடமிருந்தும் நன்மைகள் வந்து சேரும். அவற்றை யாரும் தடுக்க முடியாது.

உண்மையாகவும் நேர்மையாகவும் பேசிய மாணவனான சீனிவாசனுக்குப் பேராசிரியர் தனது சொந்தப் பணத்திலிருந்து இரண்டு சட்டைகள் வாங்க பணம் கொடுக்கிறார். அதைப் பெற்றுக்கொண்ட மாணவன் படிப்பில் இன்னும் அதிக கவனம் செலுத்துகின்றான். ஆங்கிலேயர்களே வாயில் கைவைத்து வியக்குமளவு ஆங்கிலப் புலமை பெறுகின்றான். காலச்சுழற்சியில் ஆசிரியரும், மாணவரும் வெவ்வேறு திசைகளில் இருக்கிறார்கள். ஒரு நாள் லண்டன் மாநகர செய்திப் பத்திரிகை, வானொலி என எல்லா ஊடகங்களிலும் முக்கியச் செய்தியாக ஓர் இந்தியன் லண்டனில் பேசிய ஆங்கிலப் பேச்சு பிரமாதமாக வர்ணிக்கப்படுகின்றது. அந்த நபர்தான் Silver tongued Srinivasan சட்டை வாங்க வசதியில்லாமல் கல்லூரியில் படித்தவன். வானொலியில் கொடுக்கப்பட்ட வர்ணனை எங்கோ பயணித்துக் கொண்டிருந்த ஆசிரியரின் காதுகளில் விழுகிறது. அவன் தனது இந்திய மாணவன் என்பதைப் புரிந்து கொண்ட ஆசிரியர் அவனோடு தொடர்பு கொள்கிறார்.

இவரைப் பற்றிய செய்திகள் மகாத்மா காந்தி நூல்கள் படிப்போருக்குத் தெரியும். ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சிபுரிந்த காலத்தில் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பது எளிது அல்ல. அன்று அனைவருக்கும் கல்வி வழங்கப்படவில்லை. ஒரு சிலரால் மட்டுமே கற்க முடிந்தது. குழந்தைகளைப் படிக்க வைக்கும் வசதியும் அன்றைய பெற்றோர்களிடம் இல்லை. நூறு விழுக்காடு படிப்பில் நாட்டம் இருந்தவர்கள் மட்டுமே அன்று வறுமையிலும் உயர்கல்வி கற்றார்கள்.

இப்போது படிக்கும் மாணவர்களுக்கு இவர் முன் உதாரணமானவர். பிறருக்குத் தெரிந்துவிடக் கூடாது என்ப் பலரும் ஏழ்மையை மறைப்பர். ஒருவரின் பிறப்பு இல்ல, வாழும் விதமே அவரை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.

**"ஏழையாகப் பிறப்பது உன் தவறல்ல,**
**ஏழையாக இறந்தால் அது உன் தவறு!"**

என எழுதினார் ஒரு சிந்தனையாளர். உண்மையும், நேர்மையும் வாழ்வில் சங்கமம் ஆகும்போது எந்த உயரத்துக்கும் அது ஒருவரை உயர்த்தும். ஒருவர் உயர விரும்பும் எல்லையை அடைய ஏழ்மை ஒருபோதும் தடையாக நிற்காது.

படிக்கும் காலத்திலேயே நேர்மையாக ஒருவர் இல்லாவிட்டால் பணிபுரியும் காலத்திலும், குடும்பத்தை அமைக்கும் காலத்திலும், பொருள் ஈட்டும் விதத்திலும், செலவு செய்யும் முறையிலும், வரி செலுத்தும் வங்கியிலும் நேர்மையற்ற தன்மையை அவர் வெளிப்படுத்துவார்.

"உண்மையுள்ள", "நேர்மையுள்ள", "கீழ்ப்படிதலுள்ள", "அன்புள்ள", "பணிவுள்ள", "மரியாதைக்குரிய" போன்ற வார்த்தைகளின் முக்கியத்துவம் பாடசாலை காலத்திலேயே கற்றுத் தரப்படுகின்றன. மறந்துவிட்டதா? உறவினர்கள், பெரியவர்கள், அதிகாரிகள் ஆகியோருக்குக் கடிதங்கள் எழுதும்போது யார் யாரை, என்ன அடைமொழி கொடுத்து அழைக்க வேண்டும் என்று கற்றுத் தரப்படுகின்றது. ஆனால், தேர்வில் பெறும் மதிப்பெண்களால் அவற்றின் முக்கியத்துவம் மறந்துவிடுகின்றது.

மந்திர சக்தியுடைய இந்த வார்த்தைகளைப் புரிந்து பயன்படுத்தும் போது வாழ்க்கை நெறிகளும் அவற்றோடு இணைந்தே செயல்படும். பெற்றோர் - உறவினரிடம் எப்போதும் பாசமாகவும், உயர் அதிகாரிகளுக்கு நம்பிக்கைக்குரிய உழைப்பாளியாகவும், மூத்தோருக்கு பணிவுள்ள நபராகவும், நண்பர்களுக்கு நேர்மையான அன்பனாகவும், பணிபுரியும் நிறுவனம் அல்லது அமைப்புக்கு நேர்மையும், உண்மையும், நம்பிக்கையும் உள்ள உத்தமனாகவும் வாழத் தெரிந்தால் வெற்றியும், மதிப்பும் ஒருவர் செல்லும் இடமெல்லாம் பின்தொடர்ந்து செல்லும்.

யார் யாரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொண்டால் ஒருவருக்குப் பகைவர்களே இருக்கமாட்டார்கள். உருவாகவும் மாட்டார்கள். பாடசாலைப் பருவத்திலிருந்தே அடிப்படையாகக் கற்றுத் தரப்படும் வார்த்தைகள் சாதாரணமானவையல்ல, ஒருவரது வாழ்க்கையின் அடித்தளத்தையே புரட்டிப் போடும் ஆற்றல் வாய்ந்தவை. உண்மையும், நேர்மையும் எங்கே கைகோர்த்துக் கொண்டு பயணிக்குமோ, யாருடைய வாழ்வில் உண்மையும், நேர்மையும் இணையுமோ அவர்களது வாழ்வு கண்டிப்பாக வரலாறு படைக்கும்.

வரலாற்றின் இனிமையான பக்கங்களைப் புரட்டிப் பார்த்தோமென்றால் அங்கே அவர்களது பெயர்கள் கண்டிப்பாக இடம்பெற்றிருக்கும். வாழ்வில் வெற்றி அடைய வேண்டும் என்று விரும்புபவர்கள் அன்றாட வாழ்வின் செயல்பாடுகளில் சில குறிப்பிட்ட வார்த்தைகளை மனதில் பதித்து, அதன்படி செயல்பட்டாலே வெற்றியடைய முடியும்.

**"உண்மையும் - நேர்மையும் உழைப்பில் சேரட்டும்,**
**அன்பும் - பாசமும் உறவில் இணையட்டும்,**
**பண்பும் - பணிவும் பணியில் பரவட்டும்,**
**வெற்றியும் - அமைதியும் வாழ்வில் நிலைக்கட்டும்!"**

உண்மையும், நேர்மையும் இணைந்திருப்பவர்களிடம் கடவுள் வலிய வந்து உதவுவார். கடவுள் எப்போதும் நேர்மைக்குத் துணையாக நிற்பார் என்பதை பின்வரும் உரையாடல் நமக்கு உணர்த்தும்.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற ஆபிரகாம் லிங்கன் அடிமை முறையை ஒழிக்கப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில் ஓர் அருட்பணியாளர் அவரிடம் வந்து "ஜனாதிபதி அவர்களே! நம்முடைய இந்த மாபெரும் இயக்கத்துக்கு கடவுள் துணையாக இருந்து வருகின்றார் என்று நம்புவோமாக" என்றார். அதற்கு லிங்கன் "தந்தையே! அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் கடவுள் எப்போதும் நியாயத்துக்கும், நேர்மைக்கும் துணையாக இருப்பார். நான் கவலைப்படுவதும், பிரார்த்திப்பதும் நானும், இந்த நாட்டு மக்களும் எப்போதும் கடவுளுக்குத் துணையாக இருக்க வேண்டும் என்பதே" என்றார்.

வெற்றியையும், வளமையான வாழ்வையும் கடவுள் நமக்கு தர தயாராக இருந்தாலும், அதைப் பெற்றுக் கொள்ளும் தகுதி நமக்கும் வேண்டும் அல்லவா! அந்தத் தகுதி உண்மையும், நேர்மையுமே!

**உண்மை நமக்கு முன் செல்ல வேண்டும்,**
**நேர்மை நம்மோடு இருக்க வேண்டும்!**




**அன்னையே...**

**வாய்மை ஒன்றினையே வாழ்வாகக் கொண்டு**
**தாய்மை என்பதன் இலக்கணமாய் நின்று**
**சேய்மை அன்பை இரண்டிலும் நிறைந்து**
**தூய்மை மனத்துடன் எந்தனை காத்து**
**மண்ணுலகில் பிறவிதந்து எனைஈன்ற**
**விண்ணின் சுடராம் ஆதவனை நிகர்க்கும்**
**அற்புதமே!**
**கண்ணே என்றென தழுவிடும் அன்னையே!**
**உந்தன் அன்பினை**
**ஓங்கி உயர்ந்த மலையென்பேனா!**
**தாங்கி நிற்றிடும் பூமி என்பேனா!**
**பொங்கி ஆற்றிடும் கடல் என்பேனா!**
**எந்த சொல் சொன்னாலும் அன்னை என்ற**
**சொல்லுக்கு எச்சொல்**
**நிகராகும் அன்னையே இருகரம் கூப்பி**
**தொழுகிறேன் நின்னையே!**
**வாழும் நாளெல்லாம் வாழ்வாங்கு வாழ்க!**

# அன்னையரைப் பற்றி சில அழகிய எண்ணங்கள்...




முழுமையான, கலப்படமற்ற உண்மைகளைச் சொல்வதற்குத் தகுந்தவர்கள் அன்னையர் மட்டுமே - Margaret Dilloway

என் அன்னை வெளிப்புறத்தில் மென்மையாகவும், உள்ளுக்குள், வைரம் பாய்ந்த உறுதியோடும் இருப்பவர். நான் வளர்ந்த பின், என் அன்னையைப்போல இருக்க விழைகிறேன் - Jodi Picoult

தாய்மை என்பது, நீ தினமும் தேர்ந்தெடுக்கக் கூடிய பண்பு... உன்னுடைய மகிழ்வுக்கு முன்னதாக மற்றவரின் மகிழ்வை நீ வைக்கும்போது, கடினமான பாடங்களைச் சொல்லித்தரும்போது, நீ செய்வது சரியானதா என்று தெளிவாகத் தெரியாதபோதும், சரியானதைச் செய்ய விரும்பும்போது, மீண்டும், மீண்டும் உன்னையே நீ மன்னித்துக்கொள்ளும்போது, தாய்மையை நீ தேர்ந்தெடுக்கிறாய் - Donna Ball

# “இரக்கத்தின் முகம்“ ஆவணப்படம் வெளியீடு




இறை இரக்கம் என்பது வெறும் பக்தி முயற்சி அல்ல, மாறாக, அது, இவ்வுலகில் இன்றும் வாழும் உண்மை என்றும், இவ்வுலகை மாற்றும் வலிமை பெற்றது என்றும் Knights of Columbus அமைப்பின் தலைவர், Carl Anderson அவர்கள், ஒரு திரைப்பட வெளியீட்டு நிகழ்வில் கூறினார் என்று CNA கத்தோலிக்கச் செய்தி கூறியுள்ளது.

'The Face of Mercy' அதாவது, “இரக்கத்தின் முகம்“ என்ற தலைப்பில், Knights of Columbus அமைப்பினர் உருவாக்கியுள்ள ஒரு மணிநேர ஆவணப்படம், அண்மையில் வெளியிடப்பட்ட வேளையில், Anderson அவர்கள் இவ்வாறு கூறினார்.

கிறிஸ்துவின் பாடுகளை மையப்படுத்தி, 2004ம் ஆண்டு வெளியான, 'The Passion of the Christ' என்ற புகழ்பெற்ற திரைப்படத்தில், இயேசுவின் பாத்திரமேற்று நடித்த, Jim Caviezel என்ற நடிகர், இந்த ஆவணப்படத்தின் தொகுப்புரையை, பின்னணியில் வழங்கியுள்ளார்.

இறை இரக்க பக்தியின் வரலாறு, இறையியல் இவற்றுடன், தனிப்பட்டவர்கள் வாழ்வில் இறை இரக்கம் ஆற்றிய நன்மைகள் குறித்த சாட்சியப் பகிர்வுகள் இத்திரைப்படத்தில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

ருவாண்டா நாட்டில் நிகழ்ந்த இனப் படுகொலைகளில் தன் குடும்பத்தினர் அனைவரையும் இழந்த Immaculée Ilibagiza என்ற பெண், தன் குடும்பத்தினரைக் கொலை செய்தவர்களை எவ்வாறு மன்னித்தார் என்பதும், நியூ யார்க் நகரில் நிகழ்ந்த ஒரு துப்பாக்கிச் சூட்டினால், தன் உடலில், இடுப்புக்குக் கீழ் செயலற்று, சக்கர நாற்காலியில் வாழும் காவல்துறை அதிகாரி ஒருவர், அந்நகரில் சமாதானத்தைக் கொணர எவ்வாறு முயற்சிகள் மேற்கொள்கிறார் என்பதும் இத்திரைப்படத்தில் விளக்கப்பட்டுள்ளன. அதே வண்ணம், ஓர் இளம் கைம்பெண், தன் கணவரைக் கொன்றவர்களை எவ்விதம் மன்னித்துள்ளார் என்பதும், அமெரிக்க கால்பந்தாட்ட வீரர் ஒருவர், வீடற்றவர்களுக்கு பணியாற்றுவதும், இத்திரைப்படத்தில் இடம்பெற்றுள்ளன.

# மரியன்னை சகோதரர்கள் துறவு சபைக்கு
## திருத்தந்தையின் செய்தி

Marist Brothers என்றழைக்கப்படும் மரியன்னை சகோதரர்கள் துறவு சபை, தன் 200ம் ஆண்டை சிறப்பிக்கும் தருணத்தில், அச்சபையின் 22வது பேரவை, கொலம்பியா நாட்டில் நிகழ்வதையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அச்சபையினருக்கு மடல் ஒன்றை அனுப்பியுள்ளார்.

Marist சகோதரர்கள் சபையின் உலகத் தலைவர், சகோதரர், Emili Turú Rofes அவர்களுக்கு இஸ்பானிய மொழியில் திருத்தந்தை அனுப்பியுள்ள இம்மடலை, வத்திக்கான் செய்தித் துறை கடந்த மாதம் 18ம் திகதி வெளியிட்டது. இறைவன் செய்துள்ள நன்மைகளையும், சபையின் பாரம்பரியம் வழங்கியுள்ள நன்மைகளையும் நன்றியோடு நினைத்துப் பார்ப்பது-, நம்மை நன்றி நிறைந்தவர்களாக, பணிவுள்ளவர்களாக மாற்றுகிறது என்று, திருத்தந்தை தன் மடலின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்து வந்த 200 ஆண்டுகளைத் திரும்பிப் பார்ப்பது மட்டும் போதாது, இன்றைய தருணத்தில் நமக்கு விடுக்கப்படும் அழைப்பை உணர, தேர்ந்து தெளியும் மனநிலையையும் நாம் பெறவேண்டும் என்று திருத்தந்தை தன் மடலில் கூறியுள்ளார். கல்விப்பணி, மற்றும் இளையோரை உருவாக்கும் பணியைக் குறித்து, புனித Marcellin Champagnat, தான் வாழ்ந்த காலத்தில், தேர்ந்து தெளிந்ததோடு, ஒருவர் மீது காட்டும் அன்பின் வழியாக, அவரிடம் உள்ள மிகச் சிறந்த குணங்களை வெளிக்கொணர முடியும் என்பதையும் இப்புனிதரின் வழியே நாம் கற்றுக்கொள்ள முடியும்

marists 2017
a new beginning

என்று திருத்தந்தை இம்மடலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி என்பது வெறும் அறிவு சார்ந்த பணியல்ல, மாறாக, அது உள்ளத்தையும் உருவாக்கும் பணி என்பதை Marist சகோதரர்கள் சபையின் நிறுவனர் நன்கு உணர்ந்திருந்தார் என்று திருத்தந்தை இம்மடலில் கூறியுள்ளார்.

உறுதியான, உண்மையான கொள்கைகளின் அடிப்படையில் சிறந்ததோர் உலகை உருவாக்குவது கல்வியாளர்களின் முக்கிய பணி என்று கூறியத் திருத்தந்தை, Marist சகோதரர்கள் சபையைச் சார்ந்த அனைவரும் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்க வேண்டும் என்று இம்மடலின் இறுதியில் அழைப்பு விடுத்துள்ளார்.

# அசிசி நகர் புதிய திருத்தலத்திற்கு
## திருத்தந்தை வாழ்த்து



அசிசி நகர் புனித பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக, தன் ஆடைகள் உட்பட, எல்லாவற்றையும் துறந்ததன் நினைவாக திருத்தலம் ஒன்று எழுப்பப்படுவதற்கு, தனது நன்றியையும் ஆதரவையும் தெரிவித்து, நல்வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அசிசி பேராயர் Domenico Sorrentino அவர்களுக்கு, திருத்தந்தை அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், பிறரின் நலனுக்காக அனைத்தையும் துறந்த புனித பிரான்சிஸ் அவர்களின் மனநிலையைப் பின்பற்றி, கத்தோலிக்கத் திருஅவையும், ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவை பின்செல்லுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். நற்செய்தி அறிவிக்கப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகள் மற்றும், புனித பிரான்சிசின் சாட்சிய வாழ்வின் எண்ணூறு ஆண்டுகளுக்குப் பின்னும், உலகளாவிய சமத்துவமற்ற பொருளாதார நிலையை நாம் எதிர்கொள்கிறோம் எனவும், இப்புதிய திருத்தலம், பணத்தின்மீது பற்றறுத்து வாழ்வதற்கு அழைப்பு விடுக்கின்றது எனவும் கூறியுள்ளார் திருத்தந்தை.

அசிசி நகரில் அமைக்கப்படும் இப்புதிய திருத்தலம், வருகிற மே 20ம் தேதி அருள்பொழிவு செய்யப்படவிருக்கின்றது. இதிலுள்ள, புனித பிரான்சிஸ் ஆடைகளைக் களைந்த அறையும், பொது மக்களுக்குத் திறந்து விடப்படும். இந்த அறை, புனித பிரான்சிஸ், கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு முன்னர், தன் தந்தை மற்றும் அசிசி ஆயர் முன்னிலையில் ஆடைகளைக் களைந்து, தன் சொத்துக்களைத் துறந்த இடமாகும். இது, அசிசி ஆயர் இல்லத்தில் உள்ளது. 2013ம் ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அசிசி நகருக்குச் சென்றபோது, இந்த அறையிலே, உள்ளூர் கத்தோலிக்கப் பிறரன்பு அமைப்புகளின் உறுப்பினர்களையும், குடும்பங்களையும் சந்தித்தார்.

வத்திக்கான் வானொலி செய்திகளை
**http://ta.radiovaticana.va/** என்ற
இணையத்தளத்தில் பார்வையிடலாம்.




# “வெள்ளை ஞாயிறு”
## - திருத்தந்தையின் அல்லேலூயா வாழ்த்துரை




உயிர்ப்புப் பெருவிழாவுக்கு அடுத்துவரும் ஞாயிறு, “வெள்ளை ஞாயிறு” என்று அழைக்கப்பட்ட பாரம்பரியத்தின் பின்னணியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சித்திரை 23, ஞாயிறன்று வழங்கிய அல்லேலூயா வாழ்த்தொலி உரையில் விளக்கிக் கூறினார். ஞாயிறு நண்பகலில், புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அல்லேலூயா வாழ்த்தொலி உரை வழங்கியத் திருத்தந்தை, உயிர்ப்பு பெருவிழாவன்று திருமுழுக்கு பெற்றவர்கள், தொடர்ந்து ஏழு நாள்கள் வெள்ளை உடையணிந்து வந்தனர் என்றும், உயிர்ப்புக் காலத்தின் 2ம் ஞாயிறன்று, தங்கள் வெள்ளை உடையைக் களைந்து, வேற்று உடைகளுடன், இறைமக்களின் குழுமத்தில் ஒருவராக இணைந்தனர் என்றும், “வெள்ளை ஞாயிறு” பாரம்பரியத்தைக் குறித்து விளக்கமளித்தார்.

மேலும், உயிர்ப்புக்கு பின் வரும் முதல் ஞாயிறை இறை இரக்கத்தின் ஞாயிறாக, திருத்தந்தை புனித 2ம் ஜோன்போல் அவர்கள் நிறுவியுள்ளதைக் குறித்தும் தன் உரையில் எடுத்துரைத்தத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த ஆண்டு நாம் சிறப்பித்த இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டினைத் தொடர்வதற்கு, இந்த ஞாயிறு நம்மைச் சிறப்பாக அழைக்கிறது என்று சுட்டிக்காட்டினார்.

உயிர்த்தபின் தன் சீடர்களைச் சந்திக்கும் இயேசு, தூய ஆவியாரைப் பொழிவதன் அடையாளமாக அவர்கள் மீது ஊதி, பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு அளித்து, அவர்களை உலகெங்கும் அனுப்பினார் என்பதை எடுத்துரைத்தத் திருத்தந்தை, மன்னிப்பை அறிவிப்பதே, உயிர்த்த கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழும் அனைத்து கிறிஸ்தவரின் முதல் கடமை என்பதை வலியுறுத்தினார்.




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

"இறைவனின் இரக்கம் என்றென்றும் உள்ளது. மூடியக் கதவுகளுக்கு முன்னரும், அது சலிப்பின்றி நிற்கிறது"

"தந்தையின் இரக்கம் என்ற கிணற்றிலிருந்து, இவ்வுலகிற்கு இரக்கத்தை அள்ளிச் செல்வதில் நாம் களைப்படையாமல் இருக்கும் வரத்திற்காக வேண்டிக்கொள்வோம்"


"நமது அவலம், பலவீனம் இவற்றின் மிகத் தாழ்ந்த நிலையை நாம் அடைந்துவிடும் வேளையில், நாம் மீண்டும் எழுந்துவர, உயிர்த்த கிறிஸ்து, சக்தியைத் தருகிறார்"

"கிறிஸ்து உயிர்த்துவிட்டதால், நம் வாழ்வில் நிகழும் மிக எதிர்மறையான நிகழ்வுகளையும், புதிய இதயத்துடன், புதிய கண்களுடன் நம்மால் காண முடியும்"

"நற்செய்தியில், கிறிஸ்துவின் உயிர்ப்புப் பற்றிப் பேசும் பகுதிகளில் ஒன்றை, ஒவ்வொரு நாளும் இந்த உயிர்ப்பு வாரத்தில் வாசிப்பது நமக்கு நன்மை பயக்கும்"

# புனித மத்தியாஸ் திருத்தூதர்

## வைகாசி 14



## குடிப்பபழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கும், தச்சர்களுக்கும், பெரியம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், தையற் கலைஞர்களுக்கும் பாதுகாவலர்

மத்தியாஸ் என்தற்கு “யாவேயின் கொடை” என்பது பொருளாகும். இவர் முதல் நூற்றாண்டில் யூதேயாவில் (இன்றைய இஸ்ராயேல்) பிறந்தார். நற்செய்தி நூல்களில் இயேசுவின் சீடர்களின் பட்டியலில் மத்தியாசின் பெயர் இல்லை. இவர் இயேசுவால் நேரடியாக அழைக்கப்படாமல், தூய ஆவியின் துணையோடு திருத்தூதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதால் முக்கியத்துவத்தைப் பெறுகிறார்.

### புதிய திருத்தூதருக்கான அவசியம்

பன்னிருவருள் ஒருவரான யூதாஸ் இஸ்காரியோத்து இயேசுவைக் காட்டிக்கொடுத்து அவரின் கொலைக்குக் காரணமானதால் இயேசுவின் அன்புக் குழுவில் இருந்து விலகி தன் உயிரை மாய்த்துக் கொண்டான். எனவே அந்த இடத்திற்கு வேறு ஒருவரை நியமிக்க முடிவு செய்தார்கள். அதன்படி ஏறக்குறைய 120 சகோதரர், சகோதரிகள் ஒரே இடத்தில் கூடியிருக்கும்போது பேதுரு அவர்கள் நடுவில் எழுந்து நின்று, நடந்த நிகழ்வுகளை விளக்கிக் கூறினார். புதிய நபர் யாராக இருக்க வேண்டுமென்றால், “ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாய் விளங்க, அவர் நம்மிடையே செயல்பட்ட காலத்தில் நம்மோடு இருந்த ஒருவரைச் சேர்த்துக் கொள்ள நாம் கூடி வர வேண்டியது தேவையாயிற்று, யோவான் திருமுழுக்குக் கொடுத்த காலம் முதல் ஆண்டவர் இயேசு நம்மிடமிருந்து விண்ணேற்றமடைந்த நாள் வரை அவர் நம்மோடு இருந்திருக்க வேண்டும் என்று கூறினார்.

### புதிய திருத்தூதராக (திப 1:15-26

தகுதியுடைய இருவரை முன்மொழிந்தனர். ஒருவர் பெயர் யோசேப்பு (பர்சபா அல்லது யுஸ்து) மற்றவர் மத்தியாஸ் அவர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுக்க சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். பொதுவாக யூதர்கள் சீட்டுக் குலுக்கும்போது கற்களில் பெயர்களை எழுதி அவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு ஒரு கல் வெளியே வரும் வரையில் குலுக்குவார்கள். அப்படி சீட்டு குலுக்கியிருக்கலாம் இந்த இருவருள் ஒருவரை எங்களுக்கு காண்பியும் என்று இறைவனிடம் வேண்டிக் கொண்டனர். இறைவனின் திட்டப்படி மத்தியா 12வது திருத்தூதராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### நற்செய்திப் பணி

பாலஸ்தீனம், சீரியா மற்றும் அர்மேனியாவில் மத்தியாஸ் நற்செய்தி போதித்தார். மத்தியாஸ் தவ வாழ்வை மேற்கொண்டதாக அலெக்ஸாந்திரியா கிளமன்ட் குறிப்பிட்டுள்ளார். புனித அந்திரேயா, மத்தியாஸ் பணி என்ற நூலை எழுதியுள்ளார். அதில் மத்தியாஸ் காட்டுமிராண்டிகளுக்கு மத்தியில் நற்செய்தி அறிவித்ததாகவும், அங்கு கண்கள் பறிக்கப்பட்டதால் பார்வை இழந்தவராக இருந்ததாகவும், இயேசுவின் அறிவுறுத்தலின்படி அந்திரேயா அவரை மீட்டதாகும் எழுதப்பட்டுள்ளது.

### மறைசாட்சியாய்

இவருடைய இறப்பு குறித்து பல்வேறு தகவல்கள் நிலவுகின்றன. 64ஆம் ஆண்டு கல்லால் எறிந்து கொல்லப்பட்டதாகவும், சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டதாகவும் எருசலேமில் தலைவெட்டப்பட்டு இறந்ததாகவும் கூறுகிறார்கள். இவருடைய திருப்பண்டங்கள் டிரியர் நகரில் உள்ள ஆசிர்வாதப்பர் துறவு மடத்தில் வைக்கப்பட்டுள்ளது. புனித மத்தியாஸ் குடிப்பபழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கும், தச்சர்களுக்கும், பெரியம்மை நோயினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கும், தையற் கலைஞர்களுக்கும் பாதுகாவலராக உள்ளார். புனித மத்தியாஸின் சவால் நிறைந்த சாட்சிய வாழ்வு, நாம் உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாய் வாழ வழி வகுக்கட்டும்.

---

## அன்னையர் தினம் - வைகாசி 14

# அன்னையின் நினைவில்...





### அம்மா!

எந்த மொழியிலும் இனிமையான வார்த்தை இதுவாகத்தான் இருக்க முடியும்.

“அம்மா என்றழைக்காத உயிரில்லையே, அம்மாவை வணங்காமல் உயர்வில்லையே” என்ற கவிஞனின் வரிகள் மனித உணர்வுகளின் பொருத்தமான வெளிப்பாடு மனித உறவுகளிலெல்லாம் எல்லாம் மேலான உறவு அன்னைக்கும், குழந்தைக்கும் உள்ள உறவுதானே?

இரத்தத்தின் இரத்தமாக, உயிரோடு உயிராக, உணர்வோடு உணர்வாகக் கலந்து பிறந்த உறவல்லவா? அம்மாவுக்கு எத்தனை பேர் நன்றி கூறுகின்றோம்? அம்மாவுக்காக எத்தனை பேர் நன்றி கூறுகின்றோம். ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பின் அன்னையை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை சிலர். வயதான காலத்தில் பாசமும், பரிவும் காட்ட மறுப்பவர் பலர். வாழும் காலத்திலேயே அரவணைக்கத் தவறிவிட்டு, தாய் இறந்தபின் குற்ற உணர்வுடன் தவிப்போர் பலர்.

வாழும் காலத்தில் அன்னையை வாழ்த்தவும், வணங்கவும், வளப்படுத்தவும் செய்வோர் நல்ல மனிதர்கள்.

“அன்னையரை மேன்மைப் படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போருக்கு ஒப்பாவர். ஆண்டவருக்குப் பணிந்து நடப்போர் தங்கள் அன்னையருக்கு மதிப்பு அளிப்பர்” (சீராக் 3:4,6) என்கிறது இறைவார்த்தை.

இயேசு தாயை மதித்தார். தாய்மையை மகிமைப்படுத்தினார்.

தனது “நேரம் இன்னும் வரவில்லை” என்றபோதும், தாயின் பரிந்துரையைக் கேட்டு கானாவூர்த் திருமணத்தில் அற்புதம் நிகழ்த்தினார். (யோவா 2:1-11) நயீன் ஊரில் தனது ஒரே மகனைப் பறிகொடுத்த கைம்பெண்ணான தாயின் துயரத்தை உணர்ந்து, தானே முன்வந்து அந்த இளைஞனை உயிர்ப்பித்துத் தாயிடம் ஒப்படைத்தார். (லூக் 7:11-15).

தனது மகள் பேய் பிடித்துக் கொடுமைக்குள்ளாகி இருக்கிறாள் என்று இயேசுவிடம் கதறிய கானானியப் பெண்ணின் தாய்மையையும், நம்பிக்கையையும் பாராட்டி அத்தாய் விரும்பியதை நிறைவேற்றினார் (மத் 15:21-28)

இயேசுவைப் போல, நாமும் தாயையும், தாய்மையையும் மதிக்கக் கற்றுக் கொள்வோம். அன்னைக்கு கரம் குவிப்போம். அவள் அன்பைப் பாடிடுவோம் அன்னைக்கு நன்றி கூறி, அவருக்கு நன்று கூறுவோம்.

**அப்பா தந்தையே! உம்மைப் போற்றுகின்றோம். உமக்கு நன்றி கூறுகின்றேன். ‘பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பாளோ? அப்படியே, பெற்றவள் தன் பிள்ளையை மறந்தாலும், நாம் உன்மை மறக்க மாட்டோம்’ (எசா 49:15) என்று கூறி தாயினும் மேலாக எங்களை அன்பு செய்பவரே, உமக்கு நன்றி**

**‘தாய் தன் பிள்ளையைத் தேற்றுவது போல, நான் உங்களைத் தேற்றுவேன்’ (எசா 66:13) என்று சொல்லி தாயாக எங்களைத் தேற்றுபவரே, உமக்கு நன்றி!**

**உமது தாயன்பின் வெளிப்பாடாக உம் அன்னையை எங்களுக்குத் தந்த இயேசுவே உமக்கு நன்றி**

**பத்து மாதம் தன் உதரத்தில் என்னைச் சுமந்து பெற்ற என் தாய்க்காக இறைவா உமக்கு நன்றி.**

**பாலோடு, பரிவும், பாசமும் ஊட்டி என்னை வளர்த்த அன்னைக்காக ஆண்டவரே உமக்கு நன்றி.**

**நோயில் படுத்தபோதெல்லாம், தானும் துடித்து, உருகி, உடனிருந்து காத்துக் கொண்ட அம்மாவுக்காக, தந்தையே உமக்கு நன்றி.**


**ஆண்டவரே என் அன்னையை ஆசீர்வதியும். இறுதிவரை மகிழ்வும், மனநிறைவும் தந்தருளும்.**

**இறைவா, அன்னையின் அன்பைச் சுவைக்காத பிள்ளைகளுக்காகவும், அன்னையைப் பிரிந்து தவிப்போருக்காகவும் மன்றாடுகின்றேன்.**

**நீரே தாயாக இருப்பீராக, அணைப்பீராக! தாயினும் மேலான உமது அன்பு எப்போதும் எங்களை நிரப்புவதாக! நன்றி ஆமென்.**

# உறக்கத்தில் இறைத்திட்டம் அறிய உதவும்

# புனித சூசையப்பர் பக்தி!





திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு மிகவும் பிரியமான புனிதர் புனித சூசையப்பர். திருத்தந்தை பிரான்சிஸ் தனது திருத்தந்தைக்கான தொடக்கத் திருப்பலி நிறைவேற்றிப் பதவி ஏற்றதும் புனித சூசையப்பர் திருநாளான 2013, பங்குனி 19ம் திகதியாகும். 2015, ஆனி 16ம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டுக்கான திருப்பயணம் மேற்கொண்ட போது இதற்கான காரணத்தை திருந்தந்தை விளக்கினார்.

“புனித சூசையப்பர் அமைதி மற்றும் வீரமிக்க மனிதராகத் திகழ்ந்ததால் அவரை நாம் மிகவும் அன்பு செய்கின்றேன். எனது அலுவலக மேசையில் உறங்கும் நிலையிலுள்ள புனித சூசையப்பர் திருச்சுருபத்தை வைத்துள்ளேன். அவர் உறங்கும்போதும், திருச்சபையை அக்கறையுடன் பாதுகாக்கிறார்” என்று கூறினார்.

மேலும் மக்களிடம், “நீங்கள் பிரச்சனையில் இருக்கையில் புனித சூசையப்பரிடம் உதவி வேண்டி உங்கள் விண்ணப்பத்தை அவரது திருச்சுருபத்தின் தலைமாட்டில் வையுங்கள்” என்று அறிவுரை வழங்கினார்.

புனித சூசையப்பர் உறக்கத்தில் படுத்திருப்பது போன்ற திருச்சுருபம் புதியது. இதில் புனிதரின் உடையானது இளம் பச்சை கோல்டன் கலரிலும், சிவப்பு மேலுடையுடனும் உள்ளது. இது ஓர் அமெரிக்க - ஸ்பானிப உருவ வடிவமுடையதாக உள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ், தான் திருத்தந்தையான பின் தன் சொந்த ஊரிலிருந்து தனக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டிருந்த ஒரு சிலவற்றில் புனித சூசையப்பர் உறங்கும் நிலையிலுள்ள திருச்சுருபமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

புனித சூசையப்பர் உறக்கத்தில் படுத்திருந்தபோதுதான் கடவுளின் தூதர் அவருக்கு மூன்று முறை தோன்றி, “யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம், ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான்” (மத் 1:20) என்றும், குழந்தை இயேசுவின் உயிருக்கு ஏரோதினால் ஆபத்து ஏற்பட இருந்த நிலையில் தூதர் சூசையப்பருக்குத் தோன்றி, “நீர் எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லும்” என்றும் (மத் 2:13) ஏரோது காலமானதும் மறுபடியும் ஆண்டவரின் தூதர் சூசையப்பருக்குத் தோன்றி, “நீர் எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ராயேல் நாட்டுக்குச் செல்லும்” என்றதும் (மத் 2:20) அவரிடம் கடவுளின் திட்டத்தை வெளிப்படுத்தினார்.

பல்வேறு கடமைகள், வேலைகளை முடித்துவிட்டு ஆண்டவருக்குள் நாம் உறங்கும்போதும், கடவுள் நம்முடன் பேசுகிறார். நற்செய்தியில் புனித சூசையப்பர் விவேகமும், மனவுறுதியுமுள்ள மனிதராகக் காட்டப்படுகிறார். புனித சூசையப்பரைப் போல உறக்கத்தில் நம்முடன் உரையாடும் கடவுளின் குரலை கேட்டு, விழித்தெழுந்து விரைந்து செயல்பட வேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக் கொண்டார்.

கிறிஸ்தவ விசுவாசம் நம்மை உலகிலிருந்து ஒதுங்கியோ, விலகியோ வாழச் செய்வதில்லை. மாறாக உலகுடன் இன்னும் நெருக்கமாக வாழவும், புனித சூசையப்பரைப் போல் உலகத் துன்பங்களை எளிதாக வெல்ல ஆண்டவருக்குள் உறங்கி அவர் திட்டம் அறிய முற்படவும் அழைக்கிறது. கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு சிறந்த மாதிரியாக உள்ளார். திருத்தந்தை பிரான்சிசின், புனித சூசையப்பர் மீதான இந்த உருக்கமான பக்தி முயற்சி வத்திக்கானிலுள்ளவர்களை மட்டுமல்லாது, உலகின் பல நாட்டு மக்களையும் சென்றடைந்துள்ளது. திருத்தந்தை தனது அலுவலக அறை மேசையில் உறங்கும் புனித சூசையப்பர் மார்பிள் சுரூபம் ஒன்றை வைத்துள்ளார். அதன் தலைமாட்டில் திருச்சபைக்கான தேவைகளை சிறு விண்ணப்பங்களாக எழுதி வைத்துச் செபிக்கிறார். வத்திக்கான் அதிகாரிகள் “The Holy Father really makes the saint work” என்று பேசிக் கொள்கின்றனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் தனது சிறு வயது முதலே புனித சூசையப்பரிடம் மிகுந்த பக்தியும் கொண்டு வாழ்ந்து வருகிறார். அவர் பிறந்து வளர்ந்த பியூனர்ஸ் அயர்ஸ் பங்கு ஆலயம் புனித சூசையப்பருக்கு நேர்ந்தளிக்கப்பட்டு “san jose church” என்றழைக்கப்படுகிறது. இந்த ஆலயத்தில்தான் திருத்தந்தை திருப்பலி, வழிபாடுகளில் பங்குகொண்டு பக்தியில் வளர்ந்தார். 1953, புரட்டாதி 12ம் திகதி இந்த ஆலயத்தில் தந்தை கார்லோசிடம் ஒப்புரவு அருளடையாளம் நிறைவேற்றிய பின் தனது 17வது வயதில் தனக்கு தேவ அழைத்தல் இருப்பதை உறுதி செய்தார். இன்று தனது திருத்தந்தை பணியையும் புனித சூசையப்பரின் பாதுகாப்பிற்கே ஒப்படைத்துள்ளார்.

திருத்தந்தை புனித சூசையப்பர் பற்றிக் கூறுகையில், இப்புனிதர் அதிகாரத்தை (power) பணியாகப் (Service) பார்த்தவர். திருத்தந்தையான நானும் புனித சூசையப்பரின் தாழ்ச்சி, எதார்த்த நடைமுறை, பிரமாணிக்கமுள்ள பணி ஆகியவைகளால் தூண்டப்பட்டு, அவரைப் பின்பற்றி கடவுளின் விசுவாசிகளான இறைமக்களைப் பாதுகாக்கவும், இதமான அன்பினால் அனைத்துலக மனிதர்களையும் குறிப்பாக ஏழைகள், பலவீனமானவர்கள், முக்கியமற்றவர்களாக கருதப்படு-கிறவர்கள், மத்தேயு நற்செய்தியாளர் இறுதித் தீர்ப்பு அதிகாரத்தில் குறிப்பிடும் பசியிலுள்ளோர், தாகத்திலுள்ளோர், அன்னியர்கள், ஆடையின்றியுள்ளோர், நோயாளர், சிறையிலுள்ளோர் ஆகியோரை அரவணைத்து அன்பு செய்யவும் முயல்கின்றேன்” என்று கூறியுள்ளார்.

வைகாசி முதலாம் திகதி தொழிலாளருக்கு முன்மாதிரியான புனித சூசையப்பரிடம் நமது அன்றாட வாழ்விலும், குடும்ப வாழ்வு, குழந்தைகளின் படிப்பு போன்றவைகளிலும், திடீரென்று உருவாகும் பிரச்சினைகளிலும், கடவுளின் திட்டம் என்ன என்று தேர்ந்து தெளியவும், அந்த இறைதிட்டத்தை விரைந்து நிறைவேற்றி புனித சூசையப்பரின் பரிந்துரையால் கடவுளின் முழுப்பாதுகாப்பில் வாழவும் முயல்வோம்!

**தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பரே!**

**எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.**

---

## நற்கருணை சிந்தனைக்கு



தனது நாற்பதாவது வயதில் அங்கிலிக்கன் சபையை விட்டுவிட்டு கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்தவர் கர்தினால் நியூமன். மிகச் சிறந்த கல்விமானாகவும், அறிவாளியாகவும் இருந்த அவரது இழப்பை அச்சபையைச் சேர்ந்தவர்களால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. எனவே அவர்களில் சிலர் கர்தினால் நியூமனைச் சந்தித்து “நீங்கள் பழையப்படி ஆங்கிலிக்கன் சபைக்கு வந்து விடுங்கள். நீங்கள் விரும்புவதை உங்களுக்குத் தரத் தயாராக இருக்கின்றோம். என்றார்கள். அதற்கு அவர், “நீங்கள் சிறப்பானது எதையும் எனக்கு தரவேண்டாம். கத்தோலிக்க திருச்சபை தருகின்ற இரண்டு காரியங்கள் மட்டும் கொடுங்கள் போதும், “என்றாராம். “அவை எவை?” என்று மற்றவர்கள் கேட்டபோது

1. நற்கருணை
2. அன்னை மரியாள்

என்றாராம்

✳ நற்கருணையின் மதிப்பை நாம் அவ்வளவாக அறிந்திருப்பதில்லை. காரணம் சிறுபிள்ளை முதலே அதை சடங்காச்சாரமாக பெற்றுக்கொள்ள பழகிவிட்டதன் காரணமாக அதன் மதிப்பை நாம் அறிந்திருப்பதில்லை

✳ வாழ்வின் தேடல் என்ற பசியைபோக்கும் நற்கருணை மட்டில் என் பார்வை என்ன?

✳ தகுதியோடு நற்கருணை உண்பவர்கள் நற்கருணையாக மாறிவிடுகிறார்கள்

**சாவைவிட வாழ்வும், பயத்தை விட அன்பும் வலிமையானது என்று நமக்குச் சொல்வது தான் நற்கருணை என்னும் அருட்சாதனம்**

---

**விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே உமது இரக்கமே என் பாவத்தைக் கழுவும், உமது அன்பே என்னைப் புனிதமாக்கும். ஆமென்**

## 03 உலக தொழிலாளர்...

இவர்களுடைய சகோதரர் அல்லவா?... பின் இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?" என்றார்கள் (மத் 13:55-66)

அக்கால யூதர் பரிசேயர் ஆகியோர் மக்களை நான்கு வகைகளில் ஏழை, ஒடுக்கப்பட்டவர்கள் என பிரித்து சமுதாயத்திலிருந்து தள்ளி வைத்தனர். அப்பிரிவுகளில் ஒன்றுதான் பொருளாதார ரீதியாக, அவர்கள் செய்யும் தொழிலை வைத்து ஒதுக்கப்பட்டவர்கள். இயேசுவும் அத்தகைய பிரிவிலிருந்து வந்தவர்தான் ஆனால் அவர் சார்ந்திருந்த வாழ்வுச் சூழலுக்கு மாறானதாக இருந்தால் தான் அவரைக் குறித்து மேற்கண்ட விமர்சனங்கள் எழுந்தன. மத்தேயு நற்செய்தி இயேசுவை தச்சரின் மகன்" எனக் குறிப்பிடுகின்றது. மாற்குவோ "இவர் தச்சர் அல்லவா? என்று இயேசுவை தச்சராகக் குறிப்பிடுகிறது. தொழிலைக் கொண்டு இயேசு எடைபோடப்பட்டார். அவரது ஞானமும் வல்லமையும் விமர்ச்சிக்கப்பட்டன. குறைத்து மதிப்பிடப்பட்டன.

இன்று நம் மத்தியில் மதிப்பும் மாண்பும் பெறுபவர்கள் யார் எனப்பார்த்தால் பெரும்பாலும் மற்றவர்களை சுரண்டி உயர்ந்த வாழ்வு வாழும் அரசியல்வாதிகள், அதிகாரத்தையும் ஆள்பலத்தையும் காட்டி மற்றவர்களை அடக்கி ஆண்டுக் கொண்டிருப்பவர்கள் போன்றோர் தான் சமுதாயத்தில் பெரிய மனிதர்களாக உலவுகிறார்கள். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபடும் தொழிலாளி அவனது தொழிலைக் கொண்டே ஒதுக்கப்படுகின்றான். இதுதான் இன்றைய சமுதாயத்தின் நிலை. ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் தொழிலில் உயர்வு தாழ்வுப் பார்த்து மக்களைப் பிரித்து வைக்கக்கூடாது. தனது தச்சுத் தொழிலின் வருமானத்தில் "இறைவனின் தாயான" மரியாவுக்கும் "உலக மீட்பருக்கும்" உணவு உடையும் வழங்கி தன் குடும்பத்தைக் காப்பாற்றிய புனித யோசேப்பை "தொழிலாளர்களின் பாதுகாவலராக" தொழிலாளர் தினத்தில் திருச்சபை அவருக்கு விழா எடுத்து மகிழ்கின்றது. அவர் தன் தொழில் குறித்து வெட்கப்படவில்லை. அதை இறைவனின் கொடையாகக் கண்டார்.

இறைவன் அனைத்து உழைப்பாளர்களுக்கும் நல்ல உடல் ஆரோக்கியத்தை கொடுக்கவும், தூய யோசேப்பை பின்பற்றி, வாழ்ந்து முன்மாதிரியான வாழ்வு வாழ்ந்து இறைதிட்டத்தை நிறைவேற்ற அனைவருக்காவும் செபிப்போம். நாமும் நமக்கு அளிக்கப்பட்ட தொழிலைப் போற்றுவோம். அனைத்து தொழில்களையும் நாமும் நமக்களிக்கப்பட்ட தொழிலைப் போற்றுவோம். அனைத்துத் தொழில்களையும் தொழிலாளர்களையும் போற்றுவோம். அவர்கள் பணி சிறக்க சிறப்பாக செபிப்போம்.

**சகோ. டிலோஸ்டன் பெர்ணான்டோ**

## 04 அன்னை மரியாள்

தன் மகனைக் காத்த தாயின் தியாகக் கதையை ஒருமுறை என் நண்பர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் நம் அன்னை மரியாள் நோயல்ல, தன் மகனின் சோகச் சாவிலும், துன்பத் துயரங்களிலும் பங்கேற்கிறார். தாங்கள் பெற்ற பிள்ளைகளின் துன்ப துயரங்களைக் கண்டும் காணாமலும் வாழ்கின்ற பெற்றோர்களுக்கெல்லாம் நம் அன்னை ஒரு கலங்கரை விளக்கம்.

### மகனின் வெற்றியில் பூரித்து மகிழ்ந்த...

தன் மகன் சிலுவையில் இறந்ததும் மற்ற சீடர்களின் பராமரிப்பில் அன்னை வாழ்ந்தார்கள் (திப 1:14). சாவுக்கும், சாத்தானுக்கும் சாவு மணி அடித்து மீண்டும் உயிர்த்தெழுந்த மகனைப் பார்த்து அன்னை பூரித்து மகிழ்கிறார்கள். தாங்கள் பெற்ற குழந்தைகள் பெரியவர்களாகி பேரும் புகழும் பெற்று வாழ வேண்டும் என எத்தனையோ பெற்றோர்கள் கனவு காண்கிறார்கள். தங்கள் கனவுகள் நினைவுகளாக வேண்டுமெனக் காத்திருக்கும் குடும்பங்கெல்லாம் நம் அன்னை ஒரு கலங்கரை விளக்கம் .

### முடிவாக

இவ்வாறு மனித வாழ்வின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் முழுமையாகப் பங்கேற்று வாழ்ந்தவர் நம் இறை அன்னை. குடும்பங்களில் வரும் துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமல், குடும்பச் சாவல்களைக் கண்டு பயந்து ஓடிவிடாமல் ஒரு வீரத்தாயாக, தியாக தாயாக புரட்சிப் பெண்ணாக இறை நம்பிக்கையின் தாரகையாக வாழ்ந்தவர் நம் அன்னை இவர் இன்று இப்பூமியில் வாழும் எல்லாக் குடும்பங்களுக்குமே ஒரு கலங்கரை விளக்கம்தான்

எனவே அன்னையின் மாதத்தில் எமது வீடுகளில்
குடும்பமாக இருந்து செபமாலை தியானித்து

## 08 இலங்கை ஆயர்.. ♦

அதேபோல குருத்துவத்திற்கும் அர்ப்பண வாழ்விற்கும் அழைக்கப்பட்ட யாவரும் திருச்சபையால் தயார் செய்யப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். பேரார்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் கிறிஸ்துவின் மறைபணியை செயற்படுத்த திருச்சபையால் தேர்ந்து கொள்ளப்பட வேண்டுமெனில் அழைக்கப்பட்ட அனைவரும் தங்களை இதற்கென தயார் செய்ததையும் உருவாக்கம் அடைந்ததையும் நிரூபிக்கவேண்டும். ஆண்டவர் தனது பன்னிரு சீடரையும் (லூக் 9:1-6) 72 சீடர்களையும் (லூக் 10:1-12) அனுப்பும் போது அறிவுறுத்தியதைப் போலவே அழைக்கப்பட்டோரும் மிகவும் குறைவான வளங்களைக் கொண்டு கடினமான நிலைகளில் கடுமையாக உழைக்கவேண்டும். அறுவடையும் தூய ஆவி ஆற்றும் செயல்களின் மகிமையும் ஆண்டவருக்கு உரித்தாக வேண்டும். ஏனெனில் அவரது திருப்பெயரினாலும் அவர்தம் ஆற்றலினாலுமே இப்பணியானது தேர்ந்துகொள்ளப்பட்ட மறைத்தூது திருப்பணியாளர்களால் ஆற்றப்படுகின்றது. அவர்கள் தங்களது பெயர்களும் கூட விண்ணகத்தில் எழுதப்பட்டுள்ளதென்ற மகிழ்வில் (லூக் 10:17-20) இப்பணியினை நடத்திச் செல்கின்றனர்.

ஆண்டவரால் அழைக்கப்பட்ட யாவரும் முதலில் அவரவரது மறைமாவட்டத்திற்கு உரித்தான சிறிய குருமடங்களில் அனுமதிக்கப்பட்டு பின்னர் களுத்துறையில் அமைந்துள்ள "தஹம் செவன" எனும் இடைநிலை குருமடத்திற்கு அனுப்பப்படுவர். அதன்பின் அம்பிட்டியாவிலுள்ள இலங்கை அன்னையின் தேசிய குருமடத்திற்கோ அல்லது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தூய பிரான்சிஸ்கு சவேரியாரின் குருமடத்திற்கோ அனுப்பப்பட்டு மெய்யியல் மற்றும் இறையியல் சார் குருத்துவ கற்கைகளை மேற்கொள்வர். ஆயர்களால் நியமிக்கப்பட்ட குருமடத்திலுள்ள குருவானவர்கள் குருமாணவர்களை பகுத்துணர்ந்து பொருத்தமானவர்களை, இவர்களின் குருத்துவ திருநிலைப்படுத்தலை இறுதியாக தீர்மானிக்கும் பொறுப்பும் அதிகாரமுடைய அந்தந்த மறைமாவட்டத்திற்குஉரிய ஆயர்களுக்கு பரிந்துரைப்பர்.

அர்ப்பண வாழ்வில் உள்ளோர்க்கு அதற்கென தங்களை அர்ப்பணித்தவர்களை அந்தந்த துறவற நெறிக்கமையவும், திருச்சபையின் மறைத்தூது பணிக்கமைய அவர்கள் ஏற்றுக் கொண்ட வாக்குத்தத்தங்களின்படி வாழ எடுத்த தீர்மானத்திற்கு அமையவும் அந்தந்த சபைக்குரிய மடாதிபதிகள் மாணவர்களை பகுத்துணர்வர்.

இலங்கைத் திருச்சபையானது மறையார்வம் உள்ள மனநிலைக் கொண்ட குருவானவர்களையே வேண்டி நிற்கின்றது. அவர்கள் புனித யோசேப்வாஸ் அடிகளாரைப் போல கடவுளில் விசுவாசம் கொண்டு மக்களிடம் கொள்ளும் வரையரையற்ற அன்பில் திளைத்து உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். தனியாகவும், குடும்பங்களாகவும் மற்றும் கத்தோலிக்க குழுமங்களாகவும் அறுவடையின் ஆண்டவரிடம் அவரது இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை அனுப்புமாறு மன்றாடுவோம்.

**+ பேரருட்திரு. ஜே. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, ηηாச**

**தலைவர்**

**இலங்கை கத்தோலிக்க ஆயர்ப் பேரவை**

**குருமடங்கள், குருக்கள் மற்றும் துறவிகளுக்கான**

**தேசிய கத்தோலிக்க ஆணைக்குழு**

## 08 குருமட அதிபரின்...

தங்களது சொந்த பலத்தில் அல்ல அசைக்கமுடியாத நம்பிக்கையால் அவர்கள் நிரப்பப்பட வேண்டும். இந்நன்நாளில், பல குருத்துவ மற்றம் துறவற அழைத்தல்களால் எமை ஆசீர்வதிக்கும் இறைவனுக்கு இதயத்திலிருந்து நன்றி செலுத்தும் அதே வேளை அவர்களது உருவாக்கத்திற்காகவும் மன்றாடுவோம். இன்னும் அதிகமானோர் இறையழைத்தலிற்கு செவிசாய்த்திடவும், அர்ப்பண வாழ்வின் சவால்களை விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளவும் உற்சாகப்படுத்துவோம். இலங்கையின் திருத்தூதராம் தூய யோசேப் வாஸ் அடிகளார்க்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாண்டில், அவரது சீரிய தூய்மையும் ஒப்பற்ற மறைத்தூது ஆர்வமும் இன்றைய இளையோர்க்கு உயரிய தூண்டுதலாக அமைவனவாக. அறுவடையின் ஆண்டவராம் இறைவன், "அவர்தம் இதயத்திற்கேற்ற நல்லாயர்களைத்" தந்து எமது தாய் நாட்டினை தொடர்ந்தும் ஆசீர்வதிப்பாராக!

**அருட்பணி. எக்ஸ்பெரிடஸ் ஜயகொடி,**
**இயக்குனர் தேசிய குருமடம், கண்டி**



## மணமகன் தேவை

கொழும்பு வசிப்பிடமாகக் கொண்ட மணமகளுக்கு (1976) நல்ல குணமுள்ள கத்தோலிக்க மணமகனை பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர். உயரம் 5"8' தொடர்புகளுக்கு 077 - 0827552 (N0507)

## வேலைவாய்ப்பு

எயார் கண்டிஷனர்க்கான (A/Cக்கான) பொருட்கள் செய்யும் எங்கள் நிறுவனத்திற்கு அனுபவமுள்ள / அனுபவமற்ற ஆண்கள் தேவைப்படுகின்றனர்.
மேலதிக விபரங்களுக்கு 0771050552.
SEBIM ENGINEERING & SUPPLIES (PVT) LTD.
NO, 55 DUTUGEMUNU MAWATHA, PELEIYAGODA.
(N0483)

## 01 கீழ்ப்படிதல் என்பது

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் 15 தியாக்கோன்கள். கடந்த 29.04.2017ஆம் திகதி குருக்களாக எமது பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் அபிஷேகம் செய்யப்பட்டார்கள். அன்றைய தினம் தனது உரையிலே குருத்துவத்தின் மேன்மையை பற்றியும், பழைய ஏற்பாட்டின் நிகழ்வுகளின் அடிப்படையில் அறிவுரை கூறினார் "ஷெமா - இஸ்ராயேல்" என்ற "இஸ்ரயேலே கேள்" என்பதன் அடிப்படையில் கீழ்ப்படிவு என்பது ஒருவருக்கு செவிகொடுத்தல் என்பதை மையமாக கொண்டுள்ளது என்றும் இதனால் குருத்துவத்தின் கீழ்ப்படிவு என்பது செவிக்கொடுத்தல் என்பதைச் சுட்டிக்காட்டினார். பணி குருத்துவ வாழ்விற்கு அழைக்கப்பட்டுள்ள அனைவரையும் தங்களுடைய திறமையினாலோ, சிறப்பம்சத்தினாலோ, கடவுள் தேர்ந்துக்கொள்ளவில்லை, மாறாக ஒவ்வொருவரின் பெயரை சொல்லி, அவர்களுடைய இயலாமையையும், பலவீனத்தையும் பொருட்படுத்தாமல், அவர்களை விசேட பணிக்கு தெரிந்தெடுத்துள்ளார். இத்தகைய கடவுளின் பணிக்கு அழைக்கப்பட்டுள்ள நாம் கடவுளுக்கு செவிகொடுத்து எம் பணியை தொடர்ந்தாற்றிட வேண்டும். கடவுள் எங்களை அவரோடு வாழும்படியாக செபத்தில் நிலைத்திருக்க அழைக்கின்றார். குருவானவர் என்பவர் செபத்தின் மனிதன் எனவே இறைவனை மறந்துவிடாமல் இன்று தொடங்குகின்ற இப்புதிய பணியில் திடப்படுத்தலுக்கு இறைவனின் துணையை வேண்டி நிற்க வேண்டும்.

மேலும் அவர் கூறுகையில் குருத்துவ வாழ்வின் கற்பு நிறை வாழ்வு பற்றியும் அது தொடர்பான புனிதாக்ளின் படிப்பினையையும் எடுத்துக் கூறினார். சிறப்பாக புனித பவுல் கொரிந்தியருக்கு கூறுவதுபோல கிறிஸ்துவோடு இணைந்து வாழும் போது எம்மை பிரிப்பது எது? பாவமா? சாவா, அடிமை நிலையா? என்பது போல், புனித பவுலின் படிப்பினையை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்தினார். இறைவனால் தெரிவு செய்யப்பட்ட ஊழியனாகிய தன்னை இறைவன் விசேட பணிக்கு அழைத்திருக்கின்ற படியால், அவருடைய கீழ்ப்படிதலினைக் கொண்டு நான் இன்று உங்களை அபிஷேகம் செய்கின்றேன். மறைமாவட்டத்தின பொறுப்புக்கள் மட்டில் என்னோடு இணைந்து ஒத்துழைக்கும்படியாக உங்களை கேட்டுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

தமிழாக்கம் :
அருட்சகோதரர் டிலொய்ஸ்டன் பெர்ணான்டோ

## சுமைகளெல்லாம் சுமையல்ல

புத்தகங்களை சுமையாக நினைத்தால்
அறிவை பெறமுடியுமா
செருப்பை சுமையாக நினைத்தால்
சுகமாக நடக்க முடியுமா
முற்களைச் சுமையாக நினைத்தால்
பூக்கள் பூக்க முடியுமா
சேவைகளை சுமையாக நினைத்தால்
மாற்றங்கள் நிகழ்த்த முடியுமா
சிலுவையை சுமையாக நினைத்தால்
கிறிஸ்துக்கள் பிறக்க முடியுமா



**இவை எல்லாம்**
**சுமையல்ல**
**சுமையென்பது**
**சுகம் என்று**
**நினைத்தால்**
**சுகம் எப்போதும்**
**உன் வாழ்வை**
**தொடர்ந்திடும்**

# கோடையில் தர்பூசணி சாப்பிடுவதால் கிடைக்கும் பயன்கள்



தர்பூசணியில் அதிகளவு நீர்ச்சத்து நிறைந்துள்ளது. கோடை காலத்தில் தர்பூசணி சாப்பிடுவதால் உடலுக்குக் கிடைக்கும் பல்வேறு நன்மைகளை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

தக்காளியில்தான் நிறைய லைகோபேன் இருப்பதால் அதனை இருதயம், எலும்பு இவற்றின் ஆரோக்கியத்திற்கு அவசியமானதாக விஞ்ஞானம் பரிந்துரைக்கின்றது. ஆனால் ஆய்வில் தர்பூசணி பழத்திலும் தக்காளியை விட அதிக லைகோபேன் சத்து இருப்பதால் இப்பழம் மிக அதிகமாக சிபாரிசு செய்யப்படுகின்றது. நன்கு சிவந்த பழத்தில் இச்சத்து அதிகம் கிடைக்கின்றது.

- நோய் எதிர்ப்பு சக்தியினை பெற முடியும்.
- தர்பூசணி பழம் இரத்தக் கொதிப்பினை தடுக்கும் சக்தி கொண்டது.
- தசைகளின் சோர்வினை நீக்க வல்லது.
- நிறைந்த கல்சியம் சத்து கொண்டது.
- நிறைந்த நீர் சத்து அளிக்க வல்லது.
- புற்று நோய் தவிர்ப்பிலும், சிகிச்சை பொழுதும் தர்பூசணி உதவுகின்றது.
- கெட்ட கொழுப்பினை நீக்க தர்பூசணி உதவுவதால் இருதய பாதிப்புகள் வெகுவாய் தடுக்கப்படுகின்றன.
- கண் பார்வை பாதிப்பு தவிர்க்கப்படுகின்றன.
- சிறந்த வைட்டமின் "சி" சத்தினால் ஆஸ்துமா வெகுவாய் தவிர்க்கப்படுகின்றது.
- செரிமான சக்தி ஊக்குவிக்கப்படுகின்றது.
- எடை குறைப்பிற்கு உதவுகின்றது.
- சதை, நரம்புகள் பாதுகாக்கப்படுகின்றது.
- நெஞ்செரிச்சல் நீங்குகின்றது.
- காயங்கள், புண்கள் சீக்கிரம் ஆறுகின்றன.
- வெயிலில் ஏற்படும் 'heart stroke' தவிர்க்கப்படுகின்றது.
- ஈறுகள் பாதுகாக்கப்படுகின்றன.





- "ஸ்கர்வி" எனப்படும் சரும பாதிப்பு தவிர்க்கப்படுகின்றது.
- இரத்தக் கொதிப்பினை கட்டுப்படுத்த வல்லது.

## வெயிலில் இருந்து பாதுகாக்க சில குறிப்புகள் :

- "சன் ஸ்கிரீன்" உடலில் போடாமல் வெயிலில் செல்லாதீர்கள்.
- கொதிக்கும் வெயிலில் "ஷாப்பிங்" வேண்டாம். காலை அல்லது மாலை நேரத்தில் செல்லலாம்.
- சிறு பூச்சி கடி, உஷ்ணம் இவை உடனே சரும அரிப்பினை வெகு வாக்கி விடும். கவனம் தேவை. மருத்துவ ஆலோசனை முதலிலேயே பெறுங்கள்.
- தலை தொப்பி, கறுப்பு கண்ணாடி மிக அவசியம்.
- நீச்சல் செய்வது நல்லது. தகுந்த பாதுகாப்புகளுடன்.
- காரில் சூடு அதிகமாய் இருக்கும். குழந்தைகளை தனியே விட்டு கடைக்குச் செல்லாதீர்கள்.
- சுத்தமான தண்ணீர் குடிப்பதே முதல் முக்கிய பாதுகாப்பு.

# கொலஸ்ட்ரால் பற்றி சில விஷயங்கள்




நமது உடல், கொலஸ்ட்ராலை தன்னிலிருந்தே உற்பத்தி செய்துகொள்கிறது. நம் கல்லீரல் தினமும் சுமார் ஆயிரம் மில்லிகிராம் கொலஸ்ட்ராலை உற்பத்தி செய்கிறது. கல்லீரலும் மற்ற செல்களும் சேர்ந்து ரத்தத்தின் மொத்த கொலஸ்ட்ரால் அளவில் 75 சதவீதத்தை உற்பத்தி செய்கின்றன.

பொதுவாக 25 சதவீத கொலஸ்ட்ரால், நாம் உட்கொள்ளும் உணவு வகைகளான முட்டைக் கரு, மாமிசம், கோழி இறைச்சி, பால் மற்றும் பால் பொருட்களில் இருந்து கிடைக்கிறது. கொலஸ்ட்ரால் உயிர் அபாயத்தை ஏற்படுத்தும் ஒன்றாக வளர்வதற்கு நாமே காரணமாக இருக்கிறோம் என்பதுதான் உண்மை. அதாவது, கொழுப்பு நிறைந்த உணவை உண்பது, இறைச்சி வகைகளை அதிகம் உண்பது, அதிக உடல் எடை, உடல் இயக்கத்தைக் குறைத்து "சும்மா"வே இருப்பது, உடற்பயிற்சி இல்லாதது, அதிக தூக்கம், மது, புகைப்பழக்கம், மனஅழுத்தம், சர்க்கரை நோய், சிறுநீரகம் மற்றும் தைராய்டு சுரப்பி நோய்களுடன், கருத்தடை மாத்திரைகள் கூட கொலஸ்ட்ராலுக்குக் காரணமாகின்றன.

பெற்றோருக்கு அதிக கொலஸ்ட்ரால் இருந்தால் அதற்குக் காரணமான ஜீன்களை வாரிசுகளும் பெற்றிருக்கக்கூடும். இரத்தத்தில் அதிக கொலஸ்ட்ரால் இருப்பதற்கான வெளிப்படையான அறிகுறி எதுவும் தெரிவதில்லை. அதனால்தான் இது "சைலண்ட் கில்லர்" எனப்படுகிறது.

ஒல்லியாக இருப்பவர்களுக்கு இரத்தத்தில் கொலஸ்ட்ரால் இருக்காது என்று கருத முடியாது. எனவே யாராக இருந்தாலும் இரத்தப் பரிசோதனை மூலம்தான் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரால் அளவு, 12 மணி நேரம் ஏதும் உட்கொள்ளாத நிலையில் காலையில் மேற்கொள்ளப்படும் இரத்தப் பரிசோதனையில் இருந்து கணக்கிடப்படுகிறது. "லிபோபுரோட்டீன் புரொபைல்" இரத்தப் பரிசோதனை, நம் ரத்தத்தில் கவலைப்படத்தக்க அளவில் கொலஸ்ட்ரால் இருக்கிறதா இல்லையா என்று கூறிவிடும்.

# சூப்பரான சைடிஷ் கத்தரிக்காய் வறுவல்



தயிர் சாதம், சாம்பார் சாதத்திற்கு கத்தரிக்காய் வறுவல் சூப்பராக இருக்கும். இன்று இந்த சூப்பரான சைடிஷ் கத்தரிக்காய் வறுவல் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

**தேவையான பொருட்கள்:**

பெரிய கத்திரிக்காய் - அரைக் கிலோ
எண்ணெய் - தேவைக்கு.


**மசாலாவிற்கு :**

முழு பூண்டு - 1
மிளகாய்த்தூள் - 1 டேபிள்ஸ்பூன்
சீரகத்தூள் - 1 டீஸ்பூன்
மஞ்சள் தூள் - அரை டீஸ்பூன்
சோள மாவு - 2 டேபிள் ஸ்பூன்
எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்
தண்ணீர் - தேவைக்கு
உப்பு - தேவைக்கு.

**செய்முறை :**

- கத்தரிக்காயை நன்கு கழுவி துடைத்து வட்ட துண்டு வடிவில் நறுக்கி வைக்கவும்.
- பூண்டை நன்றாக அரைத்து கொள்ளவும்.
- ஒரு பாத்திரத்தில் அரைத்த பூண்டு விழுது, மிளகாய்த்தூள், சீரகத்தூள், மஞ்சள் தூள், சோள மாவு, எண்ணெய், உப்பு, தேவையான அளவு தண்ணீர் சேர்த்து பேஸ்ட் பதத்தில் கரைத்து கொள்ளவும்.
- நறுக்கிய கத்தரிக்காய் துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து மசாலா தடவி ஒரு மணி நேரம் ஊற வைக்கவும்.
- ஒரு அகலமான நான்ஸ்டிக் பேனில் அல்லது தோசை கல்லில் எண்ணெய் விட்டு சூடானவுடன் கவனமாக மசால் தடவிய கத்தரிக்காய் துண்டுகளை ஒவ்வொன்றாக அடுக்கி வைக்கவும். சுற்றி எண்ணெய் ஊற்றவும்.
- ஒரு புறம் வெந்தவுடன் திருப்பி போட்டு மறுபுறம் வேகவிடவும். இரு புறமும் சிவக்க பொரித்து எடுக்கவும்.
- அடுப்பை மிதமான தீயில் வைத்து நிதானமாக மொறு மொறுப்பாக பொரித்து எடுக்கவும். உடனே பரிமாறினால் கிரிஸ்பாக இருக்கும். பொரித்து வைத்து விட்டு சிறிது நேரம் கழித்து பரிமாறினால் சா.ஃ.ப்டாக டேஸ்டாக இருக்கும்.
- சுவையான கத்தரிக்காய் வறுவல் ரெடி.

# சைனஸ் பிரச்சனையை போக்கும் இயற்கை மருத்துவம்



- ஒரு வாணலியில் நல்லெண்ணெயை ஊற்றி, அதில் தும்பை பூக்களை போட்டு, காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். பின் அந்த எண்ணெயை வாரத்திற்கு ஒரு முறை தேய்த்து, வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்து வரவேண்டும். இதனால் அடிக்கடி வரும் தலை வலி மற்றும் நீர்க்கோர்வையால் ஏற்படும் தலைபாரம் போன்றவையும் குணமாகிவிடும்.
- தாய்ப்பாலில் சிறிது கராம்பை அரைத்து போட்டு, பேஸ்ட் போல் செய்து அதனை தலைக்கு பற்று போட்டால், சைனஸால் ஏற்படும் தலைவலி நீங்கும்.
- தலைக்கு குளித்தப் பின், சாம்பிராணி புகையை போட்டு, தலையை காயவைத்துக் கொள்வது போல், ஓமம், சிறிது மஞ்சள் போட்டு, அதனால் வரும் புகையை நுகர்ந்து கொண்டால், ஜலதோஷம், நீர்க் கோர்வை போன்றவை சரியாகும்.
- குப்பைமேனி, கீழாநெல்லி போன்ற செடிகளின் இலையை சாறு பிழிந்து, அந்த சாற்றின் அளவிற்கு நல்லெண்ணெயை கலந்து, சூடேற்றி வைத்துக் கொள்ள வேண்டும். பின் அந்த எண்ணெய் ஆறியதும், அதனை மூக்கினுள் விட்டால், நாள்பட்ட தலைவலி மற்றும் மூக்கினுள் ஏற்படும் குடைச்சல் போய்விடும்.
- கடுகு சிறிது, கஸ்தூரி மஞ்சள், சிறிது சாம்பிராணி ஆகியவற்றை பொடி செய்து, தண்ணீரில் கலந்து, படுக்கும்முன் நெற்றிக்குத் தடவி, காலையில் கழுவ வேண்டும். இல்லையென்றால் கிராம்பு, சுக்கு ஆகிய இரண்டையும் அரைத்து, நீரில் பேஸ்ட்போல் கலந்து, மூக்கு மற்றும் நெற்றியில் தடவவேண்டும். இதனால் நீர்க்கோர்வை, தலை பாரம், ஜலதோஷம் போன்றவை விரைவில் குணமாகும். இந்த இயற்கை முறைகளை பின்பற்றி சைனஸ்-ஆல் வரும் பிரச்சனையை வீட்டிலேயே சரிசெய்யலாம்.





# நான் உன்னை தேர்ந்தெடுத்தேன்

## இறைவார்த்தை :

எனக்குக் குருத்துவப்பணி புரிவதற்காக உன் சகோதரன் ஆரோனையும் அவன் புதல்வர் நாதாபு, அபிகூ, எலயாசர், இத்தாமர் ஆகியோரையும் இஸ்ரயேல் மக்கள் நடுவிலிருந்து அழைத்துவா. இவற்றால் உன் சகோதரன் ஆரோனையும் அவன் புதல்வர்களையும் நீ உடுத்துவாய். அவர்களுக்கு அருள்பொழிவு செய்து, அவர்களைத் திருநிலைப்படுத்தி அர்ப்பணிப்பாய். அவர்கள் எனக்கு குருத்துவப்பணி புரிவார்கள். (வி.ப 28:1,41)

“நீ ஆரோனையும் அவன் புதல்வரையும், அவர்கள் குருத்துவப் பொறுப்புகளை நிறைவேற்றுமாறு நியமனம் செய். ஆனால் வேறு எவனும் நெருங்கி வந்தால் அவன் கொல்லப்படுவான்”

“நீயும் உங்களோடிருக்கும் உன் புதல்வரும், உங்கள் குருத்துவத்திற்கு உரியதை, அதாவது பலிபீடம் தொடர்பான அனைத்தையும், தொங்கு திரைக்குள் இருப்பதையும் கவனித்துக்கொள்ளுங்கள். நீங்கள் பணிபுரியும்படி உங்கள் குருத்துவத்தையும் ஒரு கொடையாகவே தருகிறேன், அவற்றை நெருங்குகிற வேறு எவனும் கொல்லப்படுவான்”. (எண் 18:7)

“இஸ்ரயேல் மக்கள் மேல் என்றுமே சினம் இராதபடி திருஉறைவிடத்தின் கடமைகளையும் பலிபீடத்தின் கடமைகளையும் நீங்களே கவனித்துக்-கொள்ள வேண்டும்”. (எண் 18:5)

ஆண்டவர் மோசேயிடம் கூறியது: “நீ ஆரோனிடமும் அவன் புதல்வரிடமும் சொல்; நீங்கள் இஸ்ரயேல் மக்களுக்கு ஆசிகூற வேண்டிய முறை: “ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச்செய்து உன்மீது அருள் பொழிவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக!” இவ்வாறே அவர்கள் என் பெயரை இஸ்ரயேல் மக்களிடையே நிலைநாட்டுவர், நானும் அவர்களுக்கு ஆசி வழங்குவேன்”. (எண் 6:22-27)

“இவ்வாறு, குரு இத்தகைய பாவங்களில் ஒன்றைச் செய்தவருக்காகப் பாவக் கழுவாய் நிறைவேற்றுவாராக. அப்போது அவர் மன்னிப்புப்பெறுவார். எஞ்சியது உணவுப் படையலைப்போல குருவைச் சேரும்”. (வேலி 5:13)

இயேசு அங்கிருந்து சென்ற போது மத்தேயு என்பவர் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்ததைக் கண்டார் அவரிடம், “என்னைப் பின்பற்றி வா” என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். (மத் 9:9)

இயேசு கலிலேயக் கடலோரமாய் நடக்கும்-போது, சகோதரர் இருவரைக் கண்டார். ஒருவர் பேதுரு எனப்படும் சீமோன், மற்றவர் அவர் சகோதரரான அந்திரேயா. மீனவரான அவ்விருவரும் கடலில் வலைவீசிக் கொண்டிருந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, “என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். (மத் 4:18-20)

“நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்”. (யோவா 15:16)

அதற்கு ஆண்டவர் அவரிடம், “நீ செல். அவர் பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார்”. (தி.ப 9:15)

“தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன். மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்”. (எரே 1:5)

“யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?” என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்டேன். அதற்கு, “இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்” என்றேன். (எசா 6:8)

“சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?” என்று தம்மோடு பேசும் குரலொன்றைக் கேட்டார்.அதற்கு அவர், “ஆண்டவரே நீர் யார்?” எனக்கேட்டார். ஆண்டவர், “நீ துன்புறுத்தும் இயேசு நானே. நீ எழுந்து நகருக்குள் செல் நீ என்ன செய்யவேண்டும் என்பது அங்கே உனக்குச் சொல்லப்படும்” என்றார். (தி.ப 9:4-6)

## உவமை:

கணவன் மனைவி இருவருமே உலகைத் துறந்து சந்நியாசம் பூண்டனர். திருயாத்திரை கிளம்பி ஒவ்வொரு திருத்தலாமாகத் தரிசித்து வந்தனர். இருவரும் நடந்துக் கொண்டிருந்தனர். கணவன் வேகமாக நடந்து முன்னால் சென்றுகொண்டிருந்தான். அப்போது வழியிலே ஒரு வைரக் கல்லைக் கண்டான். தன் மனைவி பார்த்தால் பேராசையால் துறவைக் கைவிட்டு விடுவாளே எனப் பயந்து அவள் பார்ப்பதற்கு முன்பே பூமியைத் தோண்டி புதைத்து வைத்தான். அவன் அவ்வாறு செய்ததை மனைவி பார்த்து விட்டாள். உடனே கணவனைப் பார்த்துச் சொன்னாள்.

“உலகைத் துறந்து விட்டீர்கள். ஆனால் இன்னும் மண்ணுக்கும் பொன்னுக்கும் வித்தியாசம் பார்க்கிறீர்களே”.

# திருத்தந்தை பிரான்சிஸ் ஓர் இறைவாக்கினராக செயலாற்றுகிறார்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எகிப்தில் மேற்கொண்டுள்ள திருத்தூதுப் பயணம், அடிப்படைவாத போக்கிற்கு எதிராக, அனைத்து மதத்தினரையும், குறிப்பாக, ஷியா, சுன்னி பிரிவுகளைச் சேர்ந்த இஸ்லாமியர், மற்றும் கிறிஸ்தவர்களை ஒருங்கிணைக்கும் ஒரு முயற்சியாக அமையும் என்று, கல்தேய வழிபாட்டு முதுபெரும் தந்தை முதலாம் லூயிஸ் இரபேல் சாக்கோ அவர்கள் கூறினார்.

கெய்ரோ நகரில் இயங்கிவரும் அல் அசார் பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பன்னாட்டு அமைதி கருத்தரங்கில், திருத்தந்தையோடு சேர்ந்து உரையாற்ற அழைப்பு பெற்றுள்ள முதுபெரும் தந்தை சாக்கோ அவர்கள், Sir என்ற செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார். அமைதியை வளர்ப்பதில், மதங்களுக்கு மிகப்பெரும் பங்கு உள்ளதென்றும், மதங்களையும் அரசியலையும் இணைத்து மக்களைக் குழப்புவது நிறுத்தப்படவேண்டும் என்றும், முதுபெரும் தந்தை சாக்கோ அவர்கள் இப்பேட்டியில் குறிப்பிட்டார்.

மதங்களுக்கு இடையே உள்ள வேற்று-மைகளை பெரிதுபடுத்தாமல், ஒவ்வொரு மதத்திற்கும் உரிய மரியாதையை வழங்கி, திறந்த மனதுடன் உரையாடல்களில் பங்கேற்பதன் வழியாக, அடிப்படை-வாதத்தை நாம் வெல்ல முடியும் என்று முதுபெரும்தந்தை சாக்கோ அவர்கள் தன் பேட்டியில் வலியுறுத்திக் கூறினார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் மனதில் எழும் எண்ணங்களை, மக்களுடன் எளிய முறையில் பகிர்வதால், மக்களுக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் கொணரும் ஓர் இறைவாக்கினராக செயலாற்றுகிறார் என்று, முதுபெரும்தந்தை சாக்கோ அவர்கள் தன் பேட்டியில் குறிப்பிட்டார்.

# விமானப்பயணத்தில் செய்தியாளர்களுடன் பேசியத் திருத்தந்தை



அணு ஆயுதப் போர் ஒன்று உருவாகும் அளவு இன்றைய உலகில் மோதல்கள் எழுந்துள்ள வேளையில், ஐ.நா. அவைத் தலைவர்கள் உறுதியான தலைமைப் பொறுப்பை ஏற்று, உரையாடல் வழியில் அமைதியை உருவாக்க முயலவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எகிப்து நாட்டிலிருந்து திரும்பி வரும் விமானப் பயணத்தில் கூறினார்.

ஒவ்வொரு திருத்தூதுப் பயணத்தின் இறுதியிலும், திரும்பிவரும் வழியில், செய்தியாளர்களுடன் ஒரு நேர்காணலை மேற்கொள்ளும் திருத்தந்தை, இச்சனிக்கிழமை மாலை, கெய்ரோவிலிருந்து உரோம் நகருக்கு வரும் வழியில், செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

27 மணிநேரங்கள் நீடித்த எகிப்து பயணத்தின்போது, செய்தியாளர்கள் ஆற்றிய பணிகளுக்கு தன் நன்றியைக் கூறியத் திருத்தந்தை, தொடர்ந்து அவர்களோடு மேற்கொண்ட உரையாடல், 32 நிமிடங்கள் நீடித்தது.

தான் இதுவரை 18 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளதைக் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை, தான் ஒரு நாட்டுக்குச் செல்வதால், அந்நாட்டு அரசின் அனைத்து கொள்கைகளையும், செயல்பாடுகளையும் தான் ஏற்றுக்கொள்வதாக பொருள் இல்லை என்றும், ஒவ்வொரு நாட்டிலும் தான் கூறிய கருத்துக்கள், அரசியலுக்கு அப்பாற்பட்டு, நன்னெறி, விவிலிய விழுமியங்களின் அடிப்படையில் கூறப்பட்ட கருத்துக்கள் என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

காப்டிக் ஆர்த்தடாக்ஸ் சபைக்கும், கத்தோலிக்கத் திருஅவைக்கும் இடையே உருவான ஒப்பந்தம் குறித்து கேள்வி எழுந்தபோது, காப்டிக், இரஷ்ய, கத்தோலிக்க சமுதாயங்களுக்கிடையே உறவுகள் வளரவேண்டும் என்பதைக் குறித்தும், இச்சபைகளின் தலைவர்கள் அனைவர் மீதும், குறிப்பாக, காப்டிக் ஆர்த்தடாக்ஸ் தலைவர், 2ம் தவாத்ரோஸ் அவர்கள் மீதும், தனக்குள்ள பெரும் மதிப்பைக் குறித்தும், திருத்தந்தை பேசினார்.

வட கொரியாவைச் சுற்றி எழுந்துள்ள சூழல் தனக்கு கவலை தருகிறது என்றும், கருத்து வேறுபாடுகளும், மோதல்களும் எழும்போது, அவற்றிற்கு பேச்சு வார்த்தைகள் வழியே அரசியல் தீர்வுகள் காண முடியும் என்பதை தான் ஆழமாக நம்புவதாகவும் குறிப்பிட்டார், திருத்தந்தை.

அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசுத் தலைவர், டொனால்டு டிரம்ப் அவர்களைச் சந்திக்கும் திட்டம் எதுவும் உள்ளதா என்று எழுந்த கேள்விக்கு விடையளித்தபோது, உலகின் அனைத்து நாடுகளின் தலைவர்கள், தன்னைச் சந்திக்க விருப்பம் தெரிவிக்கும்போது, தான் அவர்களை வரவேற்க தயாராக இருப்பதாகக் கூறினார்.

**”பாவம், சாவு ஆகிய அடிமைத் தளைகளிலிருந்து, இயேசு கிறிஸ்து தன் உயிர்ப்பினால், நம்மை விடுவித்து, நித்திய வாழ்வின் வழியைத் திறந்துள்ளார்”**

**”இறைவன் நம்மைப்பற்றி கொண்டிருக்கும் கனவுகளின் அடிப்படையில், உன்னத செயல்களை ஆற்றுவதற்குரிய துணிவையும், கனவு காணும் திறமையையும், புனித யோசேப்பு, இளையோருக்கு வழங்குவாராக”**

'நான்கு நற்செய்திகளையும், தனித்துப் படிக்கும்போது இயேசுவின் வாழ்க்கையையும் பணிகளையும், வரலாற்றுக்கோர்வையாக அறிந்து கொள்வது எளிதன்று எனவே நான்கு நற்செய்திகளையும், தொகுத்து, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை சுலபமாகப் படித்து அறிய ஒரு சந்தர்ப்பம் இதோ. இயேசுவை ஆழமாக அறியவும், அவர் வாழ்ந்த விழுமியங்களை அறிந்து கொள்ளவும் இத் தொடரை தொடர்ந்து வாசித்து பயன்பெறுங்கள்




# உள்ளத்தை தொடும் போதனைகள்

வாழ்விற்கு புதிய வழிமுறைகள்

அதிகாரம் 01

## 12. செபத்தைப் பற்றி கற்பித்தல்

"நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும் போது யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால் மன்னித்து விடுங்கள்"



**மத் 6:5** நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக்காரரைப்போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக் கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்று விட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

**மத் 6:6** ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.

**மாற் 11:24** ஆகவே உங்களுக்குச் சொல்கிறேன் நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றைப் பெற்று விட்டீர்கள் என நம்புங்கள் நீங்கள் கேட்டபடியே நடக்கும்.

**மாற் 11:25** நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும்போது யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால், மன்னித்துவிடுங்கள்.

**மத் 7:7** கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்.

**மத் 7:8** ஏனெனில், கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும்.

**மத் 7:9** உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா?

**மத் 7:10** அல்லது, பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா?

**மத் 7:11** தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா!

**லூக் 11:8** எனினும் அவர் விடாப்பிடியாய்க் கதவைத் தட்டிக் கொண்டேயிருந்தால் அவர் தம் நண்பர் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும், அவரது தொல்லையின் பொருட்டாவது எழுந்து அவருக்குத் தேவையானதைக் கொடுப்பார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

**லூக் 11:9** "மேலும் நான் உங்களுக்குச் சொல்கிறேன் கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்.

**லூக் 11:10** ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும்.

**லூக் 11:11** பிள்ளை மீனைக் கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா?

**லூக் 11:12** முட்டையைக் கேட்டால் அவர் தேளைக் கொடுப்பாரா?

**லூக் 11:13** "தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி! "

**யோவா 4:7** அவருடைய சீடர் உணவு வாங்குவதற்காக நகருக்குள் சென்றிருந்தனர். சமாரியப் பெண் ஒருவர் தண்ணீர் மொள்ள வந்தார்.

**யோவா 4:8** இயேசு அவரிடம், "குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்" என்று கேட்டார்.

**யோவா 4:9** அச் சமாரியப் பெண் அவரிடம், "நீர் யூதர் நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?" என்று கேட்டார். ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# பாத்திமாவில் அன்னையின் முதல் காட்சி (1917)



எண்பது லட்சம் உயிர்களைக் கொள்ள கொண்ட முதல் உலகப் போரின் போது 13.05.1917இல் தேவதாய் போர்த்துக்கல் நாட்டில் உள்ள பாத்திமா என்னும் ஊருக்கு அருகில் மூன்று சிறுவர்களுக்கு தோன்றினாள். பலவித தொல்லைகளால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த உலகைக் காப்பாற்றும் வழிகளைக் காட்ட அன்னை வந்தாள். மக்கள் எண்ண முடியாத பாவங்களைச் செய்து கடவுளை மனம் நோகச் செய்கிறார்கள். மரியாயின் மாசற்ற இருதயத்திற்கும் நிந்தை வருவிக்கிறார்கள். மானிடர் எல்லோரும் தங்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைக்க வேண்டும். மேலும் பாவம் செய்யக்கூடாது. பாவிகளை மனம் திருப்ப செபிக்க வேண்டும். பரித்தியாகங்கள் செய்ய வேண்டும். பரித்தியாகங்கள் செய்யும்போது "ஓ என் இயேசுவே, நான் உம்மை நேசிப்பதாலும் பாவிகள் மனந்திரும்பவும், மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு இழைக்கப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாகவும் இந்த பரித்தியாகத்தை செய்கிறேன்" என்று சொல்ல வேண்டும். உலக சமாதானத்திற்காக பக்தியுடன் அடிக்கடி செபமாலை செபிக்க வேண்டும். ஓ என் இயேசுவே, எங்கள் பாவங்களை மன்னியும். நரக நெருப்பில் விழாமல் எங்களை காப்பாற்றும் எல்லா ஆன்மாக்களையும், சிறப்பாக உமது இரக்கம் யாருக்கு மிகத் தேவையோ அவர்களையும் மோட்சத்தில் சேர்த்தருளும்" என்று செபமாலையில் ஒவ்வொரு பத்து மணி செபத்திற்குப் பின்னும் சொல்ல வேண்டும். மரியாயின் மாசற்ற இருதயத்தின் மீது அனைவரும் பக்தி கொண்டிருக்க வேண்டும். ஆறுமுறை காட்சிகளின் போதும் அன்னை விடுத்த செய்தியின் சுருக்கம் இது.

சிந்தனை : செபமாலை செபித்ததின் பயனாக மனந்திரும்பாத பாவியை நான் கண்டதில்லை

(புனித கிளமன்ட்)

செபம் : மரியாயின் மாசற்ற இருதயமே, திருச்சபையையும், உலகத்தையும் காப்பாற்றும்

# வணக்க மாதாவே


ஆதியிலே இறைவன் அலகையின்
தலையை நசுக்கி அழித்திடவே! அருளிய வாக்கின்
அடையாளமானாய் அம்மா மரியே!

நீதியின் தேவனே நின்னைத் தேர்ந்தது
எங்கள் பாக்கியமே ~ நின் வழி பரிந்துரை எண்ணிய
தீடேற்றும் அருள் நிறை பாக்கியமே

சிமியோனின் வாக்கு எகிப்துக்கு ஓட்டம்
இயேசுவைத் தேடியது
சிலுவையைச் சுமக்கும் மக்களைக் கண்டந்த
சிலுவையின் கீழ் நின்றது
இமையெனக் காத்த மகனை மடி தாங்கி
கல்லறைக்கனுப்பியது இத்தனை துயருற்ற உமக்கெம்
வணக்கம் எங்கள் நன்யைக் காட்டுவது

ஆண்டவர் இயேசுவின் அத்தனை துயரிலும்
அம்மா உடனிருந்தாய்
அவரின் பாதையில் அணுவும் மாறாது
அமைதியாய் பின் தொடர்ந்தாய்
ஈன்றதில் தொடங்கி இறுதி வரைக்கும்
உம் வாழ்வே பெரும் கலக்கம்
இயேசு பிரானை எமக்களித்த
மாதாவே தனி வணக்கம்

ஆராதனையாம் ஆண்டவர்க்குரிய
அருள்பெற உயர் வணக்கம்



அன்னையுமக்கு
அடியவரளிப்பது
அன்பின் தனி வணக்கம்
தேனாதார் சிலர் திரித்துப்
பேசிட
குறை சொல்ல தலர்
வணக்கம்
தெய்வத் தாயும்மை
பிரித்துப் பார்த்திட
மனம் எப்படி இடம்
கொடுக்கும்

# புதிய குருவின் முதற் திருப்பலி



நீர்கொழும்பு கடற்கரைத் தெரு பங்கின் ஏத்துக்கால கிராமத்தின் காலஞ்சென்ற அன்டனி அமல்ராஜ், மரிய சுதர்மணி மிராண்டா தம்பதிகளின் கனிஸ்ட புதல்வன் அருட்பணி. ஜோசப் சுராஜ் பர்னாந்து அடிகளார் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் சித்திரை மாதம் 29ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பின் கடந்த 30ம் திகதி தனது கிராமமாகிய ஏத்துக்கால் தூய சில்வெஸ்டர் ஆலயத்தில் தனது முதல் திருப்பலியை நிறைவேற்றினார். இவருடைய குடும்பத்தில் இன்னும் பல தேவ அழைத்தல்களும் இருக்கின்றன. இவர் தனது குருத்துவ பயற்சிகளை கொழும்பு 14, தூய ஜோன் வியான்னி குருமடத்திலும், கண்டி தேசிய குருமடத்திலும் மேற்கொண்டார். இவர் தனது கிராம மக்களுடன் இணைந்து திருப்பிலி ஒப்புக்கொடுத்து தனது இறையாசீர்களை நிறைவாக வழங்கினார். இவருடைய குருத்துவ வாழ்விற்காக செபிப்போம்.

**தகவல் : சகோ. டிலோய்ட்சன் பர்னாந்து**



கொழும்பு செக்கடித்தெரு புனித அன்னம்மாள் வேளாங்கண்ணி பங்கு ஆரம்பமாகி 50வது ஆண்டில், அப்பங்கில் 25 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இறை இரக்க வழிபாடு கடந்த 23.04.2017 ஞாயிறன்று 25வது ஆண்டினை இறை இரக்கச் சபையினர் கொண்டாடினர். அன்றைய நிகழ்வில் திருப்பலியை முன்னாள் பங்குத்தந்தை அருட்தந்தை பீட்டர் சுபராஜ் அடிகளார் சிறப்பித்தார். திருப்பலி முடிவில் பங்குத்தந்தை ஆனந்தன் பர்னாந்து புள்ளே அடிகளார் இறை இரக்கச் சபையில் நீண்ட காலமாக இணைந்து பணி புரியும் திருமதி பினோலா அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி வாழ்த்துக் கூறினார். இந்நிகழ்வில் சில பகுதிகளை படத்தில் காணலாம்

**படம் மற்றும் தகவல் : டிக்சன் பர்னாந்து**

# ஆன்மா சாந்தி பெற செபிப்போம்.



"ஞானார்த்த பிரதீபய" ஊழியர் திரு. F. லியோ திசாநாயக்க அவர்கள் 23.04.2017 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் தலுகம, களனிய இடத்தை வசிப்பிடமாகக் கொண்டவர். மூன்று பிள்ளைகளின் தந்தையும் ஆவார். திரு லியோ அவர்கள் 1966ம் ஆண்டிலிருந்து ஒரு எழுத்துனராக, தனது திறமையையும் வெளிக்கொணரும் வகையில் பல்வேறு வகையான கவிதைகளையும், ஆக்கங்களையும் பாடசாலைப் பருவத்திலிருந்து "ஞானார்த்த பிரதீபய" சஞ்சிகைக்கு எழுதிவந்தார். இவர் புனித பிரான்சிஸ் கல்லூரி, டலுகம, புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை பாடசாலையின் பழைய மாணவனுமாவார். 1966ம் ஆண்டு பேராயர் அதிமேதகு ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை இயக்குனராக இருந்த வேளையிலிருந்து இவர் இறக்கும் வரையில் ஒரு சிறந்த ஊழியராக பணியாற்றி வந்தவர். இவரது சேவையை பாராட்டுவதோடு இவருடைய ஆன்மா இறைவனடியில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

# மட்டக்குளி தூய மரியாள் ஆலயத்தில் இறையிரக்க ஆண்டவர் பெருவிழா



கடந்த 23.04.2017ம் திகதியன்று மட்டக்குளி தூய மரியாள் ஆலயத்தின் இறையிரக்க பக்தி சபையினர், தங்கள் சபை ஆரம்பிக்கப்பட்டு 25வது ஆண்டு நிறைவு விழாவினை வெகுவிமரிசையாக கொண்டாடினார்கள். அன்றைய திருப்பலியை திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. அகஸ்டின் நவரட்ணம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். குறிப்பாக அன்றைய தினத்தில் இறைவனின் கருணையையும், அவருடைய அன்பையும் பற்றி விளக்கமாக மக்களுக்கு கொடுத்தார். இப்பங்கிலே 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது இன்னும் இப்பக்தி முயற்சியினை செய்து வருவது, தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதம் ஆகும். குறிப்பாக இந்த இறையிரக்க பக்தியினை இன்னுமாக பரப்புவதற்கு தங்களால் ஆன முயற்சிகளை தொடர்ந்தும் செய்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல் : திருமதி ஷோபனா ஜூலியன்**

## தேசிய பொது நிலையினர் ஞாயிறு - 14.05.2017

## புனித யோசேவாஸ் அடிகளாரின் மறைபரப்பு ஆர்வத்தை பின்பற்றி, பொது நிலையினர் நாமும் நற்செய்திக்கு சான்று பகர்வோம்.

**கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர் தந்தை அருட்பணி நாயகம் ரோய் கிளரன்ஸ் அடிகாரின் செய்தி**



இன்று தேசிய பொதுநிலையினர் ஞாயிறாகும். பொது நிலையினர் திருச்சபை வாழ்வில் மிக முக்கியமானவர்கள், என்பதை அடையாளப்படுத்துகின்ற முக்கியமான ஒரு நாளாகும். இந்நாள் பொதுநிலையினரை ஊக்கப்படுத்துகின்ற ஒரு நாளாக அமைவதோடு, அவர்கள் இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும் தனிப்பட்ட வாழ்வின் மீட்பராகவும் ஏற்று, தம் வாழ்வை புதுப்பித்து அவருக்கு பணிவிடை புரிய அழைக்கப்படுகின்ற நாளாகவும் அமைகின்றது என நான் நம்புகிறேன்.

கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு திருமுழுக்கின் வழியாக அவரோடு ஓருடலாக்கப்படுவோர் இறைமக்களாவர். இதனால் அவர்கள் தங்களுக்கே உரிய வகையில் கிறிஸ்துவின் குருத்துவ பணியிலும். இறைவாக்கு பணியிலும் வழிநடத்தும் பணியிலும் பங்கேற்கின்றனர். கடவுள் திருச்சபையிடம் ஒப்படைத்த பணியை நிறைவேற்ற அழைக்கப்படுகின்றனர். கடவுளின் பிள்ளைகள் என்னும் மாண்பை கொண்டுள்ளதால் அவர்களிடையே உண்மையான சமத்துவம் நிலவுகின்றது. (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி சுருக்கம் #871). ஆகவே பொது நிலையினரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு, கிறிஸ்து நம்மீதும் படைப்பின் மீதும் அன்பு கூர்ந்தது போல் தம் வாழ்வை அர்ப்பணித்து வாஞ்சையுடன் பணிபுரிய அழைக்கப்படுகின்றனர்.

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் கூறியது போல திருமுழுக்கின் ஊடாக தாம் பெற்றுக் கொண்ட அடையாளத்தை (மறவாது) நினைவிற்கொண்டு, அழைத்தலுக்கேற்ப ஆளுமையில் முதிர்ச்சி பெற்று, நவீன உலகில் திருச்சபையின் பணியை முன்னெடுத்துச் செயல்பட முன்வர வேண்டும். அத்துடன் தூய ஆவியின் வல்லமையும், ஞானமும் நிறைந்த (தி. தூ. ப 6:3) பொது நிலையினர் திருச்சபையின் பணிகளை முன்னெடுத்து தங்களால் இயன்ற அனைத்து வழிகளிலும் உதவி செய்ய ஆர்வம் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அப்போஸ்தலராம் புனித யோசேவாஸ் அடிகளாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ்வருடத்தில் இப்பொதுநிலையினர் ஞாயிறானது மிக முக்கியமான விழுமியங்களையும், பண்புகளையும் எடுத்துரைக்கின்றது. இலங்கை திருச்சபைக்கு சவால் நிறைந்ததாய் அமைந்திருந்த ஒல்லாந்தார் ஆட்சிக்காலத்தில் யோசேவாஸ் அடிகளார் தம் பணியை சிறப்பாக முன்னெடுக்க அன்றைய பொதுநிலையினரின் தளராத விசுவாசமும், பிரமாணிக்கமும் வலுவூட்டுவனவாக அமைந்தது என்றால் மிகையாகாது. யோசேவாஸ் அடிகளார் இலங்கையில் கால்பதித்தபோது சுமார் மூன்று தசாப்தங்களாக குருக்கள், துறவியர் இல்லாத பொதுநிலையினரால் முன்னெடுக்கப்பட்ட திருச்சபையையே அவர் கண்டார். அதனால் பொதுநிலையினரில் நம்பிக்கை கொண்டவராக அவரது மறைதூது பணியில் அவர்களையும் இணைத்துக் கொண்டார். அத்துடன் பொதுநிலையினரால் முன்னெடுக்கக்கூடிய கடமைகளையும், பொறுப்புக்களையும் பகிர்ந்து கொண்டார். இவ்வகையில் முழு இலங்கைத் திருச்சபைக்கும் தம்பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு நம் முன்னோரின் அர்ப்பணம் நிறைந்த ஒத்துழைப்பு அடிகளாருக்கு சக்தியாக அமைந்தது.

திருச்சபையில் பலவகையான சேவைகளும் திருத்தொண்டுகளும் இருந்தாலும் கூட மறைதூதுபணி என்பது ஒன்றே. கிறிஸ்து தம் பெயராலும் வல்லமையாலும் கற்பித்தல், புனிதப்படுத்தல், ஆட்சி செய்தல் எனும் முப்பெரும் பணிகளை அப்போஸ்தர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் வழங்கினார்.

இவ்வாறே பொதுநிலையினரும் கிறிஸ்துவின் அரச, குருத்துவ இறைவாக்குப் பணிகளை ஏற்று உலகிலும் திருச்சபையிலும் ஏனைய இறைமக்களோடு




இணைந்து பணிபுரிய அழைக்கப்படுகின்றனர். ஆகவே சமயத்திற்கும் மக்களுக்குமிடையில் தொடர்பற்ற (சமய சார்பற்ற சமுதாயம்) நிலைமை உருவாகி வரும் இக்காலப்பகுதியில் குருக்கள், பொதுநிலையினரின் திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை இறைபணியில் உள்வாங்கி இறையரசை கட்டியெழுப்பவும் அவர்களை வலுவூட்டவும் முன்வர வேண்டும். அவ்வாறே பொதுநிலையினரும் தாம் திருமுழுக்கினூடாகப் பெற்றுக் கொண்ட அழைத்தலுக்கேற்ப குருக்களோடு இணைந்து இறையரசைக் கட்டியெழுப்பி கிறிஸ்துவின் நற்செய்திக்கு சான்று பகர்ந்திட அழைக்கப்படுகின்றனர்.


# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

COLOMBO CATHOLIC PRESS

உங்களது அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

**நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்), நவீன பிரதியாக்கம் (டுப்ளோ), வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தலும், ஸ்கேன் எடுத்தலும், பலவர்ணங்களின் டுப்ளோ பிரதிகள் எடுத்தல், அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்**





<u>தொடர்புகொள்ளுங்கள்</u>

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.co

## COLOMBO CATHOLIC BOOKSHOP

## GIFT VOUCHERS



Everything Catholic Under One Roof

உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு Voucher ஒன்றினை பரிசளித்து அவர்களின் விருப்பத்திற்கு இடமளியுங்கள்

ரூபா 500/- 1000/- 2000/- Voucherர்களை தற்போது பெற்றுக்கொள்ளலாம்

கொழும்பு கத்தோலிக்க புத்தக நிலையம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை – கொழும்பு – 08
தொ.பே +94 11 4373869 colombocatholicbookshop@gmail.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்